விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 29 ஞாயிற்றுக்கிழமை (15.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361

## கென்ய ஜனாதிபதிக்கு இலங்கை ஆதரவு!

### நேரில் சந்தித்த ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கென்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருக்கும் உறவுகள் தொடர்பில் பாராட்டுக்களை தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கென்யா இலங்கைக்கு சர்வதேச ரீதியில் வழங்கி வரும் ஆதரவுக்கு நன்றி கூறியுள்ளார்.

கென்ய ஜனாதிபதி உகுரு கென்யாட்டாவுக்கு நேற்று நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இலங்கையும் கென்யாவுக்கு பயனுள்ள பங்காளிகளாக இருக்க முடியும்.

வளர்முக நாடுகளின் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி, எமது தேவைகளை சமமாக பகிர்ந்து, உலகமயமாக்கலை உறுதிசெய்ய வேண்டும். பொதுவான காரணத்தின் அடிப்படையில் அதனை நோக்கி நாம் பணியாற்றலாம்.

இனிவரும்

23-ம் பக்கம் பார்க்க

## உடனடியாக அரசியல் கைதிகளை விடுவிக்கும் சாத்தியமில்லை!

### அமைச்சர் வாசு தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் கைதிகளுக்கிடையிலும் குற்றமிழைத்தவர்கள் உள்ளனர். எனவே, அவர்களைஉடனடியாகவிடுதலை செய்வது தென்பது முடியாதது. எனவே இவர்கள் சரியாக இனங்காணப்பட்டதன் பின்னரே இது குறித்து தீர்மானங்களை எடுக்க முடியும் என மொழிகள் மற்றும நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அரசு அமுல்படுத்த வேண்டும் என கடந்த புதன் கிழமை ஊடகவியலாளர் சந்தியின்போது வலியுறுத்தியிருந்தார். இதற்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் தொடர்பில் என்னால் எதுவும் கூற முடியாது. ஆனால், ஆண்டகை கூறியிருப்பதை நாமும்

23-ம் பக்கம் பார்க்க

## பிரதமர் பதவிக்கு அமைச்சர் பீரிஸ்?



(கொழும்பு)

பிரதமர் டி.எம். ஜயரத்னவை அந்த பதவியில்இருந்து நீக்கி விட்டு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை பிரதமராக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹெரோயின் போதைப் பொருள் கடத்தி வரப்பட்ட கொள்கலன்களை விடுவிக்க சுங்க திணைக்களத்திற்கு உத்தரவிட்டதாக அரசாங்கம் மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டே ஜயரத்னவை பதவியில் இருந்து நீக்குவதற்கான காரணம் எனவும் அந்த தகவல்கள் தெரி

23-ம் பக்கம் பார்க்க

# சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை விசாரிக்க முடியாது

### அதன் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

*இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும் அதிகாரம் சர்வதேச நீதிமன்றத்திற்கு இல்லை என அந்த நீதிமன்றத்தின் வழக்குகள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் அஹமட் பா தெரிவித்துள்ளார்.*

*இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேச நீதிமன்றம் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்து அவர் இதனை கூறியுள்ளார்.*

அமெரிக்காவில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் கருத்தரங்கொன்றில் அமெரிக்காவின் ஹூவர் அமைப்பின் பிரதிநிதியான துங்குவரதராஜன் இந்த கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் இணக்கப்பாடுகளில் கையெழுத்திடவில்லை என்பதால், நீதிமன்றத்தினால் நடவடிக்கை எடுக்க முடியாது என அஹமட் பா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட இனப்படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி ஹெடாட சீன், அஹமட் பாவின் கருத்தை ஆமோதித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க குறித்த ரோம் உடன்பாட்டில் கைச்சாத்திடுவதை நிராகரித்தார். எனினும் 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இந்த உடன்பாட்டில் கையெழுத்திட மறுத்ததாக ஞாயிறு திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

அதேவேளை வெளி நாடுகளில் உள்ள புலிகளின் உறுப்பினர்களான உருத்திரகுமாரன்

23-ம் பக்கம் பார்க்க

## கோப்பாயில் மோட்டார் குண்டு

(கொழும்பு)

யாழ். கோப்பாய் வசந்தபுரம் பகுதியிலிருந்து நேற்றுக் காலை மோட்டார் குண்டு ஒன்றும் துப்பாக்கி ரவைகளும் கண்டெடுக்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் முன்னால் உள்ள தோட்டக் காணியினுள் குண்டுகள் இருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலினையடுத்து அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார் 80 மில்லி

23-ம் பக்கம் பார்க்க


## ஹயஸ் மோதி வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் ஹயஸ் வாகனமும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.15 மணியளவில் உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் மானிப்பாய் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அரசடி ஒழுங்கை



ஊரெழு மேற்கு சுன்னாகத்தினை சேர்ந்த குமாரசாமி பாலசுப்பிரமணியம்(வயது 73)என்றஇரண்டு பிள்ளையின் தந்தையே பலியானவராவார்.

23-ம் பக்கம் பார்க்க

up to 25% CONDITIONS APPLY
Special offer
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
(C-5761) Tel:- 021 222 0033 / 021 222 4777

# காணாமல் போனோர்களின் உறவுகளுக்கு நட்ட ஈடு!

### ஜனாதிபதி ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்படாவிட்டால், அவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு அரசாங்கத்திடம் பரிந்துரை செய்யவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் காணாமல்போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளினால் காணாமல்போகச் செய்யப்பட்டதாகக் கூறப்படும் 148 பேர் தொடர்பான முறைப்பாடுகளை நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பெற்றுக்கொண்ட நிலையில், ஊடகங்களிடம் பேசும்போது ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம இதுபற்றி கூறினார்.

"காணாமல்போனவர்களை கண்டுபிடிக்க முடியாமல் போனால், அவர்களின் உறவினர்களுக்கு, அவர்களில் தங்கி வாழ்ந்தவர்களுக்கு இழப்பீடு கொடுக்குமாறு நாங்கள் அரசாங்கத்திடம் பரிந்துரை செய்வோம்.

23-ம் பக்கம் பார்க்க

## பாக். கடற்படைத் தளபதி கோத்தபாயவுடன் பேச்சு

(கொழும்பு)

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் முஹமட் அசிவ் சண்டிலா நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாலை இலங்கை படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சு

23-ம் பக்கம் பார்க்க

## ஐ.நாவுக்கு விளக்கமளிக்க ஜெனிவா செல்கிறார் லலித்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை விளக்கம் அளிக்கவுள்ளது.

இதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க அடுத்த மாதம் ஜெனிவாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்

23-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## தேசிய அடையாள அட்டைக்கு

# மதம் சார்ந்த ஆடையில் புகைப்படம் எடுக்கத்தடை

(மட்டக்களப்பு)

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் புதிதாக வழங்கப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்பவர்கள், மதம் மற்றும் இனத்தை பிரதிபலிக்கும் வகையில புகைப்படம் எடுக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான அடிப்படையில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்குமாயின் ஆள் அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது என ஆட்பதிவு திணைக்களத்தின் பொது ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத் குமார தெரிவித்தார்.

மட்டக்களப்பு - கல்லடியில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக வழங்கப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் முஸ்லிம்கள், கிறிஸ்தவ அருட்தந்தை மற்றும் அருட்சகோதரிகள் ஆகியோர் தமது மதத்தை பிரதிபலிக்கும் வகையில், தொப்பி மற்றும பர்தா அணிந்து புகைப்படம் எடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.(எ-11)

# பிராந்திய அபிவிருத்திக்கு யாழ்.பல்கலைக்கழகம் உதவும்

## துணைவேந்தர் தெரிவிப்பு

பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தன்னாலான பணிகளை மேற்கொள்ளும் என யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியா வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று மு.ப 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், யாழ்.பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் தொடர்பில் வடக்கு மாகாண சபைக்கு தெரியப்படுத்தி அதன்மூலம் வடக்கில் வறுமையீனத்தினை ஏற்படுத்த பல்கலை சமூகம் தயாராகவுள்ளதா? என ஊடகவியலாளர்களினால் கேள்வி யெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் துணைவேந்தா மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமுதாயத்தினை நல்வழிப்படுத்துவதே ஒரு பல்கலைக்கழகத்தினுடைய நோக்கமாகும். அதனையே நாமும்செய்து வருகின்றோம்.

அந்த வகையில் வடக்கு மாகாண சபைக்கு எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளினை வழங்கி எமது சமூகத்தினை முன்னெற்றுவதற்கும் அவர்களினை வழிநடத்துவதற்கும் மாகாண சபையுடன் இணைந்து செயற்பட தயாராகவே உள்ளோம்.

மாகாண சபையின் வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னதாகவே மாகாண சபைக்கு ஆய்வுகளினை வழங்கி அதற்கேற்ப மாகாண சபையினது வரவு செலவுத்திட்ட த்தினை வரைய முடியுமா என்பது தொடர்பிலும ஆராய்வதற்கு தீமானித்திருந்தோம்.

குறிப்பாக 5 வருட நீண்டகால திட்டமொன்று வடக்கு மாகாண சபைக்கு அவசியமானதாகும்.

வடக்கு மாகாணத்தில் தற்போது என்ன பிரச்சினை உள்ளது? அதனை எவ்வாறு இனங்காண்பது? இனங்கண்ட பின்னர் அதனை எவ்வாறு தீர்ப்பது? என்பவை தொடாபில் கண்டறியப்படல் வேண்டும்.

எதிர்காலத்தில் வடக்கு மாகாண சபையின் குறுகிய கால நீண்டகால செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்படல் வேண்டும்.

இதற்கு பல்கலை சமூகம் மட்டுமல்ல அனைத்து மட்டத்தினரும் பணிபுரிய வேண்டும் என்றார். (எ-4)


## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் 7-ம் நாள் விழா



ஏழ் பிறப்புக்களிற்கும்
இனிக்கும் பரம்பொருளை
இன்பமான இறைவனை
இணையற்ற எம் சிவனை
சித்தமலம் அறுத்து
சிவமாக்கி எமை
ஆண்டவனை அண்ட
சராசரத்தை அடக்கும் அருள்
வடிவை ஆனந்த வடிவினை
ஆன்மாவைத் தொட்டவனை,
பாரொடு விண்ணாய் பரந்து
நின்ற பரம்பொருளை,
இதயத்தால்
வணங்குகின்றோம்,
இயன்றவரை அருள் தருக.
காரை.S.கெங்காதரன்

அனுசரணை
சிவகணேசன் ஸ்ரோர்ஸ்
பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(C-5777)


# நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்னாபிரிக்க விடுதலை வீரன் நெல்சன் மண்டேலாவின் நினைவு அஞ்சலி நிகழ்வினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுஷ்டிக்கவுள்ளது.

இவ் அஞ்சலி நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலக முன்றலில் இடம் பெறவுள்ளது.

அஞ்சலி நிகழ்வு தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளதாவது;

தென்னாபிரிக்காவில் கறுப்பு இனமனித குலம் நிறபேதங்காட்டி அடக்கி ஒடுக்கப்பட்டு ஆட்சியுரிமை மறுக்கப்பட்ட காலத்தில் மகாத்மா காந்தி முதல் நெல்சன் மண்டேலா வரை போராட்டங்கள் இடம் பெற்று வந்துள்ளன.

மாமனிதன் நெல்சன் மண்டேலா பயங்கரவாதியென பட்டம் சூட்டப்பட்டதன் பின் 23 வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர். தென்னா பிரிக்க விடுதலைப் போராட்டத்தில் தலைமை தாங்கி நாடு விடுதலை பெற்றபோது மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் அவர் உயிர் பிரிந்த செய்தி மனித குலத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது.

இலங்கையில் விடுதலைக்காக போராடும் தமிழப் பேசும் மக்கள் தங்கள் விசுவாசமிக்க அஞ்சலியை அர்ப்பணம செய்கின்றனர்.

அனைவரும் இந்த அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம் என உள்ளது. (செ-4)


## மானிப்பாயில் இயங்கும் கணனி நிறுவனத்திற்கு ஆட்கள் தேவை

- Computer Teacher
- Computer Hardware Technician
- Administrative Officer

20.12.2013 திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்
Email: msdc_manipay@yahoo.com
Tel. No:- 077 2487082, 021 2256165

Micro System Development Centre
Jaffna Road, Manipay (4859)



## இலவச அழகுக் கலைப் பயிற்சி

★ நிபந்தனைக்குட்பட்டது



சுவீடன் நாட்டு நிறுவனத்தால் 590/= பதிவுக் கட்டணத்துடன் Facial, Whiting Facial, Face Massage, Gold Facial, Diamond Facial Eye Brow, Shape, Fruit Facial, Bleaching, Hair Cut Pedicure, Hair Ironing, Manicure, Hair Curling, Bridal Make Up, Nail Art, Hair Stayle, French Manicure, Pimple Treatment, Mehindi, Saree Stayle எனப் பல பயிற்சிகள் செய்முறை விளக்கத்துடன் ஒரு மாத, 3 மாத பிரிவுகளாக நடைபெற்று பயிற்சி முடிவில் சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தியாவில் சிறப்புப் பெற்ற ஆசிரியரினால் சாறி மற்றும் பஞ்சாபியில் முத்து, சீகுன்ஸ், கல்லு, நூல் ஆகியவற்றை பயன்படுத்தி வேர்க்கிங் செய்யப்படும் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முகப்பரு, கரும்புள்ளி, கண் கருவளையம், பித்த வெடிப்பு, முடிஉதிர்வு, உடல்எடை குறைய போன்ற பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பக்க விளைவுகளற்ற 100% உத்தரவாதமுடைய பால்மா மற்றும் கிறீம் வகைகள் விற்பனைக்கு உண்டு



**காலம்: 18.12.2013**

**நேரம்: 10.00 மணி**

தொடர்புகளுக்கு: 077-3686038/077-8848666

ஒறிப்பிளேம் யாழ் கிளை
187/30, யூனியன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்தி அருகாமை)
(C-4856)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815,021 567 1540
Email : valampurii@yahoo.com, Valampurijaffna@gmail.com



## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

17.12.2013 முதல் 21.12.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
(C-5776)



## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829 (சி-5781)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER
(C-5741)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து துறையை மேம்படுத்த 2 ஆயிரம் பேருந்துகள் இறக்குமதி

## போக்குவரத்து அமைச்சர் பாராளுமன்றில் தெரிவிப்பு

இலங்கை போக்குவரத்து சபைக்கு மேலும 2ஆயிரம் பேருந்துகளை இறக்குமதி செய்து அரச போக்குவரத்துத் துறையைப் பலப்படுத்தத தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சின் வரவுசெலவுத் திடடம் மீதான குழுநிலை விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதற்கான நிதி இம்முறை வரவு செலவுத் திடடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. பேருந்து டிக்கெட் பண மோசடிகளைத் தடுக்கும் வகையில் முற்கொடுபபனவு அட்டை (ப்ரிபைட் காட) முறையை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அமைசசர் தெரிவித்தார்.

டிக்கெட் மோசடியினால் ஒரு டிப்போவில் சுமார் 50 ஆயிரம் ரூபா வரை நட்டத்தை எதிர கொள்ள நேரிடுவதாக குறிப்பிட்ட அமைச்சர், பயணிகளுக்குச் சேர வேண்டிய மிகுதிப் பணம் கிடைக்காமை உட்பட அசௌகரியங்களுக்கு நிவர்த்தியாக இந்த புதிய திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

புகையிரத சேவை தற்போது மிக முன்னேற்றமடைந்துள்ளது. பெரும்பாலான மக்கள் தற்போது புகையிரதத்திலேயே பயணம் செய்கின்றனர். சிறந்த சேவை, குறைந்த கட்டணமே இதற்குக் காரணமாகும். இதனால் பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

மதவாச்சிக்கும் காங்கேசன்துறைக்குமான புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டு தற்போது மடுவரை புகையிரத சேவை இடம்பெறுகிறது. காங்கேசன்துறைக்கான புகையிரத சேவையின் முதற்கட்டமாக கிளிநொச்சி வரை தற்போது புகையிரத சேவை நடைபெறுகிறது.

இதுவரை ஆட்சியிலிருந்த எந்த அரசாங்கமும் ஒரு அங்குலமாவது புகையிரத பாதையை நிர்மாணித்ததில்லை. தற்போது அரசாங்கம் வடக்குக்கு மட்டுமன்றி தெற்கில் மாததறையிலிருந்து பெலியத்தை வரையிலான புகையிரத பாதையும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கம் நல்லவற்றைச் செய்யும் போது அதனை எதிர்க் கட்சியினர் நன்மையாகப் பேச வேண்டும். குறைகள் எங்கும் உள்ளன. தவறுகள் எவராலும் நடக்க முடியும். எனினும் நல்லவற்றை அரசாங்கம் செய்யும் போது அதனை எதிர்க்கட்சி விமர்சிக்கக்கூடாது.

நாம் செய்வது 100:100 நல்லது என நாம் ஒருபோதும் கூறவில்லை. எனினும் சிறந்த போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு நாம் முடிந்தளவு முயற்சித்துள்ளோம்.

இ.போ.ச. துறையில் குறைபாடுகள் உள்ளன. எனினும் ஐ.தே.க. காலத்தில் அதனை விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரச போக்குவரத்துத் துறையை அழிக்க முற்பட்டது ஐ.தே.கட்சியே. நாங்கள் அதனை மீளக் கட்டியெழுப்பி வருகிறோம் என்றார். (செ-2)

# சிறைச்சாலைகள் திணைக்களத்தில் 700 தொழில் வெற்றிடங்கள்

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கான அதிகாரிகளை நியமிப்பது தொடர்பில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது சிறைச்சாலைகள் திணைக்களத்தில் 700இற்கும் அதிகமான அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றிடம் காரணமாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செயற்பாடுகள் பிரச்சினைக்குள்ளாகியுள்ளன.

விசேடமாக கைதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் கடமையாற்றுவதற்கான அதிகாரிகள் இல்லாமை பெரும் பிரச்சினையாகவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெற்றிடங்களுக்கான புதியவர்களை நியமிப்பது தொடர்பில் அமைச்சரவை அனுமதியை பெறுவதற்கான யோசனையை எதிர்வரும் வாரத்தில் முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (செ-2)

# ஹெரோயினுடன் மூவர் கைது



ஹிக்கடுவையில் சுமார் 10 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது ஹெரோயின் வைத்திருந்த சந்தேநபர்கள் மூவரும் பொலிஸாரால் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கு பிரதேசத்தில் பெருந்தொகையான ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ள சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2)

# பாத யாத்திரை

திருவெம்பாவையை முன்னிட்டு இந்து மகாசபையினரால் பாத யாத்திரை நாளை திங்கட்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது.

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் இப்பாதயாத்திரை காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் ஆலயத்துடன் நிறைவடையவுள்ளது. (செ-9)

# வாரம் ஒரு தகவல்

## விஷப்பரீட்சை

"சேர்... உங்களுக்கு என்ன ஆச்சு?"

"என்ன சொல்றீங்க?"

"கல்யாண மண்டபத்துக்கு வந்தீங்க... சரி; முதல் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டீங்க... சரி; சாப்பிட்டு வெற்றிலை, பாக்கு போட்டீங்க... சரி; திடீரென்று பைத்தியம் பிடித்தது மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் இப்படி ஓடி வாறீங்களே என்ன விடயம்?"

"ஹி! அதுவா? எனக்குத் தேனீயைக் கண்டால் பயம்! கொட்டினால் வலி தாங்க முடியாது. அங்கே பந்தல் முகப்பில் நின்று கொண்டிருந்தபோது ஒரு தேனீ வந்து என் முகத்துக்கு நேராக பறந்ததைப் பார்த்துவிட்டேன். அதுதான் பறந்து வந்துவிட்டேன்."

"தேனீ கொட்டினால் வாதநோய்க்கு நல்லது சேர்"

"அப்படித்தான் சொல்வது வழக்கம். அது உண்மையா?"

"லண்டன் விஞ்ஞானிகள் தேனீ விஷத்திலிருந்து Peptide 401 என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறார்களே"

"அப்படியா?"

"ஆமாம். மூட்டுவலிக்கு கார்டிசோன் மாதிரி சில மருந்துகளைக் கொடுப்பது வழக்கம். அதையெல்லாம்விட இது நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதாம்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி. அதற்காக தேனீயைக் கூப்பிட்டுக் கொட்டு என்று சொல்லும் அளவுக்கு நமக்குத் துணிச்சல் கிடையாது சேர்."

"இருந்தாலும் நீங்கள் இப்படிப் பயப்படக்கூடாது சேர். அங்கே கல்யாண வீட்டில் என்னமோ ஏதோ என்று எல்லோரும் பயந்துவிட்டார்கள். என்ன வேகமாக ஓடி வந்துவிட்டீர்கள்..."

"சரி... நான் தான் அப்படி ஓடி வந்தேன். நீங்கள் ஏன் பின்னால் இப்படி ஓடிவரவேண்டும்?"

"நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது. அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

15.12.2013
(கார்த்திகை 29, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 12.00 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 9.22 மணிவரை
இராகுகாலம் 4.51 - 6.21 மணிவரை
சுபநேரம் 9.21 - 10.51 மணிவரை
கார்த்திகை விரதம்

**மேடம்** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இறை நம்பிக்கை கூடும்.

**இடபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** ஆறுமுகப் பெருமானை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள், அன்பு நண்பர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**சிங்கம்** சந்தேசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புகள் கரையக்கூடிய வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** தேகநலனில் உற்சாகம் பிறக்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கடன் சுமை குறைய நடவடிக்கை எடுப்பீர்கள், அரசியலில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்** எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறுவர், நீண்ட நாளைய கோரிக்கைகள் கைகூடும்.

**கும்பம்** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரும் நாள், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் சந்திப்பு அதிகரிக்கும்.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| வகைகள் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 - 90 | 100 | 120 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 | 80 |
| தக்காளி | 30 | 60 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 40 |
| கரட் | 40 | 20 | 70 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 | 50 |
| புடோல் | 20 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 40 | 25 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 - 220 | 200 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 100 | 170 | 110 | 120 |
| பாகற்காய் | 120 | 80 | 40 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 25 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 50 |
| பயற்றங்காய் | 120 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 60 | 50 | 70 | 120 |
| பீற்றூட் | - | 40 | 30 | 100 |
| கறிமிளகாய் | 160 | 150 | 110 | 140 |
| முருங்கைக்காய் | - | 80 | 100 | 200 |
| போஞ்சி | 160 | 130 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 25 | 35- |
| தேசிக்காய் | 80 - 100 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 50 | 50 | 30 | 35 - 45 |
| இராசவள்ளி | 160 | 160 | - | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையினால் 59 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.


இதன்படி, முதலாம் நாள் நிகழ்வினை இன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையினை சபைத்தலைவர் மு.சு.வேலாயுதம்பிள்ளை ஆற்றவுள்ளார்.

நிகழ்வில், மாலை 2 மணிக்கு மணிவாசகர் திருவுருவப் படமும் திருவாசக திருமுறை ஊர்வலம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து, வெற்றியீட்டிய மாணவர்களின் பேச்சு, பண்ணிசை நிகழ்வுகளும் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளின் ''மாற்ற மாம் வையகம்'' எனும் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

பரிசில்களை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வழங்கவுள்ளார். (அ-9)




# யாழ்.பல்கலையில் சர்வதேச ஆய்வரங்கு

## ஊடக சந்திப்பில் பேராசிரியர் வசந்தி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தில் சமகால முகாமைத்துவம் என்ற எண்ணக் கருவின் வகையில் முதலாவது சர்வதேச ஆய்வரங்கொன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் சர்வதேச ஆய்வரங்கு தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகமொன்று சமூகத்துக்கான அறிவியல் பங்களிப்பினை வழங்க வேண்டுமென்பது பொதுவான எதிர்பார்ப்பாகும். பல்கல்லைக்கழகங்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவது மற்றும் சமூகத்துடன் ஒன்றித்த வகையிலான பங்களிப்புகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நிலை காணப்படுகிறது.

இதனடிப்படையில் அறிவி யல் விருத்திக்கு ஆய்வுகள் மேற்கொள்வது முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். இவ்வாறான ஆய்வு முயற்சிகளினூடாக பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிர்வாக முகாமைத்துவ ரீதியில் நிறுவனங்களை வலுப்படுத்த திட்டங்கள் அல்லது கொள்கைகளை வகுக்க இவ் ஆய்வரங்கு பங்களிப்புச் செய்யும் என்பது திண்ணம்.

இதனடிப்படையில் சமகால முகாமைத்துவம் என்ற எண்ணக்கருவின் வகையில் முதலாவது ஆய்வரங்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்றது. இது வருடாவருடம் இவ்வடிப்படையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும். இச்சமகால முகாமைத்துவ ஆய்வரங்கு நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கிய மனித வளத்தை வலுவூட்டல் என்ற பொருளை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்படுகின்றது. இவ் ஆய்வரங்கிற்கான ஆய்வுக் கட்டுரைகள் பின்வரும் உப தலைப்புக்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

கணக்கீடும் நிதியும் சுற்றுலாத்துறையும் விருந்தோம்பலும் மற்றும் நிகழ்வு முகாமை சந்தைப்படுத்தலும் விநியோக சங்கிலி முகாமைத்துவமும் வங்கியியலும் காப்புறுதியும் மனிதவள அபிவிருத்தி வணிகமும் சட்டச் சூழலும் தந்திரோபாய முகாமைத்துவம், வணிகப் பொருளியல் முயற்சியாண்மையும் செயற்பாட்டு முகாமைத்துவமும் பிராந்திய மற்றும் சமூகத் திட்டமிடல், சர்வதேச வியாபாரமும் நிதியும் கலாசாரமும் பொறிமுறைகளும் நகர முகாமைத்துவம் , தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும் செயற்பாட்டு ஆய்வும் என்ற உபதலைப்பிலான ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

இவ் ஆய்வரங்கிற்கான காலவரையறையாக ஆய்வுச்சுருக்கம் கையளிப்பு டிசெம்பர் 25,2013 ஆய்வுச்சுருக்கம் ஏற்பறிப்பு டிசெம்பர் 31, 2013,ஆய்வுக்கட்டுரை கையளி ப்பு ஜனவரி 15, 2014 ஆய்வுக்கட்டுரை ஏற்பறிவிப்பு பெப்ரவரி 15, 2014 ஆய்வரங்கு மார்ச் 14, 15, 2014 என்ற திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, ஆய்வரங்கு தலைவர் ம.கருணாதி ஆகியோரையும் 021222 3610, 0777448352 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்பு கொள்ள முடியும்.

இதற்கென ICCMUJ@gmail.com, icc2014@jfn.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரியும் www.jfn.ac.lk/iccm2014 என்ற இணையத்தளமும் பிரத்தியேமாக வடிவமைக்கப்பட்டுள்ளன்.

சமகால முகாமைத்துவ அகில ரீதியான மாநாடு அனைத்து துறைகளிலும் மேம்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்வதால் மாணவர்களின் பரவலான தேடலுக்கு வழிவகுக்கின்றது என்றனர் செயற்பாட்டுக் குழுவினர். (செ-4)




# 6 மீனவர்கள் தடுப்பில் வைப்பு

(கரணவாய்)

தமிழக மீனவர்கள் 6 பேரை பருத்தித்துறை நீதிமன்றம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி கடலில் நேற்று காலை ஏற்பட்ட கடும் காற்று காரணமாக தமிழக மீனவர்கள் மூவர் வல்வெட்டித்துறை கடற்பரப்பிலும் பருத்தித்துறை கடற்பரப்பில் மூவரும் கரை ஒதுங்கியுள்ளனர்.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் முத்துவேல் (வயது57) ,மதியழக செல்வன் (வயது 17), வேல் முத்துகுமார் வயது (19), பருத்தித்துறை கடற்பரப்பில் மாரிமுத்து கோவிந்தராயா (வயது57), கோவிந்தராஜா கேதீஸ் வயது (60) ,நடேசன் கடைப்பெருமாள் வயது (60) ஆகிய அறுவரையும் வல்வெட்டித்துறை பொலிசார் நேற்று காலை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிபதி இவர்கள் அறுவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தடுப்பு காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-60)

# ம.சபை வழக்குகள் பிற்போடப்பட்டுள்ளன

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் வழக்கு விசாரணைகள் அனைத்தும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென தவிசாளர் அறிவித்துள்ளார். (அ-9-29)

# புதிய நிர்வாகிகள் தெரிவு இன்று

(மானிப்பாய் )

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற் குட்பட்ட கழகங்கள் மீள புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கமைய சில்லாலை வடக்கு இளைஞர் கழகத்தின் புனரமை ப்பு மற்றும் புதிய நிர்வாகிகள் தெரிவு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே குறித்த சில்லாலை வடக்கு கிராம சேவகர் பிரிவிற் குட்பட்ட 13முதல் 29 வயதிற்குட் பட்ட இளைஞர் யுவதிகளை கலந்து கொண்டு இளைஞர் கழக செயற்பாடுகளில் இணைந்து கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (செ-9-23)

# பிரசாரமும் சிரமதானமும்

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பெரியவிளான் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரமும், சிரமதானமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் பெரிய விளான் பகுதியில் இடம்பெறவுள்ளது.

மழைக் காலம் ஆரம்பித்துள்ள மையால் டெங்கு நுளம்புகள் அதிகளவில் பெருகும் தன்மை யுள்ள இடங்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட வுள்ள தோடு, டெங்கு நோய் சம்பந்தமாக விளக்கமளிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

ஆர்வமுள்ள அனைவரையும் இதில் கலந்து கொண்டு ஆதரவ ளிககு மாறு பெரிய விளான் இளைஞர் கழகத்தினர் கேட்டுள்ளனர். (செ-9-23)



வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது, வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

கச்சேரி மற்றும் பிரதான பாடசாலைகளுக்கு அண்மையில் குருசோ வீதியில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதி உண்டு. (நிறுவனங்களுக்கும் உகந்தது)

தொடர்பு:-
071 171 2003/
077 9344786
(4853)

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் வெற்றிடம் கொழும்பு அண்மித்த பிரதேசங்கள்/ யாழ்/ திருகோணமலை/ கண்டி/ கம்பஹா போன்ற பிரதேசங்களில் மேசன்/ தச்சு/ செடலின் பாஸ்/ கம்பி பாஸ்/ டயில் பாஸ்/ (1200/- 1500/-) கையுதவியாளர் (800/- 1200/-) மாதாந்தம் சம்பளம் வருகை தரும் அன்றே தொழில் வாய்ப்பு.

தொடர்பு:- 0775561883


# பிரதமருக்கு எதிராக விசாரணை நடத்துமாறு ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் டி.எம். ஜயரட்ன மற்றும் அவரது அதிகாரிகள் தொடர் பில்விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனடம், ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் ஒன்றில் பாரியளவில் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. இந்தப் போதைப் பொருள் அடங்கிய கொள்கலனை விடுவிக்குமாறும், வரி விலக்கு அளிக்குமாறும் பிரதமர் அலுவலகம உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் கோரியிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடிதத்தை அனுப்பி வைத்ததாகக் குறிப்பிடப்படும் பௌத்த சாசன அமைச்சின் இணைப்புச் செயலாளர் கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க ஏற்கனவே பதவியை இராஜினாமா செய்துள்ளார். எவ்வாறெனினும், கராச்சியிலிருந்து நாட்டுக்குள் பாரியளவில் போதைப் பொருள் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் முழு அளவில் விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி வலியுறுத்தியுள்ளது. போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் குற் றம் சுமத்தப்பட்டுள்ள கம்பளை நகர சபை உறுப்பினரும், பௌத்த சாசன அமைச்சின் இணைச் செய லாளரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்படாமைக்கான காரணங்களை வெளியிட முடியாது எனவும், பொலிஸ்மா அதிபர் நாடு திரும்பியதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (2)

# அரச விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

29 ஆவது ஆண்டு கலா பூஷண அரச விருது வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்க தலைமையில் கொழும்பு றோயல் கல் லூரியின் நவரங்க ஹல மண்டபத் தில் நடைபெறவுள்ளது. (செ-9)




## தேவை நாடும் மகளிர்

நீங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணா?
அல்லது சிறுமியா?
அப்படியாயின்
உளவளத்துணை (மனநல ஆலோசனை)
சட்ட உதவி
எம்மால் இலவசமாக வழங்கப்படுகின்றன.
மௌனத்தைக் கலையுங்கள்!
வாழ்வில் வெற்றி கொள்ளுங்கள்!!

விபரங்களுக்கு:

தேவை நாடும் மகளிர் 'வின்'

அவசர தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலமாக விஸ்தரிக்கப்பட்டு
2014 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது
011 4718585
இல 35A, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
அலுவலக இல. 021 222 9671
இணையத்தளம்: www.winsl.net
Facebook - Women In Need (WIN)

## வேலைவாய்ப்பு

உங்களுக்கு கப்பல்/ விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? அழையுங்கள். கப்பல் புனர் நிர்மாணத்துறையில் வெல்டர்/தச்சு/சாதாரண ஊழியர்கள் மற்றும், விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர் / கேப்ட்டரீங்/ காகோ/ லொன்றி பிரிவுகளுக்கு 18-45 வயது ஆண்-பெண் தேவை. உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 18000/- 25000/- 32000/- தொழில் அடிப்படையில் சம்பளம். தொடர்புகளுக்கு முந்துங்கள்.

தொடர்பு:-0775561883

## குறைந்த கட்டணத்தில் 24 மணி நேர சேவை

Northern Central Hospitals
24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

- சிறு நீர் தொகுதி சத்திர சிகிச்சை, கற்கள் அகற்றுதல் உட்பட (Urology)
  அதி நவீன உபகரணங்கள் கொண்டு சிறு நீரக சத்திர சிகிச்சை நிபுணரால் உடலில் காயமேற்படாது கற்கள் அகற்றுதல் உட்பட சகல சிறு நீர்த்தொகுதி சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.



- நரம்பியல் சிகிச்சை (EMG, EEG, Sleep Disorders)
  நரம்பியல் நோய்களுக்கு மின்னியல் (EMG,EEG) பரிசோதனை மேற்கொள்ளப் படுவதுடன் நித்திரை குறைபாடுகளுக்கும் 24 மணி நேர (Sleepstudies) சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



- லாபறஸ்கோப்பி (Laporoscopy)
  நவீன கருவி மூலம் வயிற்றில் சிறு துழை யிட்டு இச்சத்திர சிகிச்கை சத்திர சிகிச்சை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. நோயாளி உடனடியாகவே சத்திர சிகிச்சையின் பின்பு வீடு செல்லமுடியும்.



- முறிவு தெறிவு , மூட்டுக்கள் சத்திர சிகிச்சை
  வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் சென்றல் வைத்தியசாலையில் மட்டுமே முறிவு தெறிவு மற்றும் மூட்டு நோய்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் வார மொரு தடவை ஆலோசனை சேவையும் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.



(சி-5389)

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 13½ சூரி செவ் 10 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, MSc Quantity Surveying / UK - Student Visa<br>தொ.இ: B/2620 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா: 18 ¾உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2632 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 43 சூரி செவ் 12 ல்<br>உயரம்: 58:<br>தகைமை/தொழில்: பொறியிய லாளர் (அவுஸ்ரேலியா PR)<br>தொ.இ: B/2624 | பிறப்பு: 1979 இந்து (Pa)<br>நட்சத்திரம்: ரோகினி 2கி.பா: 67<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA / பட்டதாரி பயிலுனர்<br>தொ.இ: G/2635 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 25 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.A, மீன் பிடியியல் டிப்ளோமா / கமம்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றபபடும். (மணமகன் திருமணமாகாதவர்)<br>தொ.இ: B/2625 | பிறப்பு: 1983 இந்து (Kuru)<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 32 ¼<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / Asst. Manager<br>தொ.இ: G/2638 |
| பிறப்பு: 1970 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 1கி.பா: 53செவ் 8ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, Dip. in English /ஆசிரியர்<br>தொ.இ: B/2627 | பிறப்பு: 1971 இந்து (KO)<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 44<br>தகைமை/தொழில்: O/L / சிற்றூழியர்<br>தொ.இ: G/2639 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நோய் பரப்பியதாக

# ஐ.நா.மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் நோய் பரப்பியதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு அந்த அமைப்பு மறுப்பை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பு இவ்வாறு இலங்கையில் நோய்களைப் பரப்பியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இனந்தெரியாத ஒரு வகை சிறுநீரக நோய்களை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு பரப்பியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த இருபது ஆண்டுகளாக இலங்கையின் விவசாயத்தில் ஈடுபடுவோர் இனந்தெரியாத சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நோய்களினால் பாதிக்கப்பட்ட 20 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதுடன், 4இலட்சத்து 50ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் இரசாயன வகைகளே இந்த நோய்க்கான பிரதான ஏதுவென நீண்ட ஆய்வுகளின் பின்னர் கண்டறியப்பட்டுள்ளது.

கட்மியம் மற்றும் ஆர்சனிக் போன்ற நச்சுப் பதார்த்தங்களினால் சிறுநீரக நோய் ஏற்படுவதாக உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

பல்தேசிய நிறுவனங்களின் சார்பில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் இரசாயன பசளைகள் மற்றும் இரசாயன கிருமிநாசினிகளை ஊக்குவித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் வர்த்தக நோக்கத்தின் அடிப்படையில் எந்தவொரு தரப்பினையும் ஐக்கிய நாடுகள் அமைப்பு மேம்படுத்தியதோ பிரசாரம் செய்ததோ கிடையாது என ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய நிறுவனம் அறிவித்துள்ளது. (செ-2)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் மகாசபை பொதுக்கூட்டம் நாளை காலை 9மணிக்கு திருமண மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் த.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புதிய அங்கத்தர் தெரிவு, சென்றாண்டு அறிக்கைகள் உட்பட பல விடயங்கள் இடம்பெறவுள்ளன.(செ-9)

# பிரதமருக்கு வெட்கம் இருந்தால் பதவியை துறக்க வேண்டும்

## ஹெரோயின் கடத்தலை வைத்து தாக்குகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஹுலா என்பவர் யார் என்பதை அரசாங்கம் வெளியிடாவிட்டாலும், யுத்தம் நடைபெற்ற காலத்தில் தாம் செய்த சேவைக்கு இப்படியா செய்வது என்று அந்த நபர் கூறியுள்ளார்.

இதன்மூலம் அந்த நபர் யார் என்பதை தாம் அறிந்து கொண்டுள்ளதாகவும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் இயங்கிய மிகப் பெரிய சூதாட்ட நிலையம் சுற்றிவளைக்கப்பட்ட சம்பவம் பற்றி பேசும் போது ஹுலா (லக்ஷ்மன் ஹுலு கலலவே ஹுலா என சுருக்கமாக அழைக்கப்படுவதாக கூறப்படுகிறது) என்பவர் யார் என்பதை நாங்கள் அறிவோம்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தை மட்டும் கலைத்த அரசாங்கம் ஹுலாவின் அதிகாரத்தை குறைக்கவில்லை.

குறித்த நபர் அரசாங்கத்திற்கு ஏற்பசெயற்படவில்லை. தனக்கு அவசியமான முறையில் செயற்பட்டார். இதனால் தகுதிகளை பாராமல் சட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்குண்டு.

ஹுலா என்பவர் தற்பொழுது வகிக்கும் பதவி, அவரது தொடர்புகள் பற்றிய தகவல்களை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு வழங்க வேண்டும். இதனை செயதுஅரசாங்கம் தன்னை பரிசுத்தப்படுத்திக் கொள்ளமுடியும்.

அதேவேளை அண்மையில் இலங்கைக்கு ஹெரோயின் கடத்திவரப்பட்ட சம்பவத்துடன் பிரதமரின் இணைப்புச் செயலாளர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

ஹெரோயின் தொகையை விடுவிக்க பிரதமரின் இணைப்புச் செயலாளர் அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் சுங்க திணைக்களம் செயற்படுமாயின் சுங்க திணைக்களம் அரசியல்வாதிகளின் கடிதங்களின் அடிப்படையிலும் செயற்படுமா என்ற கேள்வி எழுகிறது.


நாடாளுமன்றத்தில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களும் இருப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

இதனை பிரதமர்தான் செய்தார் என்று நாங்கள் கூறவில்லை. எனினும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் இதில் சம்பந்தப்பட்டுள்ளதால், பிரதமர் ஓய்வுபெற வேண்டும் அல்லது பதவியை துறக்க வேண்டும்.

பிரதமரை பதவியில் இருந்து அகற்றும் செயற்பாடுகள் அரசாங் கத்திற்குள் மேற்கொள்ளப்படுவது எப்படி இருந்தாலும் இந்த சம்பவம் தொடர்பில் வெட்கம் இருந்தால் பிரதமர் பதவியை துறந்து விட்டு வீட்டுக்கு போக வேண்டும் என்றார். (செ-2)







கரவெட்டி திரு இருதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்லூரி அதிபர் எஸ்.இராகவன் உரையாற்றுவதையும் விருந்தினர் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

## பண மோசடி; ஒருவர் கைது

(கொழும்பு)

இரண்டு கிலோ தங்கத்தை பெற்றுத் தருவதாகக் கூறி 100 இலட்சம் ரூபாவை மோசடி செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி இந்த நிதி மோசடியில் இவர் ஈடுபட்டதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கட்டநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

விசாரணையின் போது , குறித்த நபர் கொழும்பைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (செ-2)

# பிரபாகரன் கொடுத்த விஷத்தையே கத்தோலிக்க பேராயர் கொடுக்கிறார்

## சீறுகிறார் அமைச்சர் விமல் வீரவன்ச



(கொழும்பு)

கத்தோலிக்க திருச்சபை கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் செய்ததை செய்வதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடபூமி என மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தமை தொடர்பில் வீரவன்ச கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அருந்த கொடுத்த விஷத்தை கொழும்பு பேராயர் பருக்க முயற்சித்து வருகிறார்.

பேராயர்கள் நாட்டின் நீண்ட காலமாக பொது சமூகத்துடன் வாழ்ந்து வரும் சமய தலைவர்கள் என்ற வகையில் பாரம்பரிய வாழ்விடபூமி என்ற எண்ணக்கரு விஷமானது என்பதை தாழ்மையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இந்த விஷத்தை நாட்டில் வாழும் பொதுமக்களுக்கு அருந்த கொடுக்கும் தார்மீக உரிமை எம்மில் எவருக்கும் இல்லை.

இந்த விஷத்தை பரப்பியவன் வேலுப்பிள்ளை பிரபாகரன் வடக்கில் மாபெரும் அழிவுகளை ஏற்படுத்தினார். வாழ்விடபூமி என்ற விஷத்தை கொடுத்து தாயகத்தை ஏற்படுத்துவதே அடுத்த முயற்சியாகும்.

பேராயர் இதனை கூறும் போது இது விஷமல்ல. தேன் சுவை பானம் என சிலர் நினைக்கக்கூடும். தமிழ் இனவாத பிரிவினை வாதங்களுக்கு சாதகமான கருத்துக்களை வெளியிட வேண்டாம்என கேட்டுக்கொள்கிறோம்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடபூமி என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்துக்கள் தமிழ் ஊடகங்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இப்படியான கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் நாடு மேலும் நெருக்கடிகளை நோக்கி தள்ளப்படும் என்பதை மிகவும் தாழ்மையுடன் நினைவூட்ட விரும்புகிறோம் என அமைச்சர் விமல் தெரிவித்தார். (செ-2)

## ஐ.தே.கவுடன் இணைய ஆளும் தரப்பு பேச்சு!

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மாகாண சபைகளின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் மேல், தென், ஊவா மாகாண சபைகள் மற்றும் சில பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தையை நடத்திவருகின்றனர்.

இவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளத் தயாராகி வருகின்றனர். இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ரவி கருணாநாயக்க இவ்வாறான தகவல் ஒன்றை வெளியிட்டுள்ள நிலையில், கருணாநாயக்க ஆளும் கட்சியில் இணைந்து மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.கருணாநாயக்கவின் வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக அவர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக அந்த தகவல்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன. (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை நெல் மட்டுமே எனக்கு கிடைத்தது

## அரசின் நட்ட ஈடு குறித்து சபாநாயகர் கருத்து

கடந்த வருடம் ஏற்பட்ட பயிர் அழிவிக்கு நட்ட ஈடாக தனக்கு விதை நெல் மட்டும் கிடைத்த தெனவும் ஆனால் காப்புறுதி நிபந்த னைப் படி பணம் வழங்கப்பட்டி ருக்க வேண்டுமெனவும் சபாநாய கர் சமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் 2012 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் காரண மாக தமது பயிர் அழிந்துபோன விவசாயிகளுக்கு காப்புறுதிக் கொடுப் பனவு கொடுக்கப்படவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் ஹரிசன் நேற்று முன்தினம் குற்றம் சாட்டிய போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு சிலருக்கு மட்டும் அரசாங்கம் நட்டஈடு வழங்கியதெனவும அதுவும் தவணை தவணையாகவே இவ ர்களுக்கு வழங்கப்பட்டது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட விசேட செயற்றிட்ட அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன காப்புறுதி செய்திருந்த வர்களுக்கு மட்டுமே காப்புறுதிப் பணம் வழங்கப்பட்டதென கூறி னார்.

விவசாயிகள் மானிய விலையல் உரம் வாங்கும்போது காப்புறுதி கட்டணமாக 100 ரூபா கட்டவேண்டும் என அவர் கூறினார்.

இக்கட்டத்தில் ஏற்பட்ட பயிர் அழி வுக்காக எனக்கு விதை நெல் மட்டும் கிடைத்தது என சபாநாயகர் கூறி னார். (செ-2)

# போலி பால்மா விளம்பரங்களால் பாவனையாளர்கள் ஏமாற்றம்

## அவதானமாக இருக்குமாறு அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

போலி விளம்பரங்கள் மூலம் பொய்யான தகவல்களை வெளி யிட்டு நுகர்வோரை ஏமாற்றுவோரி டமிருந்து மக்கள் அவதானமாக இரு க்க வேண்டுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் வரவு செலவுத்திட்டம் மீதான குழு நிலைவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சில பால்மா, பிஸ்கட் வகை களின்தொலைக்காட்சி விளம்பரங்கள் பிரபல விளையாட்டு வீரர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு வருவ தால் அவற்றில் மிதமான பலம் இருப்பதாகச் சித்தரிக்கப்படுகிறது. இவற்றில் மிக அவதானமாக மக்கள செயற்படுவது அவசியமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்கம் தற்போது சுகாதாரத்து றையை முன்னேற்றும் பல்வேறு திட் டங்களை நடைமுறைப்படுத்தி வரு கிறது. வடக்கு, கிழக்கு உட்பட வைத் தியசாலைகள்புனரமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆயிரக்கணக்கான மருநதுவகை கள் இலவசமாக வைத்தியசாலைக ளில் வழங்கப்படுகின்றபோது ஓரிரு மருந்துக்கு தட்டுப்பாடு நிலவினால் ஐ.தே.க. வினர் இதனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு விமர்சனங்களில இறங்கிவிடுகின்றனர்.

அம்பாந்தோட்டை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச சுகாதார பிரதி அமைச்சராக இருந்த காலததில் அம்பாந்தோட்டை வைத்தி யசாலைக்கு ஏதாவது செய்துள் ளாரா என்பதை மக்கள் அறிவர்.

வடக்கு, கிழக்கு மாகாண வைத் தியசாலைகளில எதுவுமே இல்லா திருந்த புலிகளின் யுகத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மறக்கக்கூடாது.

தற்போது அங்கு அனைத்து வைததியசாலைகளும் புனரமைக்கப பட்டு அல்லது நிர்மாணிக்கப்பட்டு இயங்குகின்றன. சில மருந்துகள் இல்லாமையும் மருத்துவர்கள் பற்றாக குறையும் நாடெங்கிலும் உள்ள நிலையே என்பதை அவரகள் உணரவேண்டும் என்றார். (செ-2)

## காணாமல் போனோர் தொடர்பில்

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கையளிப்பு

(கொழும்பு)

காணாமல்போனவர்கள்தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப் பாடுகள் கிடைத்துள்ளன.

கொழும்பு கொஹுவல பிரதேச த்தில் உள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், கிளி நொச்சி, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆயிரத் திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கையளிக்கப்பட்டன.

கையளிக்கப்பட்ட முறைப்பாடு களில் நான்கு முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளும் அன்றைய தினமே நடைபெற்றன.

ஆணைக்குழுவிடம் காணாமல போனவர்கள் தொடர்பான முறைப் பாடுகளை கையளிப்பதற்காக சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என 150இக்கும் மேற்பட்டோர் சமுகமளித்திருந்தனர்.

இங்குகருத்து வெளியிட்ட ஆணைக் குழுவின் தலைவரும் முன்னாள் நீதிபதியுமான மெக்ஸ்வல் பராக்கிர பரணகம, ஆணைக்குழுவிற்கு பததாயிரத்திற்கும் மேற்பட்ட முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாக கூறி னார்.

எழுத்து மூலமாக சுமார் ஐயாயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. போர் காரணமாக கொல்லப்பட்ட மற்றும் காணாமல் போன முப்ப டையினர், பொலிஸார், தமிழ், சிங்கள, முஸ்லிம் பொதுமக்கள் பற்றி முறைப்பாடுகள் இவற்றில் அடங்கும்.

இந்த முறைப்பாடுகளை விசாரிக்க சுயாதீனமான குழுவை நியமிக்க எதிர்பார்த்துள்ளோம். ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகள், சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள், பல்கலைக்கழகங்களின் புத்தி ஜீவிகள் உள்ளிட்டோர் அடங்கிய இந்த குழுவின் மூலமாக முறைப் பாடுகள் தனித்தனியாக விசாரிக்கப் படும்.

முறைப்பாட்டாளர்களின் சுதந் தரத்திற்கு தடையேற்படும் என்பதால் தற்பொழுது சேவையில் உள்ள எந்த பொலிஸ் அதிகாரிகளும் குழு வில் இடம்பெற மாட்டார்கள்.

விசாரணைகளின் அடிப்படையில் காணாமல் போனவர்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காது போனால், காணாமல் போனவரின் குடும்பங்க ளுககு இழப்பீடு தொகை ஒன்றை வழ ங்குமாறு அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்படும் என ஆணைக குழு வின் தலைவர் குறிப்பிட்டார்.(செ-2)

## புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகள் 18ஆம் திகதி வெளியிடப்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள பிரபல பாடசா லைகளுக்கு மாணவர்கள் அனு மதி பெறுவதற்கான புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் விபரம் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை வெளியி டப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த பரீட்சையில் மூன்று இலட்சத்து 29ஆயிரத்து 725 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

இதில் சிங்கள மொழி மூலம் இரண்டு இலட்சத்து 49ஆயிரத்து 396 பரீட்சார்த்திகளும், தமிழ் மொழி மூலம் 80 ஆயிரத்து 329 பரீட்சார்த்திகளும் தோற்றியுள்ள னர்.

தேசிய ரீதியில் 2ஆயிரத்தில் 836 பரீட்சை நிலையங்கள் அமைக கப்பட்டிருந்தன எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார. (செ-2)

# சிறிதரன் உடனடியாக தற்கொலை செய்யட்டும்

## ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கிறேன் என்கிறார் பியசேன எம்.பி

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போகின்றார். அடுத்து சிறிதரன் எம்.பி.தற்கொலை செய்யவும் தயாராகவுள்ளாராம். இவர்கள் உடனடியாக இதனை செய்யவேண்டும். அதன் பின்னராவது தமிழ்மக்களுக்கு விடிவு கிடைக்கட்டும்.நான் இவர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பேன். இவர்கள் தமிழ்மக்களின் மனங்களில் உள்ள காயங் களை குணப்படுத்த வேண்டும். ஆனால் அதனைச் செய்யாது காயங் களைப் பாதுகாத்து வருகின்றனர் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து அரசாங்கத் தரப்பிற்குத் தாவிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பியசேன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் உரை யாற்றுகையிலேயே அவர்மேற்கண்ட வாறு வலியுறுத்தினார். அவர்மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைபபை தடை செய்து அதன் உறுப்பினர்கள் அனைவரையும் கைது செய்ய வேண்டும்.

இராமாயணத்திற்கு ஒரு கூனி, மகாபாரதத்திற்கு ஒரு சகுனி. அதே போன்று தமிழ் மக்களுக்கு ஒரு தமிழ்தேசியக் கூட்டமைப்பு, உலகில கொடிகட்டிப் பிறந்த இனம் தமிழினம். ஆனால் இந்த தமிழ் தேசிய கூட்ட மைப்பினரால் தமிழினம் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின் றன.

அதிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போகின்றார். அடுத்தவர் ஸ்ரீதரன் எம்.பி தறகொலை செய்யவும் தயாராக உள்ளாராம்.

இவர்கள் உடனடியாக இதனை செய்ய வேண்டும். அதன் பின்னரா வது தமிழ் மக்களுக்கு விடிவு கிடை க்கட்டும். நான் இவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பேன். இவர்கள் தமிழ் மக்களின் மனங்களில் உள்ள காயங்களை குணப்படுத்த வேண் டும். ஆனால் அதனைச் செய்யாது காயங்களை பாதுகாத்து வருகின் றனர்.

இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிற்கு சென்றும் நடிக்கிறது இங்கேயும் நடிக்கின்றது. கச்சதீவு என்பது பாம்பு கழற்றிய செட்டை போன்றது. பாம்பு தான் கழற்றிய செட் டையை ஒரு போதும் திரும்ப போட டுக் கொள்ளாது. அதேபோன்று கச்சதீவை ஒரு போதும் இந்தியா திரும்பபெற முடியாது.

எமது நாட்டை இராவணன் என்ற மன்னன் ஆண்டான். தற்போது மகிந்த என்ற மன்னன் சிறப்பாக ஆட்சி செய்கின்றார். இதை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பொறுக்க முடியவில்லை. இதனால் தான் சதி வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே உடனடியாக தமிழ் தேசிய கூட்டமைப்பை தடைசெய்வ துடன் அதில் உள்ள உறுப்பினர்கள் அனைவரையும் கைது செய்ய வேண்டும் என்றார். (2)





வடமாகாண சபையின் ஆக்க சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவ அதிகார பணிகளும் பொறுப்புக்களும் தொடர்பான விளக்கம் அளிக்கும் கலந்துரையாடலில், விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார், மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

### கல்லறைகளின் புலம்பல்

ஒரு தாயவளின்
கனவுகள் கலைக்கப்பட்டு
கல்லறைகள் சிதைக்கப்பட்டு
உணர்வுகள் ஒடுக்கப்பட்டு
உரிமைகள் மறுக்கப்பட்டு
நினைவுகள்
அழிக்கமுடியாத– அசையாத
சொத்தாகிவிட்டதால்...
விடிகின்ற ஒவ்வொரு
பொழுதுகளும்
நம்– விடிவுக்காய்
உறங்காத விழிகளோடு
உடைத்தெறியப்பட்ட
கல்லறையிலே!
உணர்வுகளுக்கு முற்றுப்புள்ளி
கிடைக்கும் வரை– உயிர்
வாழ்கிறோம்

எஸ்.பீ.கரன்
யாழ்ப்பாணம்


### நிச்சயதார்த்தம்

போட்ட கணக்கெல்லாம்
பொய்த்துப் போனதால்
உன்னை நான்
நினைவு நாளில் மட்டும்
நினைப்பது தான்
நியாயம்
நிச்சயமற்ற நிகழ்காலத்தில்
வாழும் ஒரு சராசரி
மனிதன் என்றா– இல்லையே!
சந்தேகம் தீராத சங்கடத்தில்
வினாவினேன்– நீ காதலித்தவன்
யார் என்று
அழாதே! மகளே உன் விழிநீரை
துடைக்க வந்தால் என் விரலும்
அழுதுவிடும்–இப்படி எத்தனை
பேருடன் நிச்சயமாய்
நிச்சயதார்த்த
உறவு கொண்டாய்

பு.ராஜ்குமார்
தேவரையாளி



### தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
அடிமை மனிதற்காய்
அன்று எழுந்து நின்று
சிறைகள்... சித்திரவதைகள்
தாங்கி... தாண்டி...
உரிமை உரிமை என்று
அதை பெற்று புகழ்சேர்த்த
மண்டேலா என்ற
மாமனிதமொன்று
விடைபெற்றதறிந்து
விழிநீர் சொரிந்தான்

மாவை. நா.கஜேந்திரன்

### பிரிவு

தென்னங் கீற்றாய்
கிழிந்து போகிறேன்
நீ– என்னை
பிரிகையில்

### மகிழ்ச்சி

உள்ளம் தேடும்
உண்மை உறவு

### உள்ளம்

எண்ணிக்கை இல்லாத
உணர்வுகளை
ஏந்தும் பாத்திரம்

### மருந்து

நோய்கள் வாங்கும்
கொடிய இலஞ்சம்

சிந்து சிவதாஸ்
சுதுமலை

### கல்லூரிப்பூ

கல்லூரி வளாகத்தில்
காலையில் மலரும்
பூக்களைப்போன்று
நம் நட்பும் சுற்றித் திரிந்த
நினைவுகள் கல்லூரியின்
மண்ணைத் தொட்டுக் கேட்டால்
கூறும் நம் நட்புகளின்
பாததடயங்களை
நம் நட்பு பெரிய வட்டம் அங்கு
பிரிந்து ஒரு நொடி இருந்தால் கூட
சேர அந்த ஒரு நொடியே போதும்
நம் நட்பின் நினைவுகள்
ஒவ்வொருவரினதும் மனதைவிட்டு
நீங்காது இருக்க இறைவனை
வேண்டுகின்றேன்

செ.மிதுர்ஷா
தம்பசிட்டி



### தனிமரம்

முதுமையதை இன்பமாய்
முடித்துவிட வழியின்றி
பாழடைந்த இரு சுவருள்
போரின் வடுவேந்தி...
சிந்தனையில் எத்தனையோ
சிந்தனைகள் நிழலாட
மனதிலே எத்தனையோ
சோகங்கள் விளையாட
நானும் நாயும் தனிமரமாய்
முற்றத்தில் இன்று...

முல்லை கஜந்

### முதுமை

ஆறறிவு படைத்தவர்கள்
அநாதையாய் விட்டுப்போக
ஐந்தறிவு படைத்த நீ மட்டும்
நன்றியுடன் என்னருகில்
முடிந்து போகும் -என்
முதுமையின் இறுதிக் கணங்களில்

ஈழவன்
துணுக்காய்

### காத்திருப்பு

தொலைதூர குரலுக்காய்
காத்திருக்கும் அப்பாவே!
பெற்றெடுத்த பிள்ளைகள்
விட்டுப் பிரிந்தாலும்
உற்ற காவலனாய்
உடனிருக்கும் உறவு இதுதான்...!

இரா.பிரம்மா
நெடுந்தீவு

## மௌனத்தின் தேடல் – 182

### மீதி

போரில் ஏற்பட்ட வடுக்களின்
மீதி பாழடைந்த வீடும்
நன்றியுள்ள நாயும் தான்

ப.பகீரதன்
உரும்பிராய்

### உறவு

எட்டும் வயதில்
இறுமாப்புடன் வாழ்ந்த
வாழ்வு எங்கே
சேர்த்த சொத்துக்கள்
கட்டிய வீடு
கூடிவாழ்ந்த குடும்பம்
அத்தனைகளையும்
தொலைத்து நாதியற்று
நாயுடன் என்ன
அப்படியொரு
அந்நியோன்னிய உறவு

பா.எப்சியா
மிருசுவில்

### தஞ்சம்

பல பிள்ளைகளைப்
பெற்றுவிட்டும்
பரிதவிக்கும் தந்தையரே!
பார்ப்பாரற்ற
உந்தனுக்கு
பகுத்தறிவற்ற
நாய்தான் மீதியோ!
காலம் இருக்குது
கலங்காதே தந்தையே!
கடைசிவரையில்
முதியோர் இல்லமே

கணபதிதாசன்
கட்டைக்காடு

### நற்பண்பு

கல்லூரி பல சென்று
பட்டங்களோடு
பதக்கங்களும்
பல வென்ற
பண்பற்ற மாந்தர்களே!
நல்ல பழக்கவழக்கம்
நீங்கள்
கல்லாததால் அன்றோ
தனை ஈய்ந்து
உமை வளர்த்த
தனையன் இன்று
நன்றியுள்ள பிராணிக்கு
அடிமையாய்
ஆகிவிட்டான்!

பா.பிரேமதாஸ்
சாரையடி

### விசுவாசம்

உப்பிட்டவனை
உள்ளளவும் நினைத்து
பழகியவனுக்கு பங்கம்
செய்யாத நாயைப்போல
மனிதர்களும் நன்றிக்கும்
விசுவாசத்திற்கும்
மதிப்பளித்தால்
துரோகத்திற்கு இடமிருக்காது

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### நன்றிக்கடன்

உயிர்கொடுத்து
ஊட்டி வளர்த்த
உறவுகள் கூட
உதறித்தள்ளிய போதும்
உண்ட உணவுக்காக
நன்றி செலுத்தும் நாய் இது

மதுரா
பருத்தித்துறை

### துணிவே துணை

உடைந்த உள்ளத்தோடு
பாழடைந்த குடிசையில்
துணையின்றித் தனிமையில்
என்ன செய்யப் போகிறாய்?
அடக்கு முறைக்கெதிராக
அடங்காது போராடு நாளை
வெற்றி வந்து உனைச்சேரும்
ஏற்றிப் போற்றுவர் மக்கள்

துரை
தென்மட்டுவில்

### நன்றியுடையான்

தம்பியுடையான் சண்டைக்கஞ்சான்
நன்றியுடையான் என்றும்கூட வருவான்
வாடிக்கையாளரிங்கு வேடிக்கை
பார்த்திட- கூடிக்கிடக்கின்றீரே
ஐயா குட்டியுடன்- தொங்கிய
தோளை நிமிர்த்தி தொடங்குமும்
வியாபாரத்தை

சி.ரவிக்குமார்,
திருமுறிகண்டி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் –183



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 19.12.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









சுதுமலை நாவலர் பாலர் பாடசாலையின் வருடாந்த கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் விருந்தினர் மாணவி ஒருவரை கௌரவிப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)





பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தி யாலயத்தில் நிறுவுநர் தின நிகழ்வு அண் மையில் இடம்பெற்ற போது உருவப் படத்தி ற்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.கதிர மலை மாலை அணிவித்து மரி யாதை செலுத்துவதையும் மன்னார் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் க.கமலே ஸ்வரன் நினைவுப் பேரு ரையை நிக ழ்த்துவதையும் கலந்து கொண்டவ ர்களையும் படங்களில் காணலாம்.



அமரர் பொன் னையாவின் நினைவினையொட்டி கதிர்ப்பாய் முரசொலி முன்பள்ளிச் சிறார்களுக்கு அவரது குடும்பத்தினரால் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டதை படத்தில் காணலாம்.




## நிகழ்வின் நிழல்கள்







கரவெட்டி பிரதேச செயலகத்தில் சிறுகைத்தொழில் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்ற போது.... (படம்:- கரணவாய் செய்தியாளர்)



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் பயனாளி ஒருவருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்ட போது....






யாழ். சென்.சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் ஒளி விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் றெக்னோ அடிகளார் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



மத்திய மாகாணத்தில் த.சிறிபிரகாஸ், க.சீலன் ஆகியோரின் ஆற்றுகையின் கீழ் வீதி நாடகம் இடம்பெற்றபோது....



நீர்வேலி தெற்கு முதியோர் சங்கத்தினரால் இலவச மருத்துவ முகாமொன்று அண்மையில் நடத்தியபோது....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

# 16.12.2013–13.01.2014



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**சுதந்திரமான மனப்போக்கோடு செயற்பட்டு சுகங்களை வரவழைத்துக் கொள்ளும் சிம்ம இராசி நேயர்களே!**

**செல்வாக்கு அதிகரிக்கும் நேரம்!**

## பருவமழை உதவுவதுபோல், பக்கபலமாக இருப்பவர்கள் உதவுவர்

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே தனாதிபதி புதன், இராசிநாதனோடு இணைந்து குருவால் பார்க்கப்படுகிறார். அப்புறமென்ன? வரவு திருப்தி தரும். வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். பருவமழை உதவுவதுபோல் பக்கபலமாக இருப்பவர்கள் உதவி செய்வர். சிறுசிறு பிரச்சினைகள் மன கிலேசத்தை ஏற்படுத்தினாலும் முடிவில் நல்ல பலன்கள் வந்து சேரும்.

குருவின் வக்ர இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே, கூட்டு முயற்சிகளில் மாற்றம் ஏற்படும். விறுவிறுப்பாக நடந்த தொழிலில் வேண்டி விரும்பி செயற்பட்டவர்கள் விலகும் சூழ்நிலை உருவாகலாம். பொறுமையோடு செயற்பட்டால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பெருமை தரும் செவ்வாய் கன்னியில் சஞ்சரிப்பது யோகத்தான்.

குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். கொடுத்த வாக்கையும் காப்பாற்றி விடுவீர்கள். எடுத்த செயலை இனிதே முடிக்கும் விதத்தில் ராகுவும் சஞ்சரிக்கின்றார். சுக்ர பலம் கொஞ்சம் குறைவாக உள்ளது. எனவே, சகோதர வழியில் அல்லது சகோதரி வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் வளர விடாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

பொதுவாக இராசிநாதனை குரு பார்க்கும் இம்மாதம் நற்பலன்களையே அதிகம் வழங்கும். இருந்தாலும் பார்க்கும் குரு வக்ர இயக்கத்தில் அல்லவா இருக்கின்றார். எனவே, அவரைப் பலப்படுத்த வியாழன் தோறும் விரதமிருந்து தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. சகாய ஸ்தானாபதி சனி உச்சம் பெற்றிருக்கிறார். சனியால் சகாயங்கள் அடைய வேண்டுமானால் விஷ்ணு வழிபாட்டை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

அதற்குரிய தினமான வைகுண்ட ஏகாதசியும் சனிக்கிழமை அன்று வருகிறது. எனவே, அன்றைய தினம் பெருமாளை வழிபட்டு வருவது நல்லது. அனுமன் ஜெயந்தியன்று ராம தூதனர் அனுமானையும் வழிபட்டு வருவது மன அமைதிக்கு வித்திடும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

மகர இராசியில் ஜனவரி 2 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் இராசிக்கு தனலாபாதிபதியாக விளங்கும் புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்ரனுடன் இணைவதால் தொழிலை விரிவாக்கம் செய்ய நினைப்பீர்கள். அதற்குரிய தொகையை வங்கிகளின் வாயிலாகவோ, வள்ளல்களின் வாயிலாகவோ பெற்றுக்கொள்ள நேரம் கைகூடி வருகிறது. ஆடை, ஆபரண சேர்க்கை மட்டுமல்லாது அயல்நாட்டிலிருந்து வரும் விலை உயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் பணப்பற்றாக்குறை அகலும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். கணவன்– மனைவிக்குள் கனவு கூடும். காலம் காலமாக இருந்து வந்த குடும்பப் பிரச்சினைகள் அகலும். இடம் வாங்கலாம். பூமி வாங்கலாம் அல்லது ஏதேனும் ஒரு விலை உயர்ந்த பொருட்களை வாங்கலாம் என்று கண்ட கனவை நனவாக்கும் விதத்தில் கிரக நிலைகள் உலா வருகின்றன. பிரதோஷ நாளில் நந்தியை வழிபட்டு நலம் காணுங்கள். திருவாதிரை நாளில் நடராஜப்பெருமானை வழிபாடு செய்து நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.


**வளர்ச்சியைக் கூட்டும் வக்ர குரு!**

குரு இம்மாதம் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியாக உங்கள் இராசியின் அடிப்படையில் விளங்கும் குரு வக்ரம் பெறுவது ஒரு வகையில் நன்மைதான். என்றாலும், பஞ்சமாதிபதிக்குரிய ஆதிபத்யத்தில் திடீர் மாற்றங்களையும், விரயங்களையும் கொடுக்கலாம். பிள்ளைகளின் நலன் கருதி பெரும்தொகையொன்றை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். குழந்தைகள் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. இல்லையேல் அவர்கள் வழியில் வரும் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்துசேரும்.

பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரிவினைகள் ஏற்பட்ட பின்னாலும் பங்குதாரர்களும், சகோதரர்களும் அது சரியில்லை என்று வாதிடுவர். அதே நேரத்தில் அஷ்டமாதிபதியும் குருவாக இருப்பதால் அதன் வக்ரம் நன்மைகளைத் தரவேண்டுமல்லவா? எனவே, கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்யும் 2014 மார்ச் 2 ஆவது வாரம் வரை இந்த நிகழ்வு நீடிப்பதால் அதற்குள் வருமானமும் வளர்ச்சியும் கூடும் என்றாலும் மன அமைதி குறைவாகவே இருக்கும்.

நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். குருவின் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிவாகியது. எனவே, சகோதர வழி சச்சரவுகள் தீரும். சந்தான பாக்கியம் கிடைக்காதவர்களுக்கு அது கிடைக்க வழி பிறக்கும். சப்தம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் விவாகப் பேச்சுக்கள் முடிவடையும். விட்டுப் போன வரன்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டவை கூட மீண்டும் வரலாம்.

# சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**நேசிக்கும் குணமும், வாழ்வில் நெளிவு, சுளிவுகளைக் கற்று வைத்திருக்கும் தன்மையும் கொண்ட கன்னி இராசி நேயர்களே!**

**தடம் பதிக்கும் விதத்தில் தக்க பலன் கிட்டும்!**

## தனவரவு தானாகவே வந்து பொருளாதார நிலையை உயர்த்தும்

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மகிழ்ச்சியும், மனக் கசப்பும் மாறி, மாறி வரும் விதத்திலேயே இருக்கிறது. மாதத்தொடக்கத்திலேயே 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். கன்னி இராசியிலேயே செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது கன்னிச் செவ்வாய் கடலும் வற்றும் என்பார்கள். எனவே, சொத்து விற்பனை செய்யும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

ஆனால், அங்ஙனம் விற்ற சொத்துக்களால் கிடைக்கும் தொகையைக் கொண்டு வேறொரு சொத்தினை வாங்க வேண்டும். அல்லது தொழிலுக்கான மூலதனமாக சேர்க்க வேண்டும். இல்லையேல் வீண் விரயங்கள் ஏற்படலாம். ஏழரைச் சனியின் ஆதிக்கம் வேறு இருக்கிறது. விரயச்சனி இரண்டரை ஆண்டுகால, ஆதிக்கமும் முடிந்து, ஜென்மச் சனியின் இரண்டரை ஆண்டு கால ஆதிக்கமும் இப்பொழுது முடிந்துவிட்டது. இப்பொழுது குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்னும் சில மாதங்கள் சனி ஆதிக்கம் இருந்தாலும் உச்சம் பெற்ற சனி உங்களுக்கு வருமானப் பற்றாக்குறையை உருவாக்காது. இருந்தாலும் ஏழரைச்சனியின் முதல் சுற்றோ, மூன்றாவது சுற்றோ நடப்பவர்கள் அதற்குரிய பரிகாரங்களை முறையாகச் செய்து கொள்வது நல்லது. எள் தீபமேற்றி சனி பகவானை வழிபடுவதோடு சனி கவசம் பாடுவதும் நல்லது.

விரயாதிபதி 4 ஆம் இடத்தில் இருப்பதால் குடும்பச் செலவுகள் கூடும். கொடுக்கல்– வாங்கல்களில் எதிர்பாராத விரயங்களும் ஏற்படலாம். அரசியல் தொடர்புடையவர்களுக்கு ஆதாயம் குறைவாகவே இருக்கும். பொறுப்புக்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படும். பொன்னான வாய்ப்புக்களை கைநழுவ விட்டோமே என்று கவலைப்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் குரு வக்ரம் பெறுவது யோகம்தான். பதவி மாற்றம், ஊர் மாற்றம், உத்தியோகு மாற்றம் என்று பலவிதமான மாற்றங்களைக் கொடுக்கும் விதத்தில் குரு வக்ரம் பெறுவது நன்மைதான். மாற்றங்களை ஏற்றுக் கொண்டால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 2 ஆம் திகதி புதன் மகர இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். தனாதிபதி சுக்ரனுடன் இணைந்து சஞ்சரிப்பது யோகம்தான். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அன்புக் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். குடியிருக்கும் வீட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். தந்தை வழி உறவினர்களால் நன்மை உண்டு. தனவரவு தாராளமாக வந்து சேரும். பொருளாதார நிலை உயரும் இந்த நேரத்தில் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் 10 ஆம் இடத்து குருவின் வக்ர இயகத்தால் பலவித மாற்றங்களைக் காணப் போகிறீர்கள். தக்க தருணத்தில் தாய்வழி ஆதரவு கிடைக்கும். கணவன்– மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியம் இப்பொழுது துரிதமாக நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், உன்னதமான மாற்றமும் வந்து சேரும். அத்தனைக்கும் மேலாக இம்மாதம் வைகுண்ட ஏகாதசியன்று விஷ்ணு வழிபாட்டை மேற்கொண்டு விரதத்தைக் கடைப்பிடித்தால் உங்கள் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும்.

**வளர்ச்சியைக் கூட்டும் வக்ர குரு!**

இதுவரை இயல்பாக சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது வக்ர இயக்கத்தில் பயணம் செய்கிறார். 10 இல் குரு வக்ரம் பெறுவது நன்மைதான். முத்தான தொழிலில் முன்னேற்றம் கிடைக்கும். மூலதனம் இல்லாமல் தொழில் தொடங்க முயற்சித்தால்கூட கால நேரம் நன்றாக இருந்தால்தான் கை கொடுத்து உதவ நண்பர்கள் காத்திருப்பார்கள். அந்த அடிப்படையில் இப்பொழுது நட்பால் நல்ல காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள். உங்களுக்கு அற்புதப் பலன்களை அள்ளித் தரப் போகின்றார் குருபகவான்.

4,7 க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது வாழ்வில் வளர்ச்சிகூடும். வருமானம் பெருகும். சூழும் நண்பர்களால் சுகங்களும் சந்தோஷங்களும் கிடைக்கும். சொல்லைச் செயலாக்கிக் காட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் இனிய சம்பவங்கள் நிறையவே நடைபெறும். 2 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் இதுவரை இல்லாத அளவு சேமிப்பு உயரும். தொழில் தொடங்கும் திட்டங்களைத் துணையாக இருப்பவர்களின் ஒத்துழைப்போடு நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

குருவின் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவதால் எதிர்பாராத நன்மைகள் வந்து சேரும். வீடு கட்டும் முயற்சியில் அல்லது வீடு வாங்கும் முயற்சியில் இருந்த தடைகள் அகலும். தாய்வழி ஆதரவு கூடும். தக்க விதத்தில் பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும். வாய்த்தாக்கள் ஓயும். எதிரிகள் சரணடைவர். எப்பொழுதோ கொடுத்த தொகைகள் இப்பொழுது வசூலாகி பரவசப்படுத்தும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம்



ஆன்மீகம் 67

நீங்கள் புத்திசாலியாக இருக்கலாம். தேவையான தகுதி பெற்றவராக இருக்கலாம். திறமைசாலியாக இருக்கலாம். ஆனால், உங்களிடம் திடம் இல்லாவிட்டால், தள்ளாடிக் கொண்டிருந்தால், நீங்கள் பேராபத்தாகத்தான் இருப்பீர்கள்.

நீங்கள் சிறிது முட்டாளாக இருந்தால் கொஞ்சம் குறைவான பேராபத்தாக இருப்பீர்கள். ஏனென்றால், நீங்கள் எதை விரும்புகிறீர்களோ, அதற்குத் தேவையான உந்துதலை புத்திசாலித்தனம் தருகிறது.

வேகமாக செல்லும் ஒரு வாகனத்தைத்தான் நாம் விரும்புகிறோம். ஆனால், அது விபத்துக்குள்ளானால், அது பெரிய ஒரு பாதிப்பாக இருக்கும். எத்தனை உயரம் ஏறுகிறீர்களோ, அத்தனை பலமாக கீழே விழுவீர்கள் என்பதை ஏற்கனவே நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியும்.

புத்திசாலித்தனம், திறமை, ஆற்றல், தகுதிகள் இவையெல்லாம் தோல்வியிலிருந்து உங்களுக்கு பாதுகாப்பு அளிக்காது; சமநிலைதான் தோல்வியிலிருந்து உங்களைக் காக்கும். அதனால்தான் பதஞ்சலி முனிவரிடம் யோகத்தின் மூன்றாவது பகுதியான ஆசனாவை விவரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட போது, அவர் ஸ்திரம், சுகம், ஆசனம் என்று சொன்னார்.

அதாவது, ஆசனம் என்பது வசதியானதாகவும், திடமானதாகவும் இருக்க வேண்டும் என்று சொன்னார். வசதி என்றால் நீங்கள் சௌகரிகமாக உணர்வது, மேலும் நீங்கள் திடத்தன்மையுடனும் இருப்பீர்கள். இந்த இரண்டு விடயங்களும் உங்களிடம் இருந்துவிட்டால் உங்கள் வாழ்க்கையின் முழு திறனையும் கண்டுகொள்வீர்கள். உங்களிடம் புத்திசாலித்தனம், தகுதிகள், திறமை இவையெல்லாம் இருந்தாலும் உங்கள் வாழ்க்கையின் முழு திறனையும் உங்களால் கண்டுகொள்ள முடியாது- அதற்கு நீங்கள் உங்களுக்குள் திடமாகவும் சமநிலையுடனும் இலகுவாகவும் இருக்க வேண்டும்.



இல்லாத ஒன்றை, அதாவது எதிர்காலத்தை நாம் கையாளும் முன்பு, இலகுவாக திடமாக இருந்தால்- இந்த இரு தன்மைகளையும் நீங்கள் அடைந்திருந்தால்- இதரவை நடைபெறும். எப்போதுமே நீங்கள் இலகுவாகவும் திடமாகவும் இருந்தால் மற்றவை எல்லாம் உங்கள் திறனுக்கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப நடைபெறும்.

இதில் நிறைய காரணிகள் இருந்தாலும் அவையெல்லாம் உங்களுக்குச் சாதகமாக வேலை செய்யும். இந்த இரு விடயங்களும் இல்லையென்றால், நீங்கள் இலகுவாக, திடமாக இல்லாவிட்டால்- ஒருநாள் மிகுந்த உற்சாகமாகவும் அடுத்தநாள் மிகுந்த சோர்வாகவும் இருப்பதைப் பார்ப்பீர்கள். எனவே, எதிர்காலத்தைக் கையாள்வதற்கு முன்பு நாம் சௌகரியமாகவும் திடமாகவும் இருக்கும் இந்த பரிமாணத்தை நிகழ்காலத்துக்குக் கொண்டுவருவது மிகவும் முக்கியம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஒடுக்கப்படும் ஒவ்வொரு மனிதனுக்கும் மண்டேலா ஒரு நம்பிக்கை நட்சத்திரம்!



உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் அநியாயத்தைக் கண்டு உங்கள் மனம் கொதித்தால் நாம் இருவரும் தோழர்களே' என்றார் சேகுவேரா. உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் அநியாயத்துக்காகப் போராடும் ஒவ்வொருவரும் தமிழினத்திற்கும் தோழர்களே.

தென் ஆபிரிக்கவின் முதலாம் கறுப்பின அதிபராக மட்டுமல்ல, தென் ஆபிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவராகவும் 1994 மே 10ம் திகதி பதவியேற்றுக்கொண்டவர் நெல்சன் மண்டேலா. அவரது புகழுடலை அடக்கம் செய்யும் இறுதி நிகழ்வு 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இலட்சக்கணக்கான மக்களும், 90 நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் ஒன்று கூடிய அமரரின் இறுதி அஞ்சலி நிகழ்வு, அண்மைக்காலத்தில் உலகின் மிகப்பெரிய இறுதி அஞ்சலி நிகழ்வாக அமைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

'தென் ஆபிரிக்கா தனது மிகச்சிறந்த மகனையும் தென் ஆபிரிக்க மக்கள் தங்கள் தந்தையையும் இழந்துவிட்டதாக' நெல்சன் மண்டேலாவின் மரணச் செய்தியை உலகிற்கு அறிவித்த தென் ஆபிரிக்க அதிபர் ஜேக்கப் ஜூமா குறிப்பிட்டார்.

ஆனால், நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்காவினது மட்டுமல்ல உலகில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கின்ற இனங்களுக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாக, நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்த ஒரு சிறந்த தலைவர். அவரது மரணம் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும், மரணத்தின் வாசலில் மூச்சிழுத்துப் போராடிக்கொண்டிருந்த அந்தத் தலைவனின் இழப்புச் செய்தி இன வேறுபாடின்றி உலகமெங்கும் உள்ள மக்களுக்கு பெரும் அதிர்ச்சியாகவும், துயரமாகவுமே அமைந்துள்ளது.

அகில உலக வரலாற்றில் தன் பெயரை பொன்னெழுத்துகளால் பொறித்துக்கொண்ட மகத்தான தலைவர் நெல்சன் மண்டேலா. உலக வரலாற்றிலேயே மண்டேலாவை போல இவ்வளவு நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் எவரும் கிடையாது. 27 வருடங்கள் இரும்புச் சிறைக்குள், மிக அதிகமான கட்டுப்பாடுகளுடன் வைக்கப்பட்டிருந்த ஒரு மனிதன், தன் ஆயுளின் காற்பகுதியை அங்கேயே இழந்துவிட்ட நிலையில், அங்கிருந்து மீண்டுவந்து போராடத் துணிவதென்பது கற்பனைக்கும் எட்டமுடியாத ஒரு வரலாறு.

கொடும் சிறைக் கூடத்தில் மரணத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட அவரை, வீட்டுச் சிறைக்கு மாற்றியது வெள்ளையின அரசு. அவர் மரணமடைந்து விடக்கூடும் என்ற கவலையினால் அல்ல, கொடும் சிறையில் மரணமடைந்து, அவப்பெயர் தங்களுக்கு ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாகவே. ஆனால், மரணத்தின் வாசல்வரை சென்ற அவர் மீண்டெழுந்து வந்தது தென் ஆபிரிக்க கறுப்பின மக்களை மட்டுமல்ல, வெள்ளையின மக்களையும் இன ஒடுக்குமுறையில் இருந்து மீட்டெடுப்பதற்கே என்பதை வரலாறு எழுதிவிட்டது.

'மண்டேலா கறுப்பின மக்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் அவர்தான் தலைவர். அவரால்தான் நாங்கள் இன்று நிம்மதியாக வாழ்கின்றோம்' என்று தென் ஆபிரிக்காவில் வாழும் வெள்ளையினத்தவர்களே வாய்விட்டுக் கூறிக் கலங்கியழும் காட்சிகள் உலக ஊடகங்களில் சாட்சியமாக வெளியாகி, நெல்சன மண்டேலா இனவேறுபாடின்றி நாட்டைக் கட்டியெழுப்பிய சாதனையைப் பறைசாற்றி நிற்கின்றது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் தென் ஆபிரிக்காவில் நடந்த ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கும் வேறுபாடுகள் அதிகம் இல்லை. இலங்கையில் நடப்பதும் தென் ஆபிரிக்காவில் நடந்ததும் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போரே. தென் ஆபிரிக்காவில் பெரும்பான்மையான கறுப்பு இனத்தவர்களை அம்மண்ணை ஆக்கிரமித்த சிறுபான்மையான வெள்ளை இனத்தவர்கள் அடக்கி ஒடுக்கினார்கள். இலங்கைத் தீவில் வாழும் பெரும்பான்மையான சிங்கள இனத்தவர்கள், சிறுபான்மையாக வாழும் தமிழ் இனத்தவர்களை அழித்து ஒடுக்கி, அம்மக்களின் மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வெள்ளையினத்தவர்களிடம் இருந்து கறுப்பர்களின் நலனை பாதுகாப்பதற்காக 'ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ்' என்ற கட்சி உருவானது. அதன் தலைவரான நெல்சன் மண்டேலா, இன வெறி பிடித்த வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து போராடினார். சிங்களப் பேரினவாதத்திடம் இருந்து தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற இயக்கம் தோற்றம் பெற்றது. அதன் தலைவரான வேலுபபிள்ளை பிரபாகரன், இன வெறி பிடித்த சிங்கள ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடினார்.

கறுப்பு இனத்தவர்களும், தமிழ் இனத்தவர்களும் சந்தித்தது இன ஒடுக்குமுறையே என்ற வகையில் தென் ஆபிரிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய நெல்சன் மண்டேலாவையும் தமிழ் மக்கள் மிகவும் உயர்ந்த இடத்திலேயே வைத்துப் பார்த்தார்கள். 27 வருடச் சிறைத்தண்டனையில் இருந்து விடுதலைபெற்று 71 வயதில் அவர் வெளியே வந்தபோது, அந்த மகிழ்ச்சியை தமிழ மக்களும் பகிர்ந்துகொண்டார்கள்.

நெல்சன் மண்டேலா 71 வயதின் பின்னர் தான் தென் ஆபிரிக்காவை இனவெறியற்ற தேசமாக மாற்றினார். ஒட்டுமொத்த உல கத்தையும் தன் பக்கம் ஈர்த்தார்.

இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய ஆபிரிக்க தேசிய காங்கிரசை பயங்கரவாதமாக வர்ணித்து தடை செய்ததுபோலவே, இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி இந்த உலகத்தில் சில முக்கியமான நாடுகள் தடை செய்திருக்கின்றது. ஆனால், வரலாறு தென்ஆபிரிக்க தேசிய காங்கிரசை பயங்கரவாதம் என்ற பழியில் இருந்து விடுவித்து விட்டது. பயங்கரவாதி என்று வர்ணிக்கப்பட்டவர்களாலேயே நெல்சன் மண்டேலாவிற்குச் சிலை வைக்கப்பட்டு, சமாதானத்திற்கான நோபல் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

ஆனால், இன்னமும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக ஒரு சாரார் பார்க்கின்ற நிலைமை தற்போதும் தொடர்கிறது. அடக்குமுறைக்கு எதிராகப் போராடுபவர்களை இந்த உலகம் பயங்கரவாதமாகவே பார்க்கும் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உண்டு. ஆனால், உலகில் அடக்குமுறைக்கு எதிர்ப்புக்காட்டிப் போராடிய சமூகங்களே சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்கின்றன. இதற்கு பிரித்தானியாவிடம் இருந்து போராடி விடுதலை பெற்ற அமெரிக்காவும், தென் ஆபிரிக்காவும் மிகச் சிறந்த உதாரணங்கள்.

எனவே, ஒடுக்குமுறைக்கு எதிராக ஓய்வின்றிப் போராடவேண்டும். எத்தனை அழுத்தங்கள், எத்தனை அடக்குமுறைகள், எத்தனை தடைகள் வந்தபோதும் அத்தனையையும் எதிர்த்துநின்று இறுதிவரை உறுதியோடு போராட வேண்டும். இதுதான் நெல்சன் மண்டேலாவின் வரலாறு எமக்குச் சொல்லிச் செல்லும் செய்தி.

ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் ஒவ்வொரு மனிதனுக்கும் நெல்சன் மண்டேலா சிறந்த வழிகாட்டியாக, நம்பிக்கை நட்சத்திரமாக நிச்சயம் இருப்பார்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளணி மற்றும் வளப்பற்றாக்குறைகளுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை


(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை பல்வேறுபட்ட ஆளணி மற்றும் வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இவ்வைத்தியசாலை முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள முல்லைத்தீவு தெற்கு கிராமசேவையாளர் பிரிவின் உண்ணாப்புலவு கிராமத்தில் (முல்லைத்தீவு நகரத்தின் மையப் பகுதியில்) முல்லைத்தீவு- கொக்கிளாய் பி 297 பாதைக்கு அருகில் 1945 இல் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலை என்ற பெயரில் உருவானது.

1945 தொடக்கம் 2004வரை அதே இடத்தில் இயங்கியது. சுனாமித்தாக்கத்திற்குப்பின் பாதுகாப்பு நலன்கருதி முல்லைத் தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் குமாரபுரம் கிராமசேவையாளர் பிரிவில்(அமைவிடமானது) ஏ-34 முல்லைத்தீவு ஊடாக முள்ளியவளை மாங்குள வீதிக்கு அருகில் 2005 இல் முல்லைத் தீவு மாவட்ட பொது வைத்தியசாலையாக தோற்றம் பெற்றது.

2005 தொடக்கம் 2009 வரை இயங்கி பின் வன்னியில் ஏற்பட்ட போர் காரணமாக இயங்காது மீண்டும் மீள்குடியேற்றத்தின் பின் 2010 இல் இருந்து இயங்கி வருகின்றது.



இங்கு நிரந்தர சட்ட வைத்திய அதிகாரி இல்லை. அத்துடன் வைத்திய நிபுணர்கள் 8பேர் தேவை. 4 பேரே உள்ளனர். நிரந்தர மகப்பேற்று வைத்திய நிபுணரும் இல்லை. வைத்திய உத்தியோகத்தர் 42 பேர் தேவைப்படுகின்ற வேளை 34 பேரும் ப ல் வைத்தியர்கள் 4 பேர் தேவையாக உள்ள நிலையில் 2 பேரும் தாதியர் 66 பேர் தேவையாக உள்ள நிலையில் 19 பேரும் மருத்துவமாது 12 பேர் தேவையாகவுள்ள நிலையில் 7 பேரும் உள்ளனர்.

மேலும் தாதியர் பரிபாலகி 3பேர் தேவையாகவுள்ள நிலையில் ஒருவரும் இல்லை. தாதியர் 10 பேர் தேவையாகவுள்ள நிலையில் ஒருவரே உள்ளார். பரிசாரகர் 55 பேர் தேவையாகவுள்ள நிலையில் 21 பேரே உள்ளனர்.

இயன் மருத்துவ சிகிச்சையியலாளர், தொழில்வழி சிகிச்சையியலாளர் இருவர் தேவையாகவுள்ளநிலையில் ஒருவரும் இல்லை. கண் வைத்திய சிகிச்சை உதவியாளர் ஒருவர் தேவையாகவுள்ள நிலையில் இங்கு ஒருவரும் இல்லை.

மருந்தாளர் 6 பேர் தேவையாகவுள்ள நிலையில் 2பேரே உள்ளனர். உளவியலாளர் ஒருவரும் உள சமூகவியலாளர் 2 பேரும பேச்சு சிகிச்சையாளர் ஒருவரும் இதய படப்பிடிப்பாளர் (ECG) 2பேரும் தேவையாகவுள்ள நிலையில் ஒருவரும் இல்லை.

கதிர் படப்பிடிப்பாளர் (எக்ஸ்ரே) 3 பேர் தேவையாகவுள்ள நிலையில் 2 பேரும் பொது முகாமைத்துவ உதவியாளர் 6 பேர் தேவையாகவுள்ள நிலையில் ஒருவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் 5 பேர் தேவையாகவுள்ள நிலையில் ஒருவரும் சிற்றூழியர் மேற்பார்வையாளர் 4 பேர் தேவையாகவுள்ள நிலையில் 2 பேரும் சாரதி 4பேர் தேவையாகவுள்ள நிலையில் 3 பேரும் சமையலாளர் 6 பேர் தேவையாகவுள்ள நிலையில் 2 பேரும் ஆய்வு கூட உத்தியோகத்தர் 4 பேர் தேவையாகவுள்ள நிலையில் ஒருவரும் உள்ளனர். ஆய்வு கூட தொழிலாளி, நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் இல்லை.

மின் இணைப்பாளர், தச்சுத் தொழிலாளி, கட்டடத் தொழிலாளி, தையலாளர். இயந்திர இயக்குநர், குழாய் பொருத்துநர் (பைப் லைன்), பூந்தோட்ட பராமரிப்பாளர் ஆகியோர் இங்கு இல்லை.

தொலைபேசி இயக்குநர் 2 பேரும் லிப்ற் உயர்த்தி இயக்குநர் ஒருவரும் தேவை. பிரேத அறையுண்டு. குளிரூட்டல் வசதி, நிரந்தர வாகன தரிப்பிட வசதி என்பன இல்லை. வைத்தியசாலை உள்வீதி (200 மீற்றர்) புனரமைக்கப்படவில்லை. வைத்தியசாலை பாதுகாப்பு சுற்றுவேலி சீரில்லை.

தினமும் 50 உள்நோயாளர்களும் 300 இற்கு மேற்பட்ட வெளிநோயாளர்களும் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

உரியவர்கள் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

(ம-267)




# வைத்தியசாலை சிற்றூழியர் நியமனத்தில் முறைகேடு

## வடமாகாணசபை உறுப்பினர் சிவமோகன்

தேர்தல் அறிவிக்கப்படவிருந்த நிலையில் அவசர-அவசரமாக நியமிக்கப்பட்ட வைத்தியசாலை சிற்றூழியர் நியமனத்தில் முறைகேடுகள் உள்ளதாக வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த 11 ஆம்திகதி நடைபெற்ற வடமாகாண சபை அமர்வின் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் வடமாகாணசபையில் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்ட ரீதியில் வழங்கப்பட்ட வைத்தியசாலை சிற்றூழியர் நியமனத்தில் முறைகேடுகள் காணப்படுகின்றது. நீண்டகாலமாக யுத்த சூழலுக்கு மத்தியிலும் தொண்டர் சிற்றூழியர்களாக பணியாற்றிய பலருக்கு நியமனங்கள் வழங்கப்படாது அரசியல் செல்வாக்கு காரணமாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட வதிவிடச் சான்றிதழ்கள் கவனத்தில் கொள்ளப்படாதும் மோசடியாக பெறப்பட்ட வதிவிடச் சான்றுகளின் அடிப்படையிலும் இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வடமாகாணத்தை சாராத வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பலர் அமைச்சர்களின் ஆதரவுடன் வடபகுதியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.


இது ஒரு முறைகேடான அரச நியமனம் ஆகும். இது தேர்தலை நோக்கமாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது. இதனால் எமது பகுதியைச் சேர்ந்த பல காலமாக தொண்டர்களாக பணியாற்றிய பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந் நியமனம் தொடர்பாக உடனடியாக விசாரணை குழு அமைக்கப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இதற்கு பதிலளித்து பேசிய வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என உறுதியளித்தார்.

(ம-250)

# வீதியைப் புனரமைத்து போக்குவரத்துக்கு உதவுங்கள்



ஏ-35 பாதையான முல்லைத்தீவு வீதியினூடாக இணை கொண்டு பொது மண்டபத்திற்கு செல்லும் பாதை போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது.

இவ்வீதியில் மக்கி மண்ணைப் போட்டதால் பயணம் செய்ய முடியாது தவித்து நிற்கிறோம்.

இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி ஆவண செய்யுமாறு தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் செய்யப்படவில்லை.

எனவே போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம)





தர்மபுரம் புனித லூர்க்கா முன்பள்ளி மாணவர்களை தரம் 1 இற்கு அனுப்பும் பிரியாவிடை நிகழ்வு அண்மையில் முன்பள்ளியில் இடம் பெற்ற போது...

(படங்கள்:- கண்டாவளை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியர்கள் இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஆடைகளை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரண்டு இந்தியர்களை தாம் கைது செய்ததாக மன்னார் சிலாவத்துறை பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபர்கள் சுற்றுலா விசா அனுமதியில் இலங் கைக்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

மன்னார் அரிப்பு மற்றும் சவரியபுரம் ஆகிய பகுதிகளில் வர்த்த கத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மன்னார் நீதவான் முன்னிலையில் விரைவில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-2)

# மருந்து வகைகளுக்கு விரைவில் விலைக்கட்டுப்பாடு விதிக்கப்படும்

## பாராளுமன்ற விவாதத்தில் சுகாதார அமைச்சர் உரை

மருந்துகளுக்கான ஸ்திரமான விலைக் கட்டுப்பாட்டை அடுத்த மாதம் முதல் அமுல்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தேசிய மருந்து பொருட்கள் கொள்கை தொடர்பான சட்ட மூலம் அடுத்த வருட முற்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 2005ஆம் ஆண்டிலிருந்து இதுவரை காலமும் வைத்தியர்கள், பயிற்சி வைத்தியர்கள் என 32 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தட்டுப்பாடின்றி மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பங்களாதேஷ், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகள் எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் உலக சுகாதார நிறுவனத்தின் பாராட்டைப் பெறும் வகையில் எமது சுகாதாரத்துறை உயர்தரத்தில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

டெங்கு நோயினால் ஏற்படும் மரணங்களை வெகுவாகக் குறைக்க முடிந்துள்ளது. கடந்த வருடங்களோடு ஒப்பிடுகையில் 2012ஆம் ஆண்டில் டெங்கு நோயாளர்கள் 47 ஆயிரத்து 823 பேராக இருந்த போதிலும் 2013 இல் அதனை 27ஆயிரத்து 991 ஆக குறைக்க முடிந்துள்ளது.

இந்த ஆண்டில் டெங்கு நோயினால் பலியானோரின் வீதம் 2.8 வீதமாக குறைவடைந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும்.

சிறுநீரக நோய் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அதற்கான மருத்துவ உபகரணங்களின் குறைபாடுகள் பற்றியும் எதிர்க்கட்சியினரால் குற்றஞ் சாட்டப்பட்டன. யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் சிறுநீரக நோய்த்தடுப்பு தொடர்பாக பாரிய செயற்றிட்டங்கள் வெளிநாட்டுக் கடன் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2013 முதல் 2018 வரைக்குமான புதிய ஐந்து வருட திட்டம் சுகாதாரத் துறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் பாரிய பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இலங்கையில் ஒரு நோயாளிக்காக 60 டொலரை அரசாங்கம் செலவளித்து வருகிறது. அமெரிக்காவில் ஒரு நோயாளிக்காக 22 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவிடப்படுகிறது. ஆசியாவைப் பொறுத்தவரை எமது வைத்தியத்துறையே முன்னணியிலுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை மனிதரின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. மகப்பேற்று மரணம் மிகவும் குறைந்துள்ளது.

சுகாதார அமைச்சிற்காக வரவு செலவு திட்டத்தில் 2013 ஆம் ஆண்டிறகாக 117 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எனினும் 2014 இற்கென 143 பில்லியன் ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார்கள். 18 பில்லியன் ரூபா எமக்கு வெளிநாட்டுக் கடனாகக் கிடைப்பதோடு இவற்றைக் கொண்டு வைத்திய துறையில் சிறந்த முன்னேற்றகரமான சேவைகளை எம்மால் வழங்க முடியும்.

2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாம் நிரந்தரமான மருந்து கட்டுப்பாடடை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

நாம் பங்களாதேஷ் அரசாங்கத்தோடு மருந்து இறக்குமதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளோம். அதே போன்று விரைவில் மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடனும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இதன் மூலம் தட்டுப்பாடின்றி மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர நடவடிக்கைகளில் ஊழல் மோசடிகளைத் தவிர்க்கவும் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-2)

# பாராளுமன்றத்தை பொதுமக்கள் முன்னனுமதியின்றி பார்வையிடலாம்

## சபாநாயகர் அறிவிப்பு

முன் அனுமதியின்றி பொதுமக்கள் பாராளுமன்ற கட்டடத் தொகுதியை பார்வையிட வரலாம் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் அறிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியை பார்வையிடவோ, விவாதங்கள் நடைபெறுவதை பார்வையிடவோ இனி முன் அனுமதிபெறத் தேவையில்லை. நேற்று முதல் பாராளுமன்றம் பொதுமக்களுக்காக திறந்துவிடப்படுகிறது என்று சபாநாயகர் அறிவித்தார். நேற்று முன்தினம் பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பாக பேசப்பட்டபோது சகல தரப்பினரும் இதற்கு ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்திற்காக நேற்று முன்தினம் காலை பாராளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியபோதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்

பாராளுமன்ற கட்டடத் தொகுதியை, விவாதங்களை பார்வையிடுவதற்காக வரும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், பாராளுமன்ற நுழைவாயினுள் உள்ள வழமையான பாதுகாப்பு சோதனைகளின் பின்னர் உள்ளே செல்ல முடியும்.

இதற்கு முன்னர் பாராளுமன்ற படைக்கல சேவிதருக்கு முன்கூட்டியே அறிவித்து வருகிறவர்களின் பெயர்ப்பட்டியல் முன்கூட்டியே அனுப்பிவைக்கப்பட்டு அனுமதி பெற வேண்டும்.


அந் நடைமுறை எதிர்வரும் காலங்களில் இல்லாமல் பொதுமக்கள் வரமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற ஜயந்திபுர நுழைவாயிலுக்கு அருகேயுள்ள வாகன தரிப்பிடத்தில் பொதுமக்கள் கண்டுகளிக்கும் விதத்தில் பாரிய தொலைக்காட்சியொன்றும் பொருத்தப்பட்டது.



இதேபோன்று விவாதங்கள் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பவும் சபாநாயகர் நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் அடுத்த கட்டமாக பொதுமக்களுக்காகவும் பாராளுமன்றம் திறக்கப்பட்டுள்ளது. (செ-2)





கென்யாவுக்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நைரோபியில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு விஜயம் செய்தார். அப்போது ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் பார்வைக்கு வைப்பதற்காக கண்டி பெரஹர வரையப்பட்ட ஓவியம் ஒன்றை இலங்கையின் சார்பில் ஜனாதிபதி பரிசளித்தார். தமது விஜயத்தின் நினைவாக அலுவலக வளாகத்தில் ஆபிரிக்க இறப்பர் மரக் கன்று ஒன்றையும் ஜனாதிபதி நாட்டி வைத்தார்.

# மனிதவுரிமை பேரவை அமர்வில் லலித் வீரதுங்க பங்கேற்பார்

## யசூசி அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளில் பங்கேற்பார் என இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஸி தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் எடுக்கப்பட்ட முனைப்புக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் லலித் வீரதுங்க தெளிவுபடுத்துவார் என குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மாதத்தில் லலித் வீரதுங்க ஜெனீவாவிற்கு விஜயம் செய்வார் எனத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் ஆரம்பமானதற்கு முன்னதாக லலித் வீரதுங்க, ஜெனீவாவிற்கு விஜயம் செய்து நிலைமைகளை தெளிவுபடுத்துவார் என அகாஸி குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமது கடமைகளைச் செய்வதற்காகவே அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் எனவும் அவரின் விஜயம் பற்றி எதுவும் குறிப்பிட வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# மஹிந்தவை மீண்டும் ஜனாதிபதியாக்கினால் எமது வாழ்வை வளமாக்கிக் கொள்ளலாம்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதன் மூலம் இம்மாவட்டத்தை மேலும் வளமான மாவட்டமாக மாற்ற முடியும் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற நவகிரி நகர் கிராமத்திற்கு உத்தியோகபூர்வமாக மின்சாரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலே பலமான எதிர்க்கட்சி ஒன்று இல்லை. எதிர்க் கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சி பல வழிகளிலும் சிறந்த தலைமைத்துவமின்றி பலமிழந்து நிற்கின்றது. இதனால் ரணில் விக்ரமசிங்கவினால் ஜனாதிபதியாக வரமுடியாத நிலை இன்று காணப்படுகின்றது.

எனவே, அனைத்து சிங்கள பெரும்பான்மையான மக்கள் அனைவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜப்க்ஷவின் பின் அணிதிரண்டு நிற்பதனால் அடுத்த முறையும் அவர் ஜனாதிபதியாவது உறுதியாகிவிட்டது. அதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை.

எனவே, தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் சார்பாகவோ அல்லது முஸ்லிம் மக்கள் சார்பாகவோ எவரும் இந்த நாட்டிலே ஜனாதிபதியாக வரமுடியாது. என்றாலும் ஜனாதிபதியை நிர்ணயிக்கின்றவர்களாக நாங்கள் காணப்படுகின்றோம்.

எனவேதான் தற்போதைய எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதன் மூலம் எமது உரிமைகளைப் பெற்று வாழ்க்கையையும் வளமாக்கிக் கொள்ளலாம் என்றார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் போக்கு...?

கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற இந்தியாவின் ஐந்து மாநிலங்களுக்கான தேர்தல்களின் முடிவுகள் கடந்த வாரம் வெளியாகின. அதன்படி பாரதீய ஜனதாக் கட்சி நான்கு மாநிலங்களில் ஏனைய கட்சிகளைப் பார்க்கிலும் கூடுதலான ஆசனங்களை வென்றிருந்தது. எனவே, அடுத்த ஏப்ரல் மாதம் அளவில் நடைபெறவிருக்கும் இந்தியப் பொதுத் தேர்தலில் பா.ஜ.க வெற்றியீட்டி அரசமைக்கும் என்றதோர் அபிப்பிராயம் உருவாகிவருகிறது.

இந்தியக் காங்கிரஸ் கட்சி ஆட்சியின் கீழ் இலங்கை; பல்வேறு நெருக்குதல்களுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகிவரும் நிலையில் பா.ஜ.க பதவிக்கு வந்தால், இலங்கை மீதான நெருக்குதல்கள் அதிகரிக்கலாம் என்றதோர் அபிப்பிராயமும் உருவாகி வருகிறது. குறிப்பாக 13-வது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாகவும் ஐ.நா மனித உரிமைப்பேரவையிலும் இந்தியா இதுவரை செலுத்திவந்த தாக்கம் அதிகரிக்கலாம் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

இருந்தபோதிலும் கடந்தகாலங்களில் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான இந்திய அரசாங்கம், இலங்கை மீது நெருக்குதல்களை தொடுத்து வந்தமையினால், எதிர்வரும் லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைய வேண்டுமென்று அரசாங்கத்திலுள்ள சிலர் கருதலாம். மீனவர் பிரச்சினையை தீர்ப்பதில் பா.ஜ.க. அரசாங்கம் ஒன்று, காங்கிரஸ் அரசாங்கம் ஒன்றைப் பார்க்கிலும், சாதகமானதாக அமையலாம் என கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனரட்ன ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

பா.ஜ.க. இந்துத் தீவிரவாதக் கட்சியெனக் கூறப்படுவதனால், அக்கட்சி பதவிக்கு வரும் பட்சத்தில் இலங்கையில் இந்துக்கள் அதிகமாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் விடயத்தில் அக்கட்சி காங்கிரஸ் கட்சியைவிட கூடுதலான அக்கறை செலுத்தலாம் என்றும் இலங்கை சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் கொண்டிருக்கும் நெருங்கிய உறவின் காரணமாக இலங்கை அரசாங்கம் பல பிரச்சி



னைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை ஆராயுமுன் உண்மையிலேயே பா.ஜ.க பதவிக்கு வரும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை மீண்டும் ஒருமுறை ஆராய்வது பொருத்தமாகும்.

வெளியிடப்பட்டிருக்கும் தேர்தல் முடிவுகளை கடந்த தேர்தல்களோடு ஒப்பிடும் பொழுது அதனை திட்டவட்டமாகக் கூற முடியாமல் இருக்கிறது. நவம்பர் மாதம் 15 ஆம்திகதி இந்தியாவில் மிசோராம், மத்தியப் பிரதேஸ், ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கார் ஆகிய மாநிலங்களிலும் தேசியத் தலைநகர் டெல்லியூனியன் பிரதேசத்திலும் தேர்தல்கள் நடைபெற்றன. அவற்றில் மிசோராம் மாநிலத்தில் மட்டுமே காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. அங்கு நாற்பது தொகுதிகளில் முப்பது தொகுதிகளை அக்கட்சி பெற்றுக் கொண்டது.

ஏனைய நான்கு இடங்களிலும் அறுதிப் பெரும்பான்மை அல்லது மிகக் கூடுதலான ஆசனங்களைபா.ஜ.க. பெற்றிருந்தது. ஆனால், அவற்றில் மத்தியப்பிரதேஸ், ராஜஸ்தான், சத்தீஸ்கார் ஆகிய மூன்று மாநிலங்களில் மட்டுமே பா.ஜ.க பதவிக்கு வரமுடியும் டெல்லி யூனியன் பிரதேசத்தலுள்ள 70 தொகுதிகளில் 32 ஆசனங்களை மட்டுமே அக்கட்சி வென்றது. அதற்கு கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைக்கவும் கடக்சியொன்று இல்லை.

எட்டு ஆசனங்களைப் பெற்ற காங்கிரஸ் கட்சி பா.ஜ.க.வோடு சேராது. ஊழல் எதிர்ப்புக் குரல் எழுப்பி போட்டியிட்ட ஆம் ஆத்மி என்ற புதிய கட்சி 28 ஆசனங்களை வென்றுள்ள போதிலும் அக்கட்சி தாம் பா.ஜ.க.வுடன் சேரப் போவதில்லை மறுதேர்தலுக்கு தயாராகிறோம் என்று கூறுகிறது. அம்மாநிலத்தில் பா.ஜ.க.வின் ஆசனங்கள் 23 இலிருந்து 32 ஆக அதிகரித்த போதிலும் 3 வீதத்தால் வாக்குகள் குறைந்துள்ளன. எனவே மறுதேர்தல் நடைபெற்றால் ஆம்ஆத்மி கட்சி மேலும் முன்னேறவும் கூடும்.

மத்தியப்பிரதேஸ், ராஜஸ்தான் மற்றும் சத்திஸ்கார் ஆகியஇரு மாநிலங்களை எடுத்துக் கொண்டாலும் அவற்றில் மத்தியப்பிரதேஸ் மற்றும் சத்திஸ்கார் ஆகிய இரு மாநிலங்களில் ஏற்கனவே இரண்டுமுறை பதவியில் இருப்பது பா.ஜ.கவே. எனவே, அக்கட்சி புதிதாக அவற்றில் வெற்றி பெற்றதாகக் கூற முடியாது. போதாக்குறைக்கு சத்தீஸ்காரில் பா.ஜ.க விடம் இருந்த 50 ஆசனங்கள் 49 ஆக குறைந்துள்ளது.

பா.ஜ.க. புதிதாக ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது ராஜஸ்தானில் மட்டுமே. அம்மாநிலத்தில் பதவி தொடர்ந்தும் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய இரு பிரதான கட்சிகளிடையே கை மாறியுள்ளது. எனவே, அங்கும் பா.ஜ.க. அலை வீசியது என்று கூறுவதற்கில்லை. அங்கு வழமைபோல பதவியில் இருப்பவர்கள் தூக்கியெறியப்பட்டுள்ளனர்.

எனவே, பா.ஜ.க.வுக்கு இந்தியாவில் பாரிய அலை வீசுகிறது என்று இந்த தேர் தல் முடிவுகளை வைத்துக் கூற முடியாது. அதே வேளை மாநில தேர்தல்களில் வெற்றி பெற்ற கட்சி லோக்சபா தேர்தலில் தோல்வியுற்ற வரலா றும் உண்டு.

இதற்கு முன்னர் பா.ஜ.க. இந்தியாவை ஆட்சி செய்யும் போது அதாவது, 2003 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேஸ், ராஜஸ்தான் மற்றும் சத்திஸ்கார் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் பா.ஜ.க.வே வெற்றி பெற்றது. எனவே, அக்கட்சி 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலை முன்கூட்டியே 2004 ஆம் அண்டு ஏப்ரல் மாதத்தில் நடத்தியது. அப்போது காங்கிரஸ் க்கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியே பதவிக்கு வந்தது. எனவே, அடுத்த பொதுத் தேர்தலில் பா.ஜ.க. பத விக்குவரும்என்றுகூற, தற் போதைய தேர்தல் முடிவுகள் போதுமானதாக இல்லை.

இந்தியாவானது, பல மொழிகளை பேசும் பல்வேறு சமூகங்கள் வாழும் பாரியதோர் நாடாகும். அங்கு அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட 22 பிராந்திய மொழிகள் உள்ளன. அவற்றுக்குப் புறம்பாக பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பேசும் 26 மொழிகள் இருக்கின்றன. பல மாநிலங்கள் வெளிநாடுகளின் எல்லைகளில் உள்ள. எனவே, ஒவ்வொரு மாநிலத்தையும் பாதிக்கும் இன, மத, சமூக, அரசியல் பிரச்சினைகள் வேறுபட்டவையாக இருக்கின்றன. இதன் காரணமாகவே ஒருசில மாநிலங்களின் தேர்தல் முடிவுகளைக் கொண்டு தேசிய மட்டத்திலான அரசியல் சாய்வுகளை எதிர்வு கூறுவது கடினமாக இருக்கிறது.



பா.ஜ.க,பொதுத்தேர்தலில் பதவிக்கு வந்தாலும் இலங்கை விடயத்தில் அதன் கொள்கை காங்கிரஸ்ஸின் கொள்கையைப் பார்க்கிலும் பாரியளவில் வித்தியாசமாக இருக்காது. ஏனெனில் இந்திய வெளிநாட்டுக் கொள்கை அனேகமாக எந்தக் கட்சி பதவியில் வந்தாலும் வேறுபடுவதில்லை. ஆனால், சில விடயங்களில் அழுத்தம் கூடலாம், குறையலாம்.

பதவிக்கு வந்தபின்னர், கொள்கை எதுவாக இருந்தாலும் தேர்தலுக்கு முன்னர் இந்தியாவின் இரு பிரதான கட்சிகளினதும் இலங்கை தொடர்பான நிலைப்பாடு சற்று இறுக்கமாக அமையலாம் என்று ஊகிக்கலாம். இந்திய பொதுத் தேர்தல் அனேமாக எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலேயே நடைபெறும். அதாவது, மார்ச் மாதத்தில் பிரசார வேலைகள் நடைபெறும். மார்ச் மாதத்திலேயே ஐ.நா. மனித உரிமை பேரவையின் அடுத்த அமர்வு இடம் பெறவிருக்கிறது.

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக தமிழகத்தில் சகல கட்சிகளும் காங்கிரஸ் கட்சியுடன் மோதிக்கொண்டு இருக்கின்றன. எனவே, தமிழகத்தில் உள்ள 40 லோக்சபா ஆசனங்களுக்காக அங்குள்ள கட்சிகளை தம்பக்கம் சாய்த்துக்கொள்ள காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய இருகட்சிகளும் கடும் போட்டியில் இறங்கலாம். இலங்கைப் பிரச்சினை அதற்கு சிறப்பு ஆயுதமாகலாம்.

எனவே, இரு கட்சிகளும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கையை நெருக்குவதில் போட்டி போடலாம். இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தாம் மார்ச் மாதத்தில் சர்வதேச விசாரணையொன்றை கோரப் போவதாக பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் கூறியிருக்கும் நிலையில் இந்தப் போட்டி இலங்கைக்கு பாதகமாக அமையலாம்.

ஏனெனில் இந்தியா இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தால் மேலும் பல நாடுகளும் இந்தியாவைப் பின்பற்றும். கடந்த வருடமும் இந்திய அரசாங்கத்தின் முடிவு வேறுபல நாடுகளின் முடிவுகளில் மாற்றத்தைக் கொண்டுவந்ததாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ் கூறியிருந்தார்.

பா.ஜ.க. பதவிக்கு வந்தால் தற்போது குஜராத் முதல்வராக இருக்கும் நரேந்திர மோடியே பிரதமராவார். அவர், 1998 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டுவரை பதவியிலிருந்த ப.ஜ.க. பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயைப்போல் மிதவாதி அல்ல. மோடி ஒரு கடும் போக்குவாதியாகவே கருதப்படுகிறார். 2000 ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்ட- 2002 ஆம் ஆண்டு குஜராத் இனக் கலவரம் தொடர்பாக அவரும் குற்றம் சாட்டப்பட்டுவருகிறார். இதனால், 2005 ஆம் ஆண்டு அவருக்கு அமெரிக்கா விசா வழங்கவும் மறுத்துவிட்டது.

அவர் பிரபல்யம் அடைந்துவருவதைக் கண்ட சீன அரசு, சீனாவுக்கு விஜயம் செய்யுமாறு 2011 ஆம் ஆண்டு அவருக்கு அழைப்பு விடுத்தது. அதன் பிரகாரம் அவர், 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சீனாவில் ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். ஆனால், சீனாவிடயத்தில் அவரது நிலைப்பாடு இன்னமும் கடுமையானதாகவே இருக்கிறது. பாகிஸ்தான் மற்றும் சீனாவிடயத்தில் கடுமையான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அவர், கடந்த ஒக்டோபர் மாதமும் கூறியிருந்தார்.

இலங்கை அரசாங்கம் சீனா, மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் மிக நெருங்கிய தொடர்பை வைத்திருக்கிறது. மோடி பதவிக்கு வந்து, இவ்விரு நாடுகளுடன் மோதல்களை ஏற்படுத்திக்கொண்டால், இலங்கையும் சில சிக்கல்களை எதிர்நோக்கலாம்.

அவ்வாறான பிரச்சினைகள் உருவாகாவிட்டால், இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இருக்கும் அக்கறை, பா.ஜ.க.வுக்கு இருக்கமென்று கூறமுடியாது. எனவே,13- வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை பாதுகாக்கும் விடயத்தில் பா.ஜ.க. காங்கிரசைப்போல உறுதியாக இருக்காது என்று ஊகிக்க முடிகிறது.

அண்மையில் இலங்கை அரசாங்கம், 13-வது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச்செய்ய முற்பட்டமையும் இந்திய அரசாங்கம் அதனைத் தடுத்து வடமாகாணசபைத் தேர்தலை நடத்தும் வகையில் இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைப் படையினருக்கு இந்தியப் படையினர், பயிற்சி வழங்குவதை தாம் ஏற்கவில்லையென பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான இல.கணேசன் அண்மையில் கூறியுள்ளார். அது இலங்கை எதிர்நோக்கவேண்டிய பிரச்சினைகளில் ஒன்றாக அமையலாம்.

இருந்தபோதிலும் பல கட்சிகள் எதிர்க் கட்சிகளில் இருக்கும் போது காட்டும் வீரம், ஆவேசம் ஆகியவற்றை பதவிக்கு வந்தால் காட்டுவதில்லை. ஏனெனில் வீரம், ஆவேசம் ஆகியவற்றை பதவிக்கு வருவதற்காகவே அவர்கள் பாவிக்கிறார்கள். அதேவேளை அரசாட்சி, பொறுப்பு என்ற ஜதார்த்தத்தை அவர்கள், பதவிக்கு வந்ததன் பின்னரே உணர்ந்துகொள்வர். 1998 ஆம் ஆண்டு பதவிக்கு வருமுன்னரும் பா.ஜ.க. பெரும் பயங்கரதோற்றத்தையே உலகுக்குக் காட்டிக் கொண்டது. ஆனால், வாஜ்பாய் அரசு ஒட்டுமொத்தத்தில் காங்கிரஸ் ஆட்சியைப்போல்தான் இருந்தது.

-எம்.எஸ்.எம். ஐயூப்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

667

## காக்கா ஏன் கறுப்பாச்சு......?



ரொம்ப காலத்துக்கு முன்னாடி காக்கா வெள்ளையா இருந்துச்சுசாம்.

வெள்ளைன்னா அப்படி ஒரு வெள்ளை. அப்ப எல்லாம் காக்கா ரொம்ப தூரம் பறக்குமாம்.

சூரியன் வரைக்கும் பறந்து போகுமாம்.

அப்படி இருந்த காக்கா எப்படி கருப்பாச்சு?

சூரியபூர் நாட்டோட ராஜாவுக்கு ரொம்ப வருஷம் கழிச்சு அழகான இளவரசி பிறந்தாங்கலாம்.

கொள்ளை அழகு.

குழந்தையில இருந்து வீட்டை விட்டே வெளிய வரலையாம்.

நல்ல பெரியவங்களாகி கல்யாண வயசுல வெளிய விளையாட வந்தாங்கலாம்.

அவங்க பேரு அங்கிகா.

அவங்க விளையாடறத பாத்த சூரியனுக்கு அவங்களை ரொம்ப பிடிச்சு போச்சாம்.

இளவரசிக்கும் சூரியனை பிடிச்சிடுச்சாம்.

தினமும் விடியற்காலையில எழுந்ததில இருந்து சூரியன் கிட்ட தான் பேசிட்டு இருப்பாங்கலாம்.

சூரியனும் பூமிய சுத்திக்கிட்டே இளவரசி கிட்ட பேசிட்டு இருந்ததாம்.

ரொம்ப நல்ல நண்பர்களா மாறிட்டாங்க.

ஒருநாள் சூரியன், இந்த இளவரசிக்கு பரிசு கொடுக்க நினைச்சுதாம்.

சூரியன் கிட்ட வரைக்கும் காக்கா பறந்துச்சு இல்லையா?

அதனால சூரியன் ஒரு காக்காவ கூப்பிட்டு பையில சந்தனம், வாசனை திரவியங்கள், முத்துமாலை எல்லாம் கொடுத்து இளவரசிகிட்ட கொடுத்துடுன்னு சொல்லிட்டு மறஞ்சி போச்சாம்.

சாய்ந்திரம் ஆகிடுச சுன்னா சூரியன் தூங்க போயிடும் இல்லையா?

காக்கா அந்த பைய தூக்கிகிட்டு இளவரசி இருந்த அரண்மனைய நோக்கி பறந்து போயிட்டு இருந்துச்சாம்.

வழியில திருமண ஊர வலம் போயிட்டு இருந்திருக்கு.

நிறைய பழங்கள், உணவுப் பொருட்கள் எடுத்துட்டு போனாங்க போல.

காக்காவுக்கு கொஞ்ச உணவாச்சும் கிடைக்குமேன்னு ஆசை.

அரண்மனைக்கு போயிட்டு வந்தா தாமதமாகி போகும்.

சரின்னு அந்த பைய ஒரு மரத்தில மாட்டிட்டு திருமண ஊர்வலத்துக்கு போச்சாம்.

மரத்துக்கு கீழ இருந்த ஒருத்தன் இந்த காக்கா பைய வெச்சுட்டு போனதை பாத்து கிட்டே இருந்தானாம்.

நல்ல வாசனை வந்தது.

அதனால மரத்தில ஏறி பைய திறந்து பாத்து இருக்கான்.

பைக்கு உள்ள சூரியன் கொடுத்து அனுப்பின எல்லா பொருளையும் பாத்து சொக்கி போயிட்டானாம்.

உடனே எல்லாத்தையும் எடுத்துகிட்டு மரத்தில இருந்த குப்பை எல்லாம் பையில எடுத்து போட்டுட்டு கிளம்பிட்டான்.

காக்கா நல்லா சாப்பிட்டு வந்துச்சாம்.

பைய எடுத்துகிட்டு இளவரசி அரண்மனைக்கு போயிடுச்சாம்.

அங்க இளவரசிகிட்ட சூரியன் கொடுத்த பைய கொடுத்துச்சாம்.

திறந்து பார்த்த இளவரசிக்கு அதிர்ச்சி.

ச்சா..இந்த சூரியன் ஏன் இப்படி பண்ணிடுச்சு.

என் மேல அன்பே இல்ல.

எல்லாம் நடிப்பு.

அவன் பேச்சு இனிமேல் டூன்னு சொல்லிட்டு பைய விசிரியடிச்சிடுச்சாம்.

மறுநாள் காலை, சந்தோஷமா இளவரசிய பார்க்கலாம்ன்னு வந்த சூரியனுக்கு தூக்கி வாரி போட்டுச்சாம்.

அந்த பை கீழ விழுந்திருந்தத பாத்தே ஏதோ தப்பு நடந்திருக்குதுன்னு புரிஞ்சிடுச்சாம்.

பயங்கர கோபம் வந்துடுச்சாம்.

காக்காவை பார்த்து கோவமா பாத்த உடனே வெள்ளையா இருந்த காக்கா கறுப்பா மாறிடுச்சாம்.

அதனால தான் சூரியன் கிட்டகூட பறக்க முடியாம போச்சாம்.

கிட்ட இருந்த சூரியனும் பூமி மேல கோபம் வந்து தூரமா போயிடுச்சாம்.

இப்ப தெரிஞ்சதா காக்கா ஏன் காக்கா கறுப்பாச்சுன்னு?

## 12.2013 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1256- மொங்கோலியப் பேரரசன் குலாகு கான் அலாமுட் (இன்றைய ஈரானில்) என்ற இடத்தைக் கைப்பற்றி அழித்தான்.
- 1799-முற்றிலும் உள்ளூர் மக்களைக் கொண்ட முதலாவது ஆங்கில செமினறி கொழும்பில் அமைக்கப்பட்டது.
- 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளை டென்னசியில் முற்றாகத் தோற்கடித்தனர்.
- 1891-ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப் பந்தாட்டத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தினர்.
- 1905-அலெக்சாண்டர் புஷ்கினின் கலாசாரப் பழமைகளைப் பேணும் பொருட்டு சென் பீட்டர்ஸ்பேர்க்கில் புஷ்கின் மாளிகை அமைக்கப்பட்டது.
- 1914-முதலாம் உலகப்போர்: சேரிபியா இராணுவம் பெல்கிரேடை மீண்டும் கைப்பற்றியது.
- 1941-பெரும் இன அழிப்பு: உக்ரேனின் ஆர்க்கிவ் நகரில் 15 ஆயிரம் யூதர்கள் நாசிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1960-மன்னர் மகேந்திரா நேபாளத்தின் அரசைக் கலைத்து நாட்டின் முழு அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்டார்.
- 1965-த சவுண்ட் ஒஃப் மியூசிக் திரைப்படம் வெளியானது.
- 1970-சோவியத் ஒன்றியத்தின் வெனேரா 7 விண்கலம் வெள்ளி கோளின் மேற்பரப்பில் மெதுவாக இறங்கிய முதலாவது கலமாகும். இதுவே வேறொரு கோளின் மீது இறங்கிய முதலாவது விண்கலமாகும்.
- 1978-மக்கள் சீனக்குடியரசை அங்கீகரிப்பதாகவும் தாய்வானுடனான உறவுகளைத் துண்டிப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் அறிவித்தார்.
- 1994-இணைய உலாவி நெட்ஸ்கேப் நவிகேட்டர் 1.0 வெளியிட்டப்பட்டது.
- 1995-ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் அப்துல் ரவூஃப் தீக்குளித்து உயிரிழந்தார்.
- 1997-தென்கிழக்கு ஆசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்கும் உடன்படிக்கை பாங்கொக்கில் கையெழுத்திடப்பட்டது.
- 2001-பீசாவின் சாயும் கோபுரம் 11 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.
- 2006-கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இனம் தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டார்.


### பிறப்புக்கள்

- 37- நீரோ மன்னன், உரோமப் பேரரசன் (இ68)
- 1832-அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ்சுப் பொறியியலாளர் (இ.1923)
- 1852-ஹென்றி பெக்கெரல், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (இ.1908)
- 1936-சோ.ந.கந்தசாமி, தமிழறிஞர்
- 1945-வினு சக்ரவர்த்தி தமிழ் திரைப்பட நடிகர்
- 1971-ஜீவ் மில்க்கா சிங், இந்திய கோல்ஃப் விளையாட்டு வீரர்

### இறப்புக்கள்

- 1950-சர்தார் வல்லபாய் பட்டேல், இந்திய அரசியல் தலைவர் (பி.1875)
- 1966-வால்ட் டிஸ்னி, கார்ட்டூன் ஓவியர் (பி.1901)

### வல்லபாய் படேல்



சர்தார் வல்லபாய் படேல் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஆவார். குஜராத் மாநிலத்தில் பிறந்து வளர்ந்த படேல், அம் மாநிலத்தில் வழக்கறிஞராக இருந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக அறவழி போராட்டங்களை நடத்தினார். இந்திய தேசிய காங்கிரசில் தலைவராக இருந்து வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஒரு முக்கியமானவராக இருந்தார்.

சுதந்திர இந்தியாவின் முதல் துணை பிரதம அமைச்சராகவும் உள்துறை அமைச்சராகவும் பணியாற்றிய சர்தார் வல்லபாய் படேல் சுதந்திர இந்தி யாவை ஒருங்கிணைத்த சிற்பியாவார். இவர் இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசி உரையாடலுடன் மோட்டார் சைக்கிள் பயணம் !

## கடுமையாக தண்டிக்க போக்குவரத்து அமைச்சு முடிவு

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் தலைக்கவசம் அணியாமலும், கையடக்க தொலைபேசியில் உரையாடிக் கொண்டும் ஒரு கைப்பிடியை மட்டும் பிடித்துக் கொண்டும் செல்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்னாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



வரவு -செலவு திட்டத்தின் போக்குவரத்து அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

பாடசாலை பஸ்களில் செலலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பும்முறையொன்றையும் புதிதாக நடைமுறைப் படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் போக்குவரத்துச் சேவையை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு பல்வேறு விசேட நடவடிக்கை களை போக்குவரத்து அமைச்சும் எமது அமைச்சும் இணைந்து மேற்கொண்டு வருகிறது.

பேருந்து பணியாற்றும் சாரதிகளும், நடத்துநர்களும் பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும்.

இதற்கமைய ஜி.டி.எஸ். சீ.சீ. ரி.வி. கமரா ஆகியவற்றை பொருத்தி சாரதிகளினதும் நடத்துநர்களினதும் நடவடிக்கைகளை அவதானிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயணிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்க முடியும். நாட்டின் போக்குவரத்துத் துறையில் இடம்பெறும் அனர்த்தங் களைக் கட்டுப்படுத்துவதற்காக போக்குவரத்துப் பொலிஸார் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.மனித உயிர்களை பாதுகாக்கும்பொருட்டு சிறந்த சேவைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

விசேடமாக மோட்டார் சைக் கிள்களைச் செலுத்துபவர்கள் குறித்தும் நாம் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டும். மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்களில் அநேகமானோர் தலைக்கவசம் அணிவதில்லை. போக்குவரத்து பொலிஸாரைக் கண்டவுடன் மாத்திரமே அதனை அணிகின்றனர். (செ-2)

# புலி உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்க முடியாது

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய கீதம் திருத்தம் செய்யப்படுதல் மற்றும் போரின் போது உயிரிழந்த புலி உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குதல் போன்ற கோரிக்கைகளை ஏற்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றினால் இந்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் 500இற்கும் மேற்பட்ட பரிந்துரைகளையும் அமுல்படுத்த முடியாது.

ஏற்கனவே ஆணைக்குழுவின் 100இற்கும் மேற்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டுமென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படக் கூடியவாறான பரிந்துரைகளை அமுல்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# மீனவர் பிரச்சினைகளை தீர்க்க இரு தரப்பு பேச்சுவார்த்தை

## அவசியம் என்கிறார் இந்திய அதிகாரி

இந்திய, இலங்கை மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைகளை இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க முடியுமென இந்திய கரையோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் வைஸ் அட்மிரல் அனுரக் தப்லியால் தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையே முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட பல மட்டங்களில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர், இருந்த போதும் இரு நாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியே நிரந்தர தீர்வொன்றுக்கு வரமுடியும் என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு நடத்தப்படும் பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகவிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் என்ற ரீதியில் மீனவர்களை சரவதேச கடல் எல்லையை தாண்ட வேண்டாமென ஏற்கனவே எச்சரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டின் பேரில் 130 இற்கும் அதிகமான இந்திய மீனவர்கள் கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-2)







வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி விழாவும் விருந்தினர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் விருத்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் அவர்கள் கௌரவிக்கப்படுவதையும் சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- கரவெட்டி, கரணவாய் செய்தியாளர்கள்)

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது மத்திய அரசுக்கு அவமானம்

## பொன்.ராதாகிருஷ்ணன் சீற்றம்

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மௌனமாக இருப்பது நாட்டை காட்டி கொடுப்பதற்கு சமம் என தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.



சென்னையில் ஊடகவியலாளர்களுக்கு அளித்த செவ்வியிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இச் சம்பவம் தொடர்ந்து நடைபெறுவது மத்திய அரசுக்கு அவமானம். இந்திய இறை யாண்மையை இலங்கை அரசு கேவலப்படுத்தி வருகிறது.

இந்த விடயத்தில் பிரதமர் மன்மோகன்சிங் மௌனமாக இருப்பது நாட்டை காட்டி கொடுப்பதற்கு சமம்.

மீனவர்களை காக்க தவறிய பிரதமர் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார். (2)

# இந்திய மீனவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

இந்திய மீனவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துமீறல்களை தடுக்க, கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரும் கடற்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் வடக்கு கிழக்கு மீனவர்கள் பாரியளவில் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கு வாழ் மீனவர்களின் வாழ்வதாரத்தை இந்திய மீனவர்கள் பறித்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்திய மீனவர்கள் பாரிய வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் இதனால் இலங்கையின் மீன்பிடி வளம் பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய கடல் எல்லைக்குள் இலங்கை மீனவர்கள் அத்துமீறி பிரவேசிக்கக் கூடாது என அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆந்திராவை தாக்க வரும் சன்னி புயல்

பொலிவுட்டில் கலக்கிய சன்னி லியோன் தற்போது டோலிவுட்டிலும் கால் பதிக்க வருகிறார்.

பொலிவுட் ரசிகர்களை தனது கவர்ச்சியால் கிரங்கடித்து வரும் சன்னிலியோன் தற்போது தெலுங்கில் குத்துப் பாட்டு ஒன்றுக்கு ஆட்டம் போடவுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், பெரிய பட்ஜெட் படம் என்பதால் இந்தப் படத்தில் ஒப்புக் கொண்டதாகவும், படத்தை பற்றிய வேறு செய்திகளை வெளியிட விரும்பவில்லை எனவும் கூறியுள்ளார்.

தற்போது ஜதராபாத்தில் 'ஜாக்பாட்' இந்திப் படத்தின் புரொமோஷனில் இருக்கும் சன்னி லியோன் ஜதராபாத் பிரியாணி பற்றி கேள்விப்பட்டிருப்பதாகவும், அதை சுவைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழில் '**வடகறி** படத்தில் நடிகர் ஜெய்யுடன் ஒரு பாடலுக்கு நடனம் ஆட இருக்கிறார் சன்னிலியோன். அப்ப நம்ம பக்கமும் சன்னி புயல் வீச ஆரம்பிச்சுடுச்சு தானே...

## சிறந்த பின்னழகியாக பிரியங்கா சோப்ரா தெரிவு



பிரியங்கா சோப்ரா

பொலிவுட் நடிகைகளில் கவர்ச்சிகரமான பின்னழகு கொண்டவர் என்ற பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார் பிரியங்கா சோப்ரா. இவருக்கு 28.3 சதவிகித வாக்குகள் கிடைத்துள்ளன.

தீபிகா படுகோனே

இவருக்கு அடுத்த படியாக 21சதவீத வாக்குகளைப் பெற்று தீபிகா படுகோனே 2வது இடத்தை பெற்றுள்ளார்.

கரீனா கபூர்

இவருக்கு அடுத்த படியாக 19.38 வாக்குகளை பெற்று மூன்றாவது இடத்தையும் பிடித்து உள்ளனர்.


பிபாசா பாசு

பிபாசபாசு விற்கு 7.05 சதவிகித வாக்குகள் கிடைத்துள்ளன. இதனால் 4வதுஇடம் பிபாசாவிற்கு கிடைத்துள்ளது.

சன்னி லியோன்

கவர்ச்சிப் புயல் என்று கருதப்படும் சன்னி லியோனுக்கு கிடைத்துள்ள வாக்குகள் 5.95 சதவிகிதம். கவர்ச்சியான பின்னழகில் சன்னி லியோன் 5-வது இடத்தை பிடித்து உள்ளார். பாவம் சன்னி எவ்வளவு காட்டியும் கடைசியா வந்துட்டாங்க.

## மீண்டும் ஆர்யாவுடன் ஜோடி சேரும் டாப்சி



வெள்ளாவி தேவதைக்கு சிபாரிசு செய்து வருகிறாராம் ஆர்யா.

ஆரம்பம் படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக நடித்தார் டாப்சி. இதன் மூலம் இவர்கள் இருவரும் நட்புக்கான பாலத்திற்கு அடிக்கல் நாட்டிவிட்டனர்.

அந்த நட்பின் அடிப்படையில் சிபாரிசுகளை முடுக்கி விட்டு வருகிறாராம் ஆர்யா.

தடையறத்தாக்க மகிழ்திருமேனி இயக்கத்தில் தான் நடிக்கும் மீகாமன் படத்திற்கு கதாநாயகி தேடப்பட்டு வந்தபோது டாப்சியின் அருமை பெருமைகளை சொன்ன ஆர்யா, சத்தமில்லாமல் அவரை அப்படத்தில் கமிட் பண்ணி விட்டாராம்.

இதனால் ஆர்யா போன்ற வெள்ளை மனசுக்காரர்களால் எப்படியேனும் டாப் நடிகையாகிவிடலாம் என்ற புதிய நம்பிக்கையில் உள்ளாராம் டாப்சி.

நம்ம ஆர்யா எதை பார்த்து மயங்கினாரோ???

## ரஜினியை வாழ்த்திய கருணாநிதி




இந்த ஆண்டும் ரஜினியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லியுள்ளார் கருணாநிதி.

இதனை பேஸ்புக்கில், "சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் 64 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, நான் ரஜினிகாந்த் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு எனது பிறந்தநாள் வாழ்த்தினை தெரிவித்தேன், என நிலைத் தகவலாக வெளியிட்டுள்ளார்.

தி.மு.க பொருளாளர் மு.க .ஸ்டாலினும் ரஜினிக்கு தனது பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## 10 டேக் எடுத்து நடித்த முத்தக்காட்சி



ப்ரீத்தி தாஸ்! மும்பாய் பொண்ணு தான் என்றாலும் கோதுமையுடன் வீரமும் விளையும் பஞ்சாப் மாநிலம் அவரது சொந்த ஊர்.

தாய்மொழியான பஞ்சாபியுடன், ஹிந்தி, மராத்தி, ஆங்கிலம் மற்றும் தமிழும் தெரிந்து வைத்திருக்கிறார்.

ப்ளஸ்டூ முடித்து விட்டு மொடலிங்கைத் தேர்ந்தெடுத்தவர். இப்போது நடிக்க வந்து விட்டார். எடுத்த எடுப்பில் இரண்டு படங்களில் ஹீரோயினுக்கு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அதுவும் முதல் படத்துல தான் லிப் டு லிப் காட்சி வைத்து அசர வைத்துள்ளர்கள் படக்குழுவினர்.

மறுமுகம் படத்தில் அப்படி ஒரு காட்சி வருகிறது. முதல் படத்திலே லிப் டு லிப் கொடுக்க வைத்து விட்டார்கள்.

கதாநாயகர்களுக்கு சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் நமக்குத்தான் அத்தனை பேருக்கு முன்னால் கொடுக்க தயக்கமாகி விடுகிறது.

அதுவும் ஒரு டேக்கில் முடிந்தால் பரவாயில்லை. எது சீக்கிரம் முடிஞ்சிடம்னு நினைக்கிறோமோ அது இன்னும் அதிக டேக் வாங்கும்.

முத்தக்காட்சி பத்து டேக் போயிருக்கும். இருந்தாலும் கதைக்குத் தேவைப்பட்டது என்று மிகவும் கண்ணியமாக நடித்தேன் என்றாராம் அம்மணி.

அது தான் மறுமுகம் படத்துக்கு வரவேற்பு அதிகரிச்சுட்டு போல.



# அஜித்துடன் கூட்டணி வைக்கும் சிம்பு



அஜித்துடன் இணைந்து நடிக்கப்போவதால் ஆனந்த தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறாராம் சிம்பு. கௌதம் இயக்கத்தில் சிம்பு, பல்லவி நடிக்கவிருக்கும் படத்திற்கு சட்டென்று மாறுது வானிலை என்று பெயர் வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஏற்கனவே ரவிராஜ் என்பவர் அதே டைட்டிலில் படம் இயக்கி முடித்து "யு" சான்றிதழ் பெற்றுள்ளார். இதனால் வேறு டைட்டில் வைக்கலாம் என்று தீவிர யோசனையில் இருக்கிறாராம் கௌதம்.

இதற்கிடையில் பெப்ரவரியில் தொடங்க இருக்கும் புதிய படம் குறித்து அஜித்தைத் சந்தித்துள்ளார். அப்போது சிம்புவும் இந்தப் படத்தில் நடிக்கட்டுமே என்று அஜித்தே முன்வந்து கேட்டதோடு, உடனே சிம்புவுக்குப் போன் போட்டு பேசினாராம்.

சிம்பு, அஜித்துடன் நடிக்க உடனே ஓ.கே.சொல்லிவிட்டதைத் தொடர்ந்து இப்போது சிம்புவுக்கான போர்ஷனை மெருகேற்றுவதில் கவனம் செலுத்தி வருகிறாராம் கௌதம்.

அஜித் - விஜய், சிம்பு - தனுஸ் எப்போது கூட்டணி சேரும் என எதிர்பார்த்திருந்த வேளை சிம்பு, தல அஜித்துடன் சேருவது கோடம்பாக்கத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

படம் வெளிவந்த பிறகு தாங்க தெரியும் கிட் ஆகுதா அல்லது ஊத்திக்குமா என்று,

ஆயினும் சிம்பு சினிமால பண்ணுற வம்புகளை நம் தல தாங்கிகிட்டா சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிலிருந்து அதிகளவு நிதி வடக்கிற்கு ஒதுக்கீடு

## இப்படி கூறுகிறார் தவநாதன்

வடக்கு மாகாண சபையின் முதலாவது வரவு செலவுத்திட்டம் கடந்த செவ்வாய் கிழமை மாகாணசபையின் முதலமைச்சரும், நிதி அமைச்சருமான சி.வி.விக்கினேஸ்வரனால் சமர்ப்பிக்கப்பட்டு ஒவ்வொரு துறைகள் மீதும் விவாதங்கள் இடம்பெற்று வந்த நிலையில் கடந்த 12 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்விவாதங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய வை.தவநாதன் இந்த வரவு செலவு திட்டத்திற்கு இம்முறை மத்திய அரசிலிருந்து அதிக நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த வருடத்தைவிட இருபது வீதம் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத் தக்கது. இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்திற்கு இரண்டாவது அதிக நிதி ஒதுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வட மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டமே முதன்மையான விவசாய மாவட்டமாக உள்ளது. இங்கு பாரிய நீர்ப்பாசனகுளங்கள் ஐந்து உண்டு. அத்துடன் யாழ் பல்கலைகழகத்தின விவசாயபீடமும் கிளிநொச்சியில் இருப்பதனால் 2009 இற்கு பின்னர் கிளிநொச்சியில் இயங்கிய வடமாகாண விவசாய அமைச்சு அலுவலகம் தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கிவருகிறது. இது மீண்டும் கிளிநொச்சியிலேயே இயங்குவது பொருத்தமானதாக அமையும் என தெரிவித்த அவர்,

பூநகரி, வன்னேரிக்குளம் போன்ற பகுதிகளில் நீர் மற்றும் நிலம் உவராகி வருவதனால அந்த பிரதேசங்களில் பாரிய சுற்றுச்சூழல் ஆபத்து எதிர்நோக்கப்படுகிறது. குஞ்சுகுளம் என்ற கிராமம் இந்த பிரச்சினை காரணமாக மக்கள் இல்லாத கிராமமாக போய்விட்டது. இவ்வாறு உவராகி வரும் தன்மையானது தற்போது ஆனைவிழுந்தான் பகுதிகளை நோக்கியும் பரவிவருகிறது.

எனவே விவசாய அமைச்சு உவராகி வரும் தன்மையை தடுக்கும் வகையில் பாரியளவிலான உவர்நீர் தடுப்பு அணை மற்றும் உவர்தடுப்பு தாவரங்கள் என்பவற்றை வளர்த்தல் போன்ற திட்டங்களை மேற்படி பிரதேசங்களில் மேற்கொள்ள வேண்டும்

அத்தோடு நன்னீர் மீன் வளர்ப்புத்துறையில் அதிக கவனம்செலுத்தப்படல் வேண்டும் கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் சுண்டிக்குளம் கடல் நீரேரியினால் இலட்சக்கான இறால் குஞ்சுகள விடப்பட்டன. ஆனால் அதிலிருந்து அந்த மக்கள் முழுமையான பயனை பெறமுடியவில்லை.

காரணம் பொருத்தமான காலத்தில அந்த பணி மேற்கொள்ளப்படவில்லை. எனவே இனிவரும் காலங்களில் நன்னீர் மீன்பிடி துறையின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் எனக்குறிப்பிட்ட அவர்,

பாடசாலை மாணவர்களுக்கான சீரான பேருந்து சேவையினை மேற்கொள்ள வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

2014 ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவாக 15 ஆயிரத்து 526 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## வீதியை புனரமைக்குக



(கண்டாவளை)

கண்டாவளை பிரதான வீதி புனரமைக்கப்படாமையால் அவ் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.


குன்றும் குழியுமான இவ்வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

எனவே உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுத்து வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-263)






## அபிவிருத்திக்குழு பொதுக்கூட்டம்



(இராமநாதபுரம்)

புதுக்குடியிருப்பு சிவநகர் பிரிவு கிராம அபிவிருத்தி குழு தெரிவு கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 23 ஆம் திகதி சிவநகர் கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் சிவநகர் மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-269)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# வன்னி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

## வினோ எம்.பி. தெரிவிப்பு

வன்னிபிரதேச மீனவர்கள்பாரிய பாதிப்புக்குள்ளாகி வருவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

மீன்பிடித்துறை தொடர்பாக நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்த முறைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார் என்ற அனைத்து பகுதிகளிலும் மீனவர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

தென்னிலங்கை மீனவர்களுக்கு அங்கு புதிதாக மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் பரம்பரையாக உள்ளவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை.

மன்னாரில் ஏனைய இடங்களில் உள்ளவர்கள் வாடிகள் அமைத்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். முல்லைத்தீவிலும் இதே நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் சகோதர மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசித்து மீன்பிடிக்கும் விடயத்தை இராஜதந்திர ரீதியில் அணுக வேண்டும். அது இலங்கை, இந்திய அரசாங்கங்கள் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை குற்றம் சுமத்துவது பொருந்தாது இதன் போது அமைச்சர் ராஜித சேனாரத்ன, பதில்களை வழங்கிய போதும் அந்த பதில்களில் தமக்கு திருப்தியில்லை என்று வினோநோதராதலிங்கம் குறிப்பிட்டார்.

அதேவேளை சமுத்திரவியல் தொடர்பான பட்டப்படிப்பு ஒன்றை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டார். (அ-2)

# வவு. பொது வைத்தியசாலையில் புதிய சத்திர சிகிச்சைப் பிரிவு

வட மாகாண மக்களின் சுகாதார நலன் கருதி தாடை, வாய் மற்றும் முக சத்திர சிகிச்சை பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட சிகிச்சை பிரிவில் இதுவரை 30 குழந்தைகளுக்கான சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சத்திர சிகிச்சைப் பிரிவில் சுமார் 30 வைத்திய அதிகாரிகள் கடமையாற்றுவதாக அதன் பணிப்பாளரும் சத்திர சிகிச்சை நிபுணருமான ரஞ்சன் மல்லவராச்சி தெரிவித்துள்ளார்

வாய், மூக்கு போன்ற அவயவங்களில் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளை உடனடியாக சிகிச்சைக்கு உட்படுத்துவதன் மூலம் சிறந்த பலனை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு தாடை, வாய், முக சிகிச்சைப் பிரிவில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக இது வரை நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளின் பெயர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வாயில் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளை ஓரிரு மாதங்களுக்குள் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்த முடியாமற்போகும் பட்சத்தில் அந்த குழந்தைகள் பேசும் திறனை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் வைத்திய நிபுணர் ரஞ்சன் மல்லவராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மூன்றாவது தாடை, வாய் மற்றும் முக சிகிச்சை பிரிவு வட மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-250)




மறைந்த நெல்சன் மண்டேலாவுக்கான நினைவு அஞ்சலி நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் நெல்சன் மண்டேலாவின் திருவுருவப்படத்திற்கு பொது மக்கள் அஞ்சலி செலுத்துவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்டம், குருமன்காடு செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த சீன கம்யூனிஸ்ட் தலைவருக்கு தங்கச் சிலை

(பீஜிங்)



சீன கம்யூனிஸ்டு தலைவர் மாவோ ஷெடாங். மறைந்த இந்த தலைவரின் 120ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 26ஆம் திகதி கொண்டாடப் படவுள்ளது.

அதை தொடர்ந்து சீனாவின் தென்பகுதியிலுள்ள சென் ஷென் நகரில் அவருக்கு தங்கம் மற்றும் பச்சை மாணிக்க கல்லாலான சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிலை 80 செ.மீற்றர் உயரம் உடையது. 50 கிலோ எடையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்சிலையை 20 கலைஞர்கள் 8 மாதங்கள் இரவு பகலாக உருவாக்கினார்கள். இந்த சிலையை சென் ஷென் நகரில் நடந்த மிக எளிமையான விழாவில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் திறந்து வைத்தார்.

மேலும் மாவோ பிறந்த ஷவோசன் என்ற இடத்தில் 2 ஆயிரம் கோடி ரூபா செலவில் சுற்றுலா வளர்ச்சி திட்டங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. (2)

# ஹமீத் கர்சாய் - மன்மோகன் சந்திப்பு; இராணுவ உதவி குறித்து பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

**ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படையினரை அடுத் தாண்டு முதல் விலக்கிக்கொள்ள அமெரிக்கா திட்ட மிட்டுள்ளதால் ஆப்கானுக்கு தேவையான இராணு வத் தளபாடங்களை இந்தியா வழங்க வேண்டுமென ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார்.**

ஆப்கானிஸ்தான் பிரதமர் ஹமீத் கர்சாய் நான்கு நாட்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவிற்கு வருகைதந்துள்ளார்.

இந்த பயணத்தின்போது பரதமர் மன் மோகன் சிங் உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்களை அவர் சந்தித்து பேசினார். வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான குர்ஷித்தையும் சந்தித்தார்.

இதன்போது ஆப்கானிஸ்தான்-அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு ஒப்பந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் பேசினார்.

அப்போது ஆப்கானிஸ்தானில் உள்ள படைகளை அடுத்த ஆண்டு திரும்பப்பெற அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதன பிறகும் அமெரிக்க படைகள் அங்கு நீடிக்க அனுமதிக்கும் ஒப்பந்தம தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப் பட்டது.



இந்தியா வந்துள்ள ஆப் கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் பிரதமர் மன் மோகன் சிங்கை வெள்ளிக் கழமை சந்தத்து ஆலோசனை நடத்தினார.

அப்போது, ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலை குறித்து மன்மோகன் சிங்கிடம் ஹமீத் கர்சாய் விளக்கினார். அப்போது ஆப்கான்-அமெரிக்கா இடையே யான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக விவாதிக்கப் பட்டதாக கூறப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படையினரை அடுத்த ஆண்டு முதல் விலக்கி கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளதால், ஆப்கானுக்கு தேவையான இராணுவ தளபாடங்களை இந்தியா வழங்க வேண்டும் என்று ஹமீத் கர்சாய் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தில் பல்வேறு அம்சங்கள் குறித்து பரிசீலிக்க வேண்டியுள்ளதால் பின்னர் முடிவு தெரிவிக்கப்படும் என்று இந்தியா தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமெரிக்கா-ஆப்கானிஸ்தான் இடையேயான இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஆப்கான் ஜனாதிபதி ஹமீது கர்சாயை கையெழுத்திட இந்தியா சம்மதிக்க வைத்தால் வரவேற்போம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளி யுறவுத்துறையின் துணை செய்தித் தொடர்பாளர் மேரி ஹார்ஃப் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

அமெரிக்கா-ஆப்கானிஸ்தான் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கர்சாய் விரைவில்கையெழுத்திட வேண்டும்.

கர்சாயின் கையெழுத்து, ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் 2 பில்லியன்டொலர்களை அந்த நாட்டின் வளர்ச்சிக்கும், மேலும ஒரு பில்லியன் டொலரை தனியார் துறைகள் மற்றும் பல்வேறு திட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இது ஆப்கான் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மேரி ஹார்ஃப் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகள் அங்கேயே தொடர்ந்து இருக்கும் வகையில் இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா தயார் செய்துள்ளது. இதில், ஆப்கான ஜனாதிபதி கர்சாய் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. (2)

# மும்பை குடியிருப்பு கட்டடத்தில் தீ !

## 7 பேர் உயிரிழப்பு



(மும்பை)

மும்பையிலுள்ள 26 மாடி குடியிருப்பு கட்டடத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில் 7 பேர் பலியாகினர். 6 பேர் காயமடைந்தனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் ஏற்பட்டத்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது, மும்பையின் முக்கிய பகுதியிலுள்ள, 26 மாடி குடியிருப்பு கட்டடத்தின், 12 ஆவது மாடியில் தீடீரென தீ விபத்து ஏற்பட்டது. காற்றின் வேகத்தால் தீ மளமளவென பரவியது.

இதனால், குடியிருப்பில் வசிக்கும் நபர்கள் வெளிவர முடியாமல் சிக்கித் தவித்தனர்.

விரைந்து அவ்விடத்திற்கு வந்த தீயணைப்பு படை வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். 14 தீயணைப்பு வாகனங்கள் இணைந்து தீயை அணைத் தன.

இச் சம்பவத்தில் 7 பேர் பலியானார்கள். மீட்புப் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு படை வீரர்கள், 6 பேர் காய மடைந்தனர். (2)




பிலிப்பைன்ஸ் நாட்டில் இயற்கை பேரிடர்களை சமாளிக்க புதிய சட்டம் கொண்டுவரக் கோரியும் அரசு நிர்வாகத்தில் ஊழலை ஒழித்திடவும் வலியுறுத்தி, பல்கலை.மாணவர்கள் கியூசான் நகரில் நூதன முறையில் போராட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# தேவியாணியின் கைது உறவை பாதிக்காது; அமெரிக்கா உறுதி

(வோஷிங்டன்)

விசா முறைகேடு விவகாரத்தில் இந்தியாவிற்கான அமெரிக்க துணைத் தூதர் தேவியாணி கைது செய்யப்பட்ட விவகாரம் இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவை பாதிக்காது என அமெரிக்கா உறுதி அளித்துள ளது.

இந்த விவகாரம் சட்ட அமுலாக்க பிரிவின்படி கையாளப்பட்டு வருவதாகவும், இரு நாடுகளிடையேயான உறவு தொடரும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (2)

# ஈராக்கில் போராளிகள் துப்பாக்கி பிரயோகம்

## 18 தொழிலாளர்கள் உயிரிழப்பு



(பகுபா)

ஈராக்கில் ஆயுதமேந்திய போராளிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் செய்ததில் 18 ஈரானியத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 6பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை தலைநகர் பக்தாத்தில் இமாம் வைஸ் எனும் நகரில் இடம்பெற்றது

இது தொடர்பாக தெரியவருவதாவது, கடந்த 2008 ஆம் ஆண்டில் ஈராக்கில் நடைபெற்ற இனவாதக் கலவரங்களே அந்நாட்டு வரலாற்றில் பெரியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்த ஆண்டு அங்கு மீண்டும் தொடங்கியுள்ள இனக்கலவரங்களும், வன்முறைகளும் அமைதியின்மையையும், பாதுகாப்பு அபாயங்களையும் ஏற்படுத்துவதாக மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

தலைநகர் பக்தாதிலிருந்து 65 கி.மீ.தொலைவில் உள்ள இமாம் வைஸ் என்ற நகரத்தில் எரிவாயுக்குழாய் பதிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இந்த இணைப்பு ஈராக்கை அயல் நாடான ஈரானுடன் இணைக்கும் திட்டமாகும்.

அப்போது அங்கு மூன்று வாகனங்களில் வந்த ஆயுதமேந்திய போராளிகள் வேலை செய்துகொண்டிருந்தவர்களை நோக்கி கண் மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் ஈரானியத் தொழிலாளர்கள் 15 பேரும், ஈராக்கியர்கள் மூன்றுபேரும் உயிரிழந்தனர்.

ஐந்து ஈரானியர்களும், ஒரு ஈராக் நாட்டவரும் காயமடைந்ததாகக் கூறப்படுகின்றது.(2)

# 7 பேருக்கு மரண தண்டனை

வியட்நாம் நாட்டைச் சேர்ந்த நான்கு பெண்கள் மற்றும் ஒரு ஆண் உட்பட 5 பேருக்கு மத்திய வியட்நாமில் உள்ள நீதிமன்றம் மரணதண்டனை தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கியுள்ளது. இதில் குற்றம்சாட்டப்பட்ட மற்றொருவர் ஆயுள்தண்டனை பெற்றார்.

அயல் நாடான லாவோசிலிருந்து இவர்கள் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தியுள்ளனர்.

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரையில் இவர்கள் 89 கிலோ கிராம் ஹெரோயின் மருந்தைக் கடத்தியுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர். இன்னும் 700 இற்கும் மேற்பட்டோர் மரண தண்டனைத் தீர்ப்புடன் காத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

# சீனாவின் புதிய வான் பாதுகாப்பை அங்கீகரிக்க மாட்டோம்

## ஜப்பானிடம் அமெரிக்கா உறுதி

சீனா பிரகடனப்படுத்தி யுள்ள புதிய வான் பாதுகாப்பு பகுதியை அமெரிக்கா அங்கீகரிக்காது என்று துணை ஜனாதிபதி ஜோபிடன், ஜப்பானிடம் தெரிவித்துள்ளார்.

சீனா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடன் ஒரு வாரத்துக்கு முன் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அதையடுத்து ஜப்பான் பிரதமர் ஷின்ஸா அபேயிடம் கடந்த புதன்கிழமை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய பட்டன், "ஜப்பானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள சீனாவின் புதிய வான் பாதுகாப்பு அறிவிப்புக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை" என அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சீனா அண்மையில் அறிவித்த புதிய வான் பாதுகாப்பு மண்டலத்தை அமெரிக்கா அங்கீகரிக்காது. சீனாவின் இந்த அறிவிப்பு கிழக்கு சீன கடற்பகுதியில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை எவ்வழியிலும் பாதிக்காது.

சீனா மற்றும் ஜப்பானின் புதிய இருதரப்பு விவகாரங்கள் உட்பட இந்த பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க அமெரிக்கா உதவும். ஜப்பான் மற்றும் தென்கொரிய ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வரவேற்கத்தக்கது என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட 3 நாடுகளுக்கும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடன் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பின், வெள்ளை மாளிகை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நாமே ஆள்வதற்கு அரசு இடமளிக்க வேண்டும்!

## அடக்குமுறை சரியல்ல என்கிறார்- விக்னேஸ்வரன்

(கரவெட்டி)

அரசு தமிழ் மக்களை சகல விதங்களிலும் அடக்கி ஒடுக்கி தமது செல்வாக்கை நிலை நிறுத்துவதற்கு கங்கணம் கட்டி வருகின்றது.

அரசாங்கம் எம்மை நாமே ஆழ்வதற்கு இடமளிக்க வேண்டும். நாம் அரச சார்பு பிரதிநிதிகளோடு எவ்வாறு நல்லெண்ணத்தோடு பழகுகின்றோமோ அதேபோல் மத்திய அரசும் உறவைப் பேண வேண்டுமென வடமாகாண சபை முதலமைச் சர் சீ.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், போரின் பின்னர் கிராம மட்டத்தில் நாங்கள் எங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டுள் ளோமா என்பது கேள்விக் குறியாகி வருகிறது. எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தை எதிர்பார்க் காமல் தன் கையே தனக்குதவி என்பதுபோல் நாமே எம் ஒவ்வொருவரையும் அனுசரித்து நடக்கப் பழக வேண்டும்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திற்கு முன்னேற்பாடாக நடந்த இந்திய-இலங்கை ஒப்பந்த விவாதங்கள் நாட்டின் சகல மாகாணங்களிலும் மாகாணசபைகளை அமைக்கும் வண்ணமாக அமையவில்லை. அவை வடகிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதத்திலேயே அறிமுகப்படுத்தப் பட்டன. அப்போதைய ஜனாதிபதி தான் மாகாணசபை ஏற்பாடுகளை சகல மாகாணங்களுக்கும் ஏற்புடையதாக்கினார். காரணம்,தான் தமிழர்களுக்கு ஏதேனும் சலுகைகளைக் கொடுத்துதவியதாகச் சிங்கள மக்கள் அவரை அடையாளங் காணக்கூடாது என்பதற்காகவே. ஆனால் அதிகாரப் பரவலே பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் குறிக்கோள். அது போதுமானதாக அத்திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதா இல்லையா என்று பரிசீலிக்க இதுவரை காலமும் போதிய சந்தர்ப்பங்கள் எழவில்லை. ஏனென்றால் பொதுவாகத் தெற்கில் உள்ள மாகாண சபைகள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களையே கொண்டிருந்தது. அப்படி இல்லை என்றாலும் பெரும்பான்மையின மக்களே மத்திய அரசாங்கத்திலும் இருந்தார்கள், மாகாணசபைகளிலும் இருந்தார்கள். அவர்களுக்குள் அதிகாரப் பகிர்வு கட்டாயமாகத் தேவைப்படவில்லை .உள்ளூராட்சி சிறந்து விளங்க வேண்டுமென்றும் அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்படவேண்டும் என்றும் அவர்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தார்களேயாகில் போதிய அதிகாரப் பகிர்வு தேவைப்பட்டிருக்கும் . ஆனால் அவர்கள் அவற்றை இதுவரை வேண்டுமென்று உரிய கோரிக்கைகளை முன்வைக்கவில்லை. அதற்கான அவசியமும் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால் வடமாகாணம் அப்படியல்ல. நாங்கள் கட்சியால் வேறுபட்டவர்கள் மட்டுமல்ல, கலைகளால் வேறுபட்டவர்கள், மொழியினால் வேறுபட் டவர்கள். காலாதிகாலமாகத் தனித்து வேறுபட்ட வாழ்க்கை முறையில் வளர்ந்து வந்தவர்கள் . எமக்குத் தான் அதிகாரப்பகிர்வு தேவைப்பட்டது. ஆனால் சுமார் 25 வருடங்களாக அது எமக்குக் கிட்டவில்லை . தற்போது கிட்டியதும் தான் தெரிகிறது ஆளுநருடன் சேர்ந்து அரசாங்கம் எந்தளவிற்கு எமது அதிகாரப் பகிர்வை அர்த்தமற்றதாக்கலாம் என்பதை அதாவது எமது அதிகாரப் பகிர்விற்காகவே பதின்மூன்றாவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதனை 25 வருடங்களுக்கு மேல் எம் பூமியில் நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், நடைமுறைப்படுத்தஒரு சந்தர்ப்பம் கிடைத்ததும் அதைச் சிதைக்கச் சதி நடக்கின்றது. ஆனால், தேர்தலின் போது இவ்வாறு நடக்கக்கூடும் என்பது நாம் அறிந்து வைத்திருந்ததுதான். ஆனால், எந்த அளவுக்கு என்பதை அறியாதிருந்தோம்.

அவ்வாறு நடந்தால் நாம் இங்கு நடப்பதை உலகறியச் செய்து சிங்கள, தமிழ் பேசும் மக்கள் மட்டுமன்றி வெளிநாட்டினருக்கும் இங்கு நடக்கும் அநியாயங்கள் பற்றி உரக்கக் கூறுவோம் என்றும் சொல்லி வைத்திருந்தோம். அதை இப்பொழுது செய்து வருகின்றோம்.

எமது வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் வடமாகாண சபையில் ஏகமனதாக நிறைவேறியது. அங்கு எமது சகல மக்களும் ஒத்துழைப்பு நல்கினார்கள். எம்முள் அரசியல் பிரிவினைகள், சமூகப் பிரிவினை கள், மொழிப் பிரிவினைகள், மதப் பிரிவினைகள் இருந்தும் வாக்குக்கு விட்டப்பட வேண்டும் என்று கோராது ஏகமனதாக எமது வரவு செலவுத் திட்டம் ஏற்கப்பட்டதென்றால் விவா தத்தின் போது மூன்று காரியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று அர்த்தம். ஒன்று கொடுத்த பணத்தை நாம் எவ்வாறு செலவழிக்க உள்ளோம்.

அடுத்து கிடைத்திருக்கும் நிதி மிகச் சொற்பமே. அதை வைத்து எதனைச் செய்ய முடியும் என்று எமது கட்சியினர் மட்டுமல்ல அரசாங்கத்துடன் இணைந்த எதிர்க்கட்சியினரும் அதேகேள்வியைத் தான் முன்வைத்துள்ளனர். அதாவது அரசாங்கத்தின் வாரிசுகளாக எமது மாகாண சபையில் இருக்கும் எம் உறுப்பினர்களும் தமது தந்தையார் அனுமதித்த நிதி போதாது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மூன்றாவதாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்கான நிதி உதவி கிடைக்கவில்லை. எனினும் எம்முடன் சேர்ந்து வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய நிதியுதவிகளை எமது எதிர்க்கட்சியினரும் எதிர்பார்க்கின்றார்கள் என்பது புலனாகிறது. எமது எதிர்க்கட்சியினர் சிறிய தொகையினர் ஆகினும் அவர்களுள் மூன்று இன மக்களும் பிரதிநிதித்துவப்பட்டுள்ளார்கள். தமிழ் பேசும் தமிழ்ச் சகோதரரும் முஸ்லிம் சகோதரர்களும் மற்றும் தமிழ் வாழ்விடங்களில் பிறந்து வளர்ந்த சிங்கள சகோதரர்களும் அவர்களிடையே இருக்கின்றார்கள். அவர்களுக்கு எமது நேசக்கரம் நீட்டி அணைத்தே நாம் எமது அரசியல் பயணத்தில் ஈடுபட்டுள்ளோம். அவர்களை நாம் எதிரிகளாகப் பார்க்கவில்லை. எம்மவராகவே பார்க்கின்றோம். எமது இந்த நோக்கு அரசாங்கத்திற்கும் வரவேண்டும் என்பதே எமது விருப்பம்.



ஆனால் நேசக்கரம் காட்டுவது போல் காட்டி எம்மை வஞ்சித்து அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த முயலக்கூடாது. மக்களின் ஆணைக்குழு மதிப்பளிக்க அரசாங்கம் முன்வரவேண்டும். சென்ற தேர்தலில் மக்களின் ஆணை மூன்று முக்கிய விடயங்களை அரசாங்கத்திற்கு உணர்த்தி இருக்கின்றது.

அதாவது மக்களை மாக்களாய் நடத்திய இராணுவத்தின் யாழ். மாவட்டத் தளபதியைத் தொடர்ந்து ஆளுநராக வைத்திருப்பதை மக்கள் நிராகரித்துள்ளமை, மக்களின் வாழ்வாதாரங்களை முடக்கி அவர்தம் வாழ்க்கையை சுதந்திரம் அற்றதாக்கியுள்ள இராணுவத்தை வடமாகாணத்தில் போர் முடிந்து ஐந்து வருடங்களின் பின்னரும் தொடர்ந்து பெருவாரியாக நிலைநிறுத்தி வைத்திருப்பதை விரும்பாமை, வடமாகாண தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் நாம் முன்வைத்த அரசியல் தீர்வை மக்கள் பெருவாரியாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதே. எனவே, அரசாங்கத்தின் கொள்கைகளை நிராகரித்து எமது கொள்கைகளை மக்கள் ஏற்றுள்ளார்கள். இவற்றை அரசாங்கம் தமது கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார் விக்னேஸ்வரன். (செ-60-9-24)

---

வியாசர் அண்ணா!

காதல் காதல் என்று பெண்ணைக கடத்தி விட்டு கடைசியில் சீதனம் கேட்டு அடிக்கும் ஆண்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

*கணபதிதாசன், கட்டைக்காடு*

காதலிக்கும் போது அவனது குறிக்கோள் அந்தப் பெண்ணாகத்தான் இருக்கும. கல்யாணம் முடிந்துவிட்டால் அது பணமாகிவிடும். பணத்திற்கு அடிமையான பாவிகள் இருக்கும் வரை சீதனம் என்பது இருந்து கொண்டே தான் இருக்கும்.




அன்பின் வியாசரே!

பாடசாலையில் சேரும் நட்பைப் பற்றி யாது கருதுகிறீர்கள்?

*செ.மிதுர்ஷா, தம்பசிட்டி*

வானம் பெரிதுதான் ;பூமி பெரிதுதான். அதுக்கு மேலேயும் நட்புப் பெரிது.

அன்பின் வியாசரே!

பெண் புத்தி பின் புத்தி என் பதன் அர்த்தம் யாது?

*றெபேக்கா, மட்டுவில்*

பெண் என்பவள் ஊசியைப் போல் கூர்மையானவள். சரியாக கையாளாமல் விட்டால் குத்திவிடும்.

அன்பின் வியாசரே!

மோட்டார் சைக்கிளில் செல்வோர் கெல்மடிற்குள் ,தொலைபேசியை வைத்து சிரித்துச் சிரித்து கதைத்துக் கொண்டு செல்கிறார்களே?

*எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்*

தலைக்கவசம் தலைக்கு பாதுகாப்புக்குத்தானே வந்தது. நம்மவர்கள் அதை இப்போது போடுவதே போன் பேசுவதற்காகத்தான் என்ன செய்வது? தொலைபேசி மோகம் நம்மவர்களை பைத்தியமாக்கி விட்டதே.

**பெண்புத்தி பின்புத்தி என்பதன் அர்த்தம் யாது?**

அன்பின் வியாசரே!

அவசர உலகில் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறதே?

*வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி*

அண்மையில் பாலர் பாடசாலை மாணவி ஒருத்தி பாட்டு ஒன்றை பாடி னாள். மழை வந்தால் தடிமன் வரும் தடிமன் வந்தால் தும்மல் வரும். அச்சும்.... அச்சும்... கரண்டு நிற்கும். சிறுபிள்ளைக்கே தெரிந்து விட்டது நம் சீர்கேடு.

அன்புள்ள வியாசரே!

எனக்கு ஒரு சந்தேகம் .இரண்டு வரு டமாக நண்பர்களாக இருந்தவர்கள இப் போது காதலர்களாகி விட்டா ர்கள். அவர்கள் காதலுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அவர்கள் என்ன முடிவு எடுக்கலாம்?

*சீதாராம், பருத்தித்துறை*

தெளிவா இருந்த பிளேன்ரிக்குள்ள ஒரு கரண்டி மாவைப் போட்டுக் கலக்கி போட்டு இப்ப குடிக்கிறதா, ஊத்துறதா எண்டு என்னிடமே அட்வைஸ்சா? முதலிலேயே யோசிக்கனும் நாம் தயாரிப்பது பிளேன்ரியா? ரீயா? எண்டு.

வியாசர் ஐயா!

கவிதை எழுதத்துடிக்கும் போது பேப்பரும் பேனாவும் இல்லை. பேப்பரும் பேனாவும் உள்ளபோது கவிதை வரவில்லையே?

*பா.மதனபாரதி, அல்வாய்*

உமது பெயருக்கும் கேட்கும் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறதே.

**ஒரு பஞ்சு சொல்லுங்களேன். உம க்கு தெரியா விட்டாலும் யாரிடமாவது கேட்டுச் சொல்லவும்.**

**கொஞ்சம் சிரிங்கப்பா...**




அன்பின் வியாசரே!

சீ...இந்தப் பழம் புளிக்கும் என விட்டுச் சென்றவர்கள் மீண்டும் அதை பிடுங்க முயற்சிக்கின்றார்களே?

*மோகன் சில்லாலை*

கைக்கு எட்டும் தூரத்தில் இருக்கும் பழத்தை உண்ணுவதை விட கைக்கு எட்டாத உயரத்தில் இருக்கும் பழத்தை கஷ்டப்பட்டு பறித்து உண்ணும் போது வரும் சுக[illegible]

வணக்கம் வியாசரே!

என் தந்தை விஷ்வா, நான் மித்திரன் இவ்வாறுள்ள போது என்னை *விஷ்வா மித்திரன* எனக் கூறுவதில் பிழையுள்ளதா?

*வி.மித்திரன், தொண்டைமானாறு*

வைத்துக் கொள்வது தப்பில்லை. தேவலோக மங்கையரைப் பார்த்து மயங்காமல் இருந்தால் சரி. ஏனென்றால் உம்பெயரில் பாதி உமது அப்பாவுடையது என்பதை மறந்து விடக் கூடாது.

வியாசர் அண்ணா!

ஒரு பஞ்சு சொல்லுங்களேன். உமக்கு தெரியாவிட்டாலும் யாரிடமாவது கேட்டுச் சொல்லவும்.

*த.மோகனரூபன், சுழிபுரம்*

காதல் என்றது பனை மாதிரி மேல ஏறினா நுங்கு கீழ விழுந்தா சங்கு.

வியாசர் அண்ணா!

கடன் வாங்கி நீண்ட காலமாகியும் திருப்பிக் கொடுக்கமால் ஏமாற்றும் மனிதர்களை நாம் என்ன செய்யலாம்?

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

கடன் அன்பை முறிக்கும் என்பதற்கு பதில் கடன் எலும்பை முறிக்கும் என்று கூறிப்பாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தம் சாவாருக்கு அழுவார் யார்
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# காசியில் காகம் பறப்பதில்லை காரணம் வசிட்டரின் சாபமாம்

இந்துக்களின் புனித தலம் காசி. காசியில் இறந்தால் முத்தி என்ற ஜதீகத்தின் மத்தியில் ஏகப்பட்ட வயோதிபர்கள் தங்கள் மரணத்திற்காகக் காசியில் காத்திருப்பர்.

மரணத்திற்காகக் காத்திருத்தல் என்பது சாதாரணமான விடயம் அன்று. ஆனாலும் காசிமீது கொண்ட நம்பிக்கை காரணமாக அங்கு தங்கள் உயிரை விட்டு மரணப்படுக்கையை காசியிலேயே வைத்துக் கொள்ள நினைப்பவர்களின் மனத்தைரியத்தை சாதாரணமாக மதிப்பிட முடியாது.

இத்தகைய சிறப்புடைய காசியில் காகங்கள் பறப்பதே இல்லை. அதாவது காசியில் காகப் பட்சியின் நடமாட்டம் கிடையவே கிடையாது.

உலகில் இருக்கக் கூடிய அதிசயங்களில் காகம் இல்லாத காசியும் ஒன்று. காசியில் எதற்காகக் காகங்கள் பறப்பதில்லை என்ற ஆய்வுகளும் காலத்திற்குக் காலம் நடந்ததுண்டு.

ஆய்வுகள் இதுவரை எந்தவிதமான முடிவுகளை தரவில்லை ஆயினும் வசிட்ட முனிபுங்கர், காசியில் வைத்து காகத்திற்கு இட்ட சாபம் காரணமாகவே காசியில் காகங்கள் வாழ்வதில்லை என்பது புராணங்கள் கூறும் கதை.

அட, நாட்டில் எத்தனையே பிரச்சினைகளும் சிக்கல்களும் இருக்க நீங்கள் காசியில் காகங்கள் பறப்பதில்லை என்பது பற்றி அலட்டிக் கொள்வது எந்த வகையில் நியாயமானது என்று நீங்கள் கேட்பதும் புரியாமல் இல்லை.

காசியில் காகங்கள் பறப்பதில்லை என்ற விடயத்தை நாம் இங்கு எடுத்துக் கொண்டதன் காரணம் எல்லாம் தமிழர்கள் ஆகிய எங்களுக்கும் ஏதோ ஒரு சாபம் உண்டு என்பதைக் கூறத்தான்.

ஆம், விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய போது, வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி தரலாம் என்று ஆளுந் தரப்புக் கூறிக் கொண்டது. அதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்ததாயினும் முடிவு தோல்வியாயிற்று.

விடுதலைப் புலிகளுடனான போரில் ஆளுந் தரப்பு வெற்றி கண்டபோது வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது. தேவையாயின் வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனி தேர்தல் நடத்தலாம் என்று கூறி கிழக்குக்கு முதலில் தேர்தல் நடக்கலாயிற்று.

வடக்கில் தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை என்றபோது, எதற்காக மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டதோ அந்த நடைமுறை சேர வேண்டிய இடத்தில் சேராமல் காலம் கடத்தியது.

இதன்போது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி வைக்க,

தேர்தலில் எவரும் எதிர்பார்க்காத வெற்றியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றபோது வடக்கில் தமிழர் ஆட்சி என்று பேருவகை கொண்டோம்.

ஆட்சிக் காலம் காலாண்டைக் கடந்தபோது எங்களுக்கு எதுவுமே சரிவராது என்பதை புரிந்து கொண்டோம். இதன்போதுதான் எங்களுக்கு ஒன்று விளங்கியது.

காசிக்குச் சொல்லும் பலன் காகங்களுக்கு இல்லாதது போல எங்களுக்கும் ஆட்சி கிடைத்தாலும் அழுது புலம்புவதுதான் எங்களுக்கான சாபம். மேலும் என்ன செய்வது! காகத்திற்கு வசிட்டர் சாபம் இட்டார். ஈழத்தமிழர்கள் ஆகிய எங்களுக்கு சாபம் இட்டவர் யார்? என்பதுதான் இப்போது தெரியப்படாத விடயமாய் தொக்கி நிற்கிறது.

# எமது இனம் விடுதலை பெற பலமான ஆயுதம் கல்விதான்!

## மண்டேலா நினைவு நிகழ்வில் இராசகுமாரன் தெரிவிப்பு

எமது இனம் விடுதலை பெறுவதற்கு, நாம் எமது கல்வியினை வளப்படுத்தி தென்னாபிரிக்க விடுதலை வீரன் நெல்சன் மண்டேலாவின் வழியில் போராட வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அமிர்தலிங்கம் இராசகுமாரன் தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா கறுப்பின மக்களின் விடுதலைக்காக போராடியவரும் கறுப்பின மக்களின் முதலாவது ஜனாதிபதியும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவருமான அமரர் நெல்சன் மண்டேலாவின் அஞ்சலி நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் மதியம் 12.15 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றது.

இவ் அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஞ்சலி செலுத்துவதென்பது எமது கட்டாய கடமையாகும். ஏனெனில் நாங்களும் தென்னாபிரிக்க மக்கள் போன்று அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களே!

மண்டேலா தன்னை சட்ட மேதையாக ஆக்கிக் கொண்டு தமது மக்களின் உரிமைக்காக போராடிய போது அவர் சிறைப்படுத்தப்பட்டு இறுதியில் தேசத்துரோகி என பட்டம் சூட்டப்பட்டார்.

உலகமே எதிர்பார்த்தது தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவிற்கு மரண தண்டனை விதிக்கப்படும் என. ஆயினும் அவருக்கு மரண தண்டனை நீக்கப்பட்டது. எனினும் வாழ்வும் சாவும் மேலானது என மண்டேலா கூறியி ருந்தார்.

அவர் வாழ்வினையும் சாவினையும் எளிதாகவே எடுத்துக் கொண்டார். தன்னுடைய மக்களுக்காக உயிரிழப்பதை அவர் உயர்வாக எடுத்துக் கொண்டார்.

அவர் சிறையிலடைக்கப்பட்ட போது பலர் அவரினை விடுதலை செய்ய வேண்டுமென கூறினார்கள். இறுதியில் ஐ.நாவும் விடுதலை செய்யுமாறு கூறியிருந்தது.

இதன்பின்னர் அன்றைய தென்னாபிரிக்க அரசு நிபந்தனையுடன் கூடிய விடுதலையில் வெளியில் செல்ல அனுமதித்தது.

அதாவது அவரது நடமாட்டத்தை கட்டுப்படுத்தி குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும் அவரை நட மாடுமாறு கூறியது.

அமரர் மண்டேலா அவர்கள் அதனை மறுத்தார். அவர் அன்று தனது விடுதலைக்காக அதனை மறுத்திருக்காவிட்டால் இன்று தென்னாபிரிக்க மக்களுக்கு சில வேளை விடுதலை கிடைத்திருக்காது.

இறுதியிலே அவர் வெற்றி பெற்றார். சிறையிலிருந்து விடுதலை பெற்றதும் தென்னாபிரிக்காவின் முதலாவது ஜனாதிபதியானார். 1993 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது.

அப்படியான பெருமை பெற்றார். அவரிடமிருந்த பெருந்தன்மை, தன்னினத்தை நசுக்கியவர்களிடம் எதிர்ப்பு காட்டவில்லை. நட்புடன் பழகினார். அனைவரினையும் அரவணைத்து சென்றார்.

இங்கு பலரோ தாங்கள் வெற்றி கொண்டு விட்டோம் என்று இறுமாப்பு கொண்டதுடன் வெற்றிக்களிப்பு கொண்டாடியதுடன் தொடர்ந்தும் நசுக்கப்படுகின்ற நிலைமை தான் காணப்படுகின்றது.

மிகவும் பலமான ஒரு ஆயுதம் கல்வி தான் என மண்டேலா அவர்கள் தனது இறுதி நாட்களின் போது கூறியிருந்தார்.


இன்று நாங்கள் கல்வி சமூகம் கூடியிருக்கின்றோம். எமது இனத்துக்கு விடு தலை காண மண்டேலா வழியில் செல்வோம்.

எமது கல்வியினை வளப்படுத்தி எமது விடுதலைக்கு வழிகாண மண்டேலா வழியில் போராடு வோம் என்றார் அவர்.

(செ-4)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### பட்டது பட்டேற்றும்



பட்டது பட்டேற்றுமென்று
பட்டினத்தார் சொன்னாரெடி- தங்கம்
இருந்தபடி யிருக்குதெடி

பொறியஞ்சும் வென்றவர்தம்
பூஷணமா யுள்ளதெடி- தங்கம்
நெறியா யிருந்திடெடி

# இறைவனின் ஆட்சியையும் ஏற்புடையவற்றையும் நாடுவோம்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

கிறிஸ்மஸ் விழாவின் உண்மைப் பொருளை உணர்வதற்கு நமக்குத் தரப்பட்டுள்ள ஒரு நல்ல காலமே திருவருகைக காலமாகும். வீட்டு அலங்காரம், புத்தாடைகள், வண்ண விளக்குடன் கூடிய விண மீன்கள், கிறிஸ்மஸ் மரம், பரிசுகள் என்று வியாபார உலகம் காட்டும் வழியில் இந்த வருகைக் காலத்தை நாம் இந்நேரம் ஆரம்பித்திருந்தால், அவற்றைச் சற்று நிறுத்திவிட்டு, கிறிஸ்மஸ் விழாவின் பொருளை உணர முனைவோம்.

1988இல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நியூயோர்க் மாகாணத்தில் ஸ்டாட்டான் ஐலண்ட் எனும் இடத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது. ஏதோ ஒரு காரணத்தால் ஒரு கோவிலைப் புழக்கத்திலிருந்து நிறுத்தியிருந்தார்கள். இதனால் அது பாழடைந்து போய்விட்டது. அதைப் புதுப்பித்துத் திருவழிபாடு தொடங்க வேண்டுமென்று ஓர் இறைபணியாள

### பரமபிதா காட்டிய பாதை

ருக்கு உத்தரவு வந்தது. அதிலும் கிறிஸ்து பிறப்புவிழாவன்று தொடங்க வேண்டுமென்று திட்டம். அவர் தங்கியிருக்கும் இடம் தூரம் என்றாலும் இங்கு வந்து அக்கோவிலை பழுதுபார்க்கும் வேலையைத் தொடங்கினார். மார்கழி 22ஆம் திகதிக்குள் எல்லாம் தயாராகிவிட்டது. ஆனால், அன்று பலத்த மழை, பனியும் பொழியத்தொடங்கிவிட்டது. மீண்டும் பழுது ஏதேனும் ஏற்பட்டிருக்குமோ என அதைப்பார்க்க வந்த இறை பணியாளருக்கு நடந்திருந்ததைக் கண்டு அதிர்ச்சி.

பீடத்தை அரவணைப்பதுபோல் இருந்த சுண்ணாம்புக்கலவை பெயர்நது விழுநதிருந்தது. பார்ப்பதற்குக் கண்ணை மிகவும் உறுத்தியது. இப்போது என்ன செய்வது? மீண்டும் பூச முடியாது. ஒரு பெரிய துணியாவது தொங்கவிட்டு அதை மறைக்கலாம். இவ்வாறு யோசித்து கடைகளை நோக்கிப் போனார். துணிக் கடைகளில் தகுந்த அளவுக்குப் ஒரு துணியை அவரால் காணமுடியவில்லை. ஆனால் பழைய துணித்துண்டுகள் விற்கும் கடையில் ஒரு துணியைக் கண்டார். [illegible] விரிபபு போலிருந்த அத்துணியில் பின்னப்பட்ட உருவம் அகலமான ஒரு சிலுவை. அதன நிறமும் இளம் ஊதா. அத்துணியை வாங்கி மீண்டும் கோயிலுக்கு சென்று விழுந்த இடத்தை இத்துணியால் மறைத்தார். பின்பு இரவு நேரமுமாகிவிட்டதால் வீட்டுக்குக் கிளம்பினார்.


மறுநாள் காலை பனிமூட்டம் குறையாமலிருந்தாலும் தான் தொங்கவிட்ட துணி சரியாக இருக்கிறதா எனப் பார்க்கக் கோவிலுக்கு வந்தார். அத்துணி சரியாக தொங்கிக்கொண்டிருந்தது. கோவில் வளாகத்தைத் தாண்டி காரில் வெளியே வரும் போது வீதியோரத்தில் வயது முதிர்ந்த ஒரு பெண் நின்று கொண்டிருந்தார். காரை, நிறுத்தி அப்பெண்மணியிடம், பஸ்ஸ"க்காகக் காத்திருக்கிறீர்களா?" எனக்கேடடார்.

"ஆமாம். இப்போதுதான் வண்டி வந்தது. ஆனால், நான் இங்கே நின்று கொண்டிருப்பதை பஸ் சாரதி பனிமூட்டத்தில் கவனிக்கவில்லை போலிருக்கிறது. நேரே சென்றுவிட்டார். அடுத்த பஸ் வர இன்னும் முக்கால் மணி நேரம் ஆகுமா?" ஆமாம்மா. மழையிலேயும் குளிரிலேயும் இன்னும் முக்கால் மணி நேரம் ஏன் நிற்க வேண்டும்? என்னோடு வாருங்கள்.

கோவிலில் உட்கார்ந்திருங்கள். குளிராவது குறையுமல்லவா? கோவிலுக்குள் நுழைந்த அப்பெண் ஆலயப் புதுப் பொலிவைப் பார்த்தார. பீடத்தின் பக்கம் கண் திருப்பினார். அருகில் சுவற்றில் தொங்கிய துணியையும் கவனித்தார். அவர் கண்கள் வியப்பால் பெரிதாகின. நேரே அத்துணி அருகே வந்தார். அத் துணியில் பின்னியிருந்த சிலுவையைக் கண்டார். அவர் பார்வை அத்துணியின் கீழ் வலது மூலைக்குச் சென்றது. வியபபால் விரிந்த தன் வாயை கையால் பொத்திக் கொண்டார்.

இறை பணியாளருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இந்தத் துணியை ஏற்கனவே பார்த்திருக்கிறீர்களா? இந்த எழுத்துக்கள் பற்றியும் ஏற்கனவே தெரியுமா? என்றுகேட்டார்.

அப்பெண் தன் கதையைச் சொன்னார். நானும் என் கணவரும் ஜேர்மனியைச் சேர்ந்த யூத கிறிஸ்தவர்கள். என் கணவர் பிறந்த நாளுக்கு என் பெயரின் மூன்றுஎழுத்துககளையும் சேர்த்து ஒரு சிலுவை போன்றஉருவத்தையும் பின்னித்தைத்து அவருக்கு அன்பாய்க் கொடுத்த ஒரு மேஜ்ச விரிப்பு தான் இது.



அத்துணியின் வரலாற்றைக் கேட்ட இறைப்பணியாளர் அப்பெண்ணே அத்துணியை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார். "வேண்டாம். என் கணவருக்கு இல்லாத துணியானாலும் கோவிலை அலங்காரம் செய்யும் அந்தஸ்து அதற்குக் கிடைததிருக்கிறது. இங்கேயே இருப்பது தான் நல்லது" என்று அப்பெண் கூறினார்.

24ஆம் திகதி இரவு கிறிஸ்து பிறப்பு. வயதான ஒருவர் மட்டும் முன் வரிசை இருக்கையில் அமர்ந்து பீடத்தருகே சுவற்றில் தொங்கும் துணியையே உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது வியப்பாய் இருந்தது. அருகில் வந்தார். நீங்கள் போகவில்லையா?" என்றார் இறைபணியாளர். போக வேண்டும்தான். இந்தத் துணி... இந்தத்துணி?" மேலே வார்த்தைகள் வரவிலலை.

"இதைப பார்த்திருக்கிறீர்களா?" அம்முதியவர் தன் கதையைச் சொன்னார். முந்தைய நாள் அப்பெண் கூறிய அதே கதைதான்.

இவர் தான் அப்பெண்ணின் கணவர் என்பதை உணர்ந்த இறைபணியாளர் அப்பெண்ணின் வீட்டிற்கு கொண்டு சென்றார். அப்பெண் பல ஆண்டுகளாகப் பார்க்க முடியாத கணவரைப் பார்க்கிறார். இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

குழந்தை இயேசு இவர்களுக்கு ஆசீர்வாதத்தைப் பொழிந்தார். அனைத்திற்கும் மேலாக இறைவனின் ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுவோம். அப்போது அனைத்தும் எங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவில் தொடரும் டோனி அன் கோவின் சோகம்




டோனி தலைமையிலான இந்திய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டி மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

ஏற்கனவே ஒருநாள் தொடரை இந்திய அணி 2:0 என்ற கணக்கில் இழந்துள்ளது.

ஜோகன்னஸ் பேர்க்கில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் 141 ஓட்டங்களாலும் டேர்பனில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் 134 ஓட்டங்களாலும் இந்திய அணி படு தோல்வி அடைந்தது.

தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தில் இந்திய அணியின் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு மிகவும் மோசமாகவுள்ளது என்று தான் சொல்ல வேண்டும்.

சர்வதேச ஒருநாள் தரவரிசையில் இந்திய அணி முதலாமிடத்தில் இருந்தாலும் இந்திய அணி தனது சொந்த மண்ணிலும், ஆசிய மண்ணிலும் ஒருநாள் போட்டியில் ஒரு சில காலமாக ஆதிக்கம் செலுத்திவந்தாலும் தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மண்ணில் தனது ஆதிக்கத்தை செலுத்த முடிவதில்லை.

கடைசியாக இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன் லீக் கிண்ணத்தை இந்திய அணி வென்றிருந்தாலும் வெளிநாட்டுக்கு இடையிலான சுற்றுப் பயணத்தில் இந்திய அணி தொடரை வென்றதே இல்லை என்பது தான் கடந்த கால பெறுபேறுகளில் இருந்து அறிய முடிகின்றது.

இந்த வருடம் டோனி தலைமையிலான இந்திய அணி ஒருநாள் போட்டியில் அசத்தியுள்ளது குறிப்பாக துடுப்பாட்டமே கைகொடுத்துள்ளது. டோனி, கோலி, ரோகித் சர்மா, தவான், ரெய்னா என அதிரடியால் தனது சொந்த மண்ணில் துடுப்பாட்டத்தில் அசத்தியது.

ஆனால், பந்துவீச்சைப் பொறுத்தவரை மோசமான பதிவுகளாகத் தான் உள்ளன.

சமீபத்தில் நடந்த போட்டிகளில் இந்திய அணி பந்துவீச்சில் 9 முறை 350 ஓட்டங்களுக்கு மேல் கொடுத்துள்ளது. குறிப்பாக கடைசி 10 ஓவர்களில் 100 ஓட்டங்களுக்கு மேல் கொடுத்துள்ளது.

தென்னாபிரிக்க மண்ணில் கடந்த 21 ஆண்டுகளாக இந்திய அணி ஒருநாள் தொடரை வென்றதில்லை. இம் முறையும் இந்திய அணிக்கு ஏமாற்றமே கிடைத்தது.

தென்னாபிரிக்க அணியை பொறுத்தவரை அவ் அணியின் வீரர் குயின்டன் டிகொக் முதல் இரண்டு போட்டியிலும் (135, 106) சதம் அடித்திருந்தார். மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் அவர் அபாரமாக ஆடிச் சதம் அடித்தார். ஆனால் போட்டி மழையால் இரத்தானது.

இதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து 3 ஆட்டங்களில் சதம் அடித்த இரண்டாவது வீரர் என்ற பெருமையை பெற்றார்.

குயின்டன் சதம் குறித்து இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா தெரிவிக்கையில்,

குயின்டன் சதம் அடித்தது அதிர்ஷ்டம் தான். மூன்று போட்டிகளிலும் இவர் அடித்த பந்துகள், களத்தடுப்பாளர்களுக்கு இடையில் பறந்து சென்றதாக சர்மா தெரிவித்தார்.

இந்நிலையில் சர்மாவின் கருத்துக்கு குயின்டன் நான் அதிர்ஷ்டக்காரன் தான் என பெருந்தன்மையாக கூறியிருந்தார்.

உண்மையில் அதிர்ஷ்டக்காரர்கள் யார் என்பதைகிரிக்கெட் வல்லுநர்கள் விமர்சித்துள்ளனர்.

மூன்றாவது ஒருநாள் போட்டியில் குயின்டன், டிவிலியர்ஸ்சின் அபார சதம் மூலம் தென்னாபிரிக்க அணி 301 ஓட்டங்களை குவித்திருந்தது.

இந்திய அணி துடுப்பெடுத்தாட மழை குறுக்கிட்டதால் போட்டி இரத்தானது.

இப்போட்டி நடைபெற்றிருந்தால் தென்னாபிரிக்கா 3:0 என்ற கணக்கில் தொடரை முழுமையாக வென்றிருக்கும் என்பது தான் உண்மை.

சர்மாவை பொறுத்தவரை அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஒரு ஓவரில் 30 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து தனது மோசமான பந்துவீச்சை பதிவு செய்திருந்தார்.

அணியில் இருந்து கொண்டே போட்டியில் வாய்ப்புக் கிடைக்காமல் திணறி வந்தார். கடைசியாக நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான ஒருநாள், டெஸ்ட் போட்டியிலும் ஓரங்கட்டப்பட்டிருந்தார்.

கடைசியில் தொன்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 4 விக்கெட்டினை கைப்பற்றியிருந்தார். சர்மா தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது போட்டியில் 4 விக்கெட்டினை கைப்பற்றியது சர்மாவின் அதிர்ஷ்டம் என கிரிக்கெட் வல்லுநர்களின் கருத்தாகும்.

இந்தியா – தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 2 டெஸ்ட் தொடரில் முதல் டெஸ்ட் எதிர்வரும் 18 ஆம் திகதி ஜோகன்னஸ் பேர்க்கில் நடைபெறவுள்ளது.

டெஸ்ட் போட்டியை பொறுத்தவரை தென்னாபிரிக்க அணி உலகின் முதல் நிலை அணியாகதிகழ்கின்றது. அவ் அணி தனது சொந்த மண்ணிலே விளையாடவுள்ளது.

தென்னாபிரிக்க அணியை பொறுத்தவரை கலீஸ், ஸ்மித், அம்லா, டிவிலியர்ஸ், ஸ்ரேயின், மோர்கல் என அவ் அணியின் முன்னணி வீரர்களே இம்முறை விளையாடவுள்ளனர்.

இந்திய அணியை பொறுத்தவரை அணித் தலைவர் டோனி, சகீர்கான் ஆகியோரே டெஸ்ட் போட்டியில் வெளிநாட்டு மண்ணில் அனுபவமான வீரர்கள். ஏனைய அனைவரும் வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் போட்டிக்கு புதுமுக வீரர்கள்.

சச்சின், டிராவிட், லக்ஸ்மன் ஓய்வுக்கு பின் இந்தியா முதன்முதலாக வெளிநாட்டில் டெஸ்ட் போட்டி விளையாடவுள்ளது.

டெஸ்ட் தொடரில் பங்கேற்க இந்திய அணி ஐந்து முறை தென்னாபிரிக்கா சென்றது. இதில் நான்கு முறை (1992 - 93, 96 - 97, 2001, 06 - 07) தொடரை இழந்தது. ஒரு முறை (2010 - 11) போட்டி சமநிலையானது.

இந்நிலையில் இது குறித்து அணித்தலைவர் டோனி கூறுகையில், ஒருநாள் தொடரை இழந்ததன் மூலம் நிறைய பாடங்கள் கற்றுக் கொண்டோம். டெஸ்ட் போட்டியில் கலக்குவோம் என கூறியிருந்தார்.

இம்முறை நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டி தென்னாபிரிக்காவுக்கு எவ்வித சவாலையும் கொடுக்க போவதில்லை. மாறாக இந்திய அணிக்கே கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

க.மதீசன்

வலம்புரி SPORTS
G. Matheisan
விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் பயிற்சி முகாம்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஒழுங்கமைப்பில் இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் நாளை திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்று இடம்பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நடைபெறும் இந்தப் பயிற்சி முகாமில் பாடசாலைகளின் கிரிக்கெட் பயிற்றுநர்களும் ஏனைய கிரிக்கெட் பயிற்றுநர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மைலோ வெற்றிக் கிண்ண காற்பந்து போட்டி அன்ரனீஸ்,மேரிஸ் இறுதிப் போட்டிக்கு தெரிவு

மைலோ கிண்ண காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிக்கு பாஷையூர் சென்.அன்ரனீஸ், நாவாந்துறை சென்.மேரிஸ அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் நெஸ்ரில் நிறுவனத்தின அனுசரணையிலான "மைலோ கிண்ண" காற்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வந்தன. பருத்தித்துறை பிரதேச அணிகள் ஒரு பிரிவாகவும், யாழ். வலிகாமம் அணிகள் ஒரு பிரிவாகவும் போட்டிகள் நடைபெற்றன.

இரண்டு பிரிவுகளிலும் தலா 4 அணிகள் தெரிவு செய்யப்பட்டு அந்த அணிகளுக்கிடையில் காலிறுதிப் போட்டிகள் யாழ். மாவட்ட ரீதியில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் விண்மீன் அணியினை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனீஸ் அணி மோதியது. இதில் சென். அன்ரனீஸ் அணி 2:1 என்ற கோல்



கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (13) காலை இடம்பெற்ற போது, நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் ஊரெழு றோயல் அணியும மோதின. போட்டி நேரத்தில் இரு அணிகளும தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தன.

போட்டியின் வெற்றியாளரினைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டபோது, சமநிலை தவிர்ப்பு உதையில் சென்.மேரிஸ் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாகிஸ்தானை வீழ்த்தியது இலங்கை

இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட இருபது-20 சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளது.

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 12 ஓவர்களில் 100 ஓட்டங்களைப் பகிர்ந்த இலங்கை அணி, அதன்பின்னரும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி 211 ஓட்டங்களைக் குவித்திருந்தது.



துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குசால்பெரேரா 59 பந்துகளில் 84 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 33 பந்துகளில் 48 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 21 பந்துகளில ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும், சீக்குகே பிரசன்ன 8 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 4 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

212 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்று 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் 1-1 என்ற கணக்கில்சமநிலையில்முடிவடைந்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் குசால் பெரேராவும், இத்தொடரின் நாயகனாக பாகிஸ்தானின் ஷகிட் அப்ரிடியும் தெரிவாகினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் இலங்கை அணி இருபது-20 சர்வதேசப் போட்டிகளின் தரப்படுத்தலில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் சிக்கி சிப்பாய் பலி

(மன்னார்)

மன்னார் மாந்தை பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் கெப் வாகனத்தை செலுத்தி வந்த இராணுவ வீரர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பெரிய மடுவில் இருந்து மன்னாருக்கு சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்தும், தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து மாந்தை வீதியூடாக சென்று கொண்டிருந்த இராணுவ கெப் ரக வாகனமும் நேருக்குநேர் மோதியதிலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மேலும் குறித்த வாகனத்தில் இருந்த மேலும் இரு இராணுவ வீரர்கள் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(நெல்லியடி)

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையில் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் தலைவராக நெல்லியடி சனசமூக நிலைய தலைவர் சு. கிருஸ்ணராஜா அவர்களும் பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் அ.அரியரத்தினம் அவர்களும் சிறப்பு விருந்தினராக நெல்லியடி கிராம அலுவலர் ஐ.சசிக்குமார் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-11)

## ஹயஸ் மோதி...

மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை பின்னால் வந்த ஹயஸ் வாகனம் மோதியதாலேயே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக இவ் விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனா.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று இரவு 8.40 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-11)

## ஐ.நாவுக்கு விளக்க...

பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு விளக்கம் அளிக்கும்படி இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியதாக தெரிய வருகின்றது.

இத்தன்படி எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடருக்கு முன்னதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஜெனிவா சென்று இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் விளக்கம் அளிக்கவுள்ளார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் அரசாங்கம் சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள வேண்டிவரும் என பிரித்தானியா எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், பொறுப்புக்கூறல் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் சர்வதேச சமூகத்தை சமாளிக்கும் ஒரு நகர்வாகவே அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (எ-11)

## சர்வதேச...

அடேல் பாலசிங்கம், நெடியவன் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ரோம் உடன்பாட்டில் கையெழுத்திடுமாறு வெளிநாட்டில் இருந்த வந்த இலங்கையர் ஒருவர் அரசாங்கத்திடம் கோரியதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை நிராகரித்து விட்டதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

தெற்காசியவில் உள்ள எந்த நாடும் ரோம் உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்றும் திவயின கூறியுள்ளது. (எ-11)

## பாக். கடற்படை...

தியுள்ளார்.

இச்சந்திப்பில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் காசீம் குயூரேசியும் கலந்து கொண்டுள்ளனர்.

படைத்துறை அமைச்சில் இடம் பெற்ற இச்சந்திப்பில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை மீளாய்வு செய்வது தொடர்பில் பாகிஸ்தான் கடற்படைத்தளபதி அட்மிரல் முஹமட அசிவ் சண்டிலாவும், படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஆராய்ந்துள்ளனர்.

இலங்கை கடற்படைத் தளபதியின் அழைப்பின் பேரில் மூன்று பேர் கொண்ட குழுவுடன் விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் கடற்படைத் தளபதி இன்றுவரை கொழும்பில் தங்கியிருக்கவுள்ளார்.

இக்காலப்பகுதியில் இலங்கையின் கூட்டுப்படைத் தளபதி, இராணுவத் தளபதி, விமானப் படைத் தளபதி மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோருடன் இருதரப்பு ஒத்துழைப்புகள் தொடர்பில் அவர் கலந்துரையாடவுள்ளார். (எ-11)

## கோப்பாயில்...

நேற்று மோட்டார் குண்டு ஒன்றையும் ரி-56 துப்பாக்கி ரவைகள் 96 ஐயும் மீட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழில் அண்மைக்காலமாக பல இடங்களில் தொடர்ச்சியாக இவ்வாறான ஆயுதமீட்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

திடீரென இவ் ஆயுத மீட்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதனால் பலரிடையே பலத்த சந்தேகங்களினை இவை ஏற்படுத்தியுள்ளன. (எ-4)

## உடனடியாக அரசியல்...

அறிவோம். அவர் கூறியிருப்பதில் உள்ள ஒரு பிரச்சினை என்னவெனில் அரசியல் கைதிகள், சாதாரண கைதிகள் என யாரும் இதுவரையிலும் அரசினால் அடையாளம் காணப்படவில்லை.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையே அரசியல் கைதிகளாகக் கூறப்படுகின்றது. ஆனால், அது இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. அவர்களுக்குள்ளும் குற்றமிழைத்தவர்கள் உள்ளனர். இந்த நிலையில் இவர்களைக் கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் என எவ்வாறு கூறுவது? இவர்கள் குறித்து ஆராயப்பட்ட பின்னரே எந்தத் தீர்மானத்தையும் எம்மால் எடுக்க முடியும்.

ஆனால், அதேவேளை குற்றங்கள் செய்தமைக்கு ஆதாரங்களின்றி சிறையில் கைதிகள் இருப்பார்களாயின் அவர்களை உடனே விடுதலை செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு அல்லாவிடின் அவர்கள் மீது வழக்காவது தொடர வேண்டும்.

இவ்வாறு ஒன்றுமில்லாது சிறையில் அவர்களை அடைத்து வைத்திருப்பது எம்மைப் பொறுத்த மட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஆகவே இதுவிடயத்தில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்றார். (எ-11)

## காணாமல் ...

சிலர் தகவல்களை வழங்க அச்சப்படுவதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அப்படியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டால் எங்களிடம் மக்களை முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார் மக்ஸ்வெல் பரணகம.

கொழும்பு கொஹுவலை பகுதியில் அமைந்துள்ள இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட பலர் தங்களின் காணாமல்போன உறவினர்கள் தொடர்பான முறைப்பாடுகளை செய்திருந்தனர்.

தங்களின் உறவினர்களை விடுதலைப் புலிகள் பிடித்துச் சென்றதாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த பலர் இங்கு முறைப்பாடு செய்தனர்.

தமது உறவினர்கள் கண்டு பிடிக்கப்படாவிட்டால் தமக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டனர்.

உயிரிழந்த மற்றும் காணாமல்போனவர்களின் பெற்றோர்கள் ஒன்றியம் என்ற அமைப்பு இந்த முறைப்பாடு கையளிக்கும் நிகழ்வில கலந்துகொண்டிருந்தது.

மூன்று ஆண்டுகளாக தென்னிலங்கையில் மட்டும் இயங்கிவந்த தங்களின் அமைப்பு, வடக்கிலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் காணாமல்போனவர்களின் பிரச்சினை நிலவுவதால் அங்கும் சென்று பணியாற்றிவருவதாக அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் ஆனந்த ஜயமான்ன தெரிவித்தார். (எ-11)

## கென்ய ஜனாதிபதி...

காலங்களில் இரு நாடுகளின் மக்களின் நலனுக்காக இரு நாடுகளுக்கு இடையிலான ஆழமான உறவுகளை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தொடரும் என்பதில சந்தேகம் இல்லை.

கென்ய ஜனாதிபதியின் தொலை நோக்கான தலைமையின் கீழ் கென்யா துரிதமான பொருளாதார ரீதியான வளர்ச்சியை பெற்றுள்ளதுடன் நாட்டு மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

கென்யா ஜனாதிபதி உகுரு கென்யாட்டா சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணைகளை எதிர்நோக்கியுள்ளார்.

கென்ய ஜனாதிபதிக்கு எதிரான சர்வதேச நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாக உள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் அவர் கலந்து கொள்ளவில்லை. பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளாத முதல் ஜனாதிபதி .கென்யாட்டாவாகும்.

சர்வதேச நீதிமன்ற விசாரணைகளில் இருந்து கென்யாவை காப்பாற்ற பொதுநலவாயம் தவறிவிட்டது என்ற காரணத்தினால் அவர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நிகழ்கால தலைவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கென்யா நாட்டுக்கு விஜயம் செய்துள்ளமை முக்கியமானதாக கருதப்படுகிறது. (எ-11)

## பிரதமர் பதவி...

விக்கின்றன.

இந்த நிலையில், அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் போயா தினத்தில் விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

போயா தினத்தில் அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை ராஜபக்ஷ அரசாங்கம் நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் உள்ளூராட்சி சபைகளின் வரவு செலவுத் திட்டங்கள் தொடர்ந்தும் தோல்வியடைந்து வருவது, அடுத்து நடைபெறவுள்ள தேர்தல்கள் சம்பந்தமாக இதன்போது கலந்துரையாடப்படும் என கூறப்படுகிறது.

அத்துடன் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரசாங்கத்தின் எதிர்காலம் தொடர்பில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாக பேசப்படுகிறது. (எ-11)




சிதம்பர தரிசனம்

ஆடவல்லானின் திருக்கூத்தை

காரையெம் பதியில் காணலாம்

காரூரும் சோலைகளும் கவினூறும் காட்சிகளும்
நீரூறும் குளமும் நிதமுயரும் புதுவாழ்வும்
ஆறூரும் பேரழகும் அகங்கவர-மிக்குயர்ந்த
தேரூரும் அகலத் தெருக்கள் நிறைந்திருக்கும்
பேரூரே சுந்தரேசன் ஐயனார் அருளூமூர்
திருமுடியோ திரிசடையின்றி உச்சிக் கொண்டையாகும்
ஆரறிவார் ஐம்தொருசுடர் திருவாசி நடுவே
ஆட வல்லான் அருளும் பஞ்சகிருத்திய திருக்கூத்தை

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

இன்று(2013/12/15) ஈழத்துச் சிதம்பரத்தில் 7-ம் நாள் திருவெம்பாவை)

(சி-5731)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

நெடுந்தீவில் நகரப்பகுதியில் பிரதான வீதியோரமாக வைத்திய சாலை, பிரதேச சபை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்பவற்றுக்கு மிக அருகாமையில் 10 பரப்பு உறுதிக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விலை 6 இலட்சம். (பகுதி பகுதியாக பிரித்து விற்கப் படமாட்டாது.)

(4855) தொடர்புகளுக்கு : **0770427564**



# மலேசியாவில்

## சம்பளத்துடனான தொழில் பயிற்சி

நன்மைகள்

- படிக்கும் போதே மாதாந்தம் ரூபா50,000/= வருமான வாய்ப்பு
- தங்குமிட வசதி உணவு, சீருடை வழங்கப்படும்
- மலேசிய மனிதவள அமைச்சின் சான்றிதழ்

எம்மால் இதுவரை அனுப்பப்பட்ட 15 மாணவர்கள் மூலம் எமது நம்பகத்தன்மையை உறுதி செய்ய முடியும்

நாம் வெளிநாட்டிற்கு வேலை வாய்ப்பிற்கு அனுப்பும் முகவர் அல்ல

எமது மாணவர்களை

மலேசிய மனிதவள அமைச்சின் பயிற்சி திட்டத்திற்கு

அனுப்புவதே எமது நோக்கம்

இவ் அரிய சந்தர்ப்பம் முதல் பதிவு செய்யும் 15 மாணவர்களுக்கே



# Mind Vision

Technnology CAMPUS

(இல.4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

யாழ் பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)

**077 933 93 53**



# CAB I, CAB II

BECOME A CHARTERED Accountant?

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில்

**துரித மீட்டல் பயிற்சி வகுப்புக்கள்**

100% சித்திக்கு உத்தரவாதம்

எமது தலைசிறந்த CIMA Qualified Lecturers

ஆரம்பம் 21/12/2013 மாலை 2மணி



# Mind Vision

Technnology CAMPUS

(இல.4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

யாழ் பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)

**077 933 93 53**



# German Institute

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Germany யில் இருந்து வந்த ஆசிரியரால் Goethe Institute examக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.

10, Palaly Road, Jaffna.

ஆரியகுளத்தடி

T.P : 077 160 4823 (4812)



# IPS @ ACCA

The Specialist in Acca Education

Open Day's 21-29 9.00 am

*After A/L's enrol at Sri Lanka's*

## No - 1 ACCA CAMPUS

(i) FIA : FAB, FMA, FFA (O/l தகைமை)

(ii) ACCA : F1 - F9 (A/l தகைமை)

(iii) Exemptions : HNDA / B.Com / BBA பட்டதாரிகள்

| Code | Subjects | Modules | Time |
|---|---|---|---|
| F1 | Accountant in Business | Business Organization | 9.00 - 12.00 |
| F2 | Management Accounting | Cost Allocation & Apportionment | 1.00 - 3.00 |
| F3 | Financial Accounting | Double Entry System | 3.00 - 5.00 |

**மாணவர்களுக்கான சலுகைகள் :**

- வேலைவாய்ப்பு.
- வாகனத்தரிப்பிட வசதி.
- பல்கலைக்கழக சூழலில் விரிவுரை நிலையம்.
- குழுவாக / பிரத்தியேக விரிவுரைகள் வசதி.
- Open Day's காலப்பகுதியில் 50% கட்டணச் சலுகை.
- வசதிக்கேற்ற நேர அட்டவணை - அரச தனியார் துறையினருக்கு மாலை 6.00 P.M - 8.30 P.M விரிவுரைகள்.
- பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றன.

IPS பரீட்சை நிலையம் / பிரித்தானிய கிளையில் தோற்ற முடியும். (C-5785)

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு:**

இணைப்பாளர்,
182, இராமநாதன் வீதி,
(யாழ். பல்கலைக்கழகம் முன்பாக)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :0215670345
e.mail : ipsacca@gmail.com

ACCA The Globel Body for Professional Accountants



# CAMBRIDGE ENGLISH

# PET UNIVERSITY OF CAMBRIDGE

August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞானமுகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விவுரைகளைக கேட்கவும், ஒப்படைகளை எழதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

உடனடியாக : BRITISH Council இன் ஆதரவுடன; 16-12-2013 ல் ஆரம்பிக்கவிருக்கும் Cambridge - Prelimnary English Test (PET)வகுப்பில் சேருங்கள்.

* இது ஓர் **Intermediate B1, Level** பரீட்சையாகும். **U.K** இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன
* நீங்கள் **UK** இல் திருமணம் செய்வீர்களானால் **UK Border Agency** அங்கீகரிக்கும் **A1** பரீட்சைக்குப் பதிலாக **PET Certificate** இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் **PET=B1**
* நீங்கள் **IELTS** பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் **PET** பாட நெறியைப் பின்பற்றிய பின் **IELTS** வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்



**Exam Fee : Rs.8300/=**

**Exam Date: 15-03-2014**

Subjects : Reading, Writing, Listening, Speaking

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழுத, வாசிக்க பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

Course Schedule

| | Mon,Tuse,Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.30-10.30; 10.30-12.30 | 2.00-5.00 |
| Exam fee | Rs.8300 | |
| Exam date | 07-12-2013-Colombo | |

புதிய பிரிவுகள் 16-12-2013 இல் ஆரம்பமாகும்.

# BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna.

(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)

Tel : 075 543 5089 , 077 880 3887 (C-5581)



புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள்

# Jet D Express

## Courier Service




| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 650/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..

*Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

(C-5784)

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்

இல. 27, முதலாம் மாடி,
நவீன சந்தை (குனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301

No. 77E, Manning Place,
Wellawatta, Colombo - 06.
T.P : 0776067599,0776509909



# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

க.பொ.த.(உ/த) 2014 & 15

க.பொ.த.(சா/த) 2014 & 15

முழுமையான பாடத்திட்டத்துடன், கடந்த கால பரீட்சை வினாவிடை என்பவற்றுடன் உச்ச பரீட்சைப் பெறுபேற்றை உறுதிப்படுத்தும் வகையில் கற்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு: 0773616798

## சிகரம் ஊடக இல்லம்

இல.153,பலாலி வீதி ,கந்தர்மடம். (C-5783)



# யாழ்– கொழும்பு முன்னணி நிறுவனங்கள்மற்றும் வர்த்தக மையங்களில்

உடனடி வேலைவாய்ப்புக்கள்

சுயவிபரக் கோவையுடன் டிசம்பர் 21 க்கு முன் நேரில்வரவும்

## சிகரம் தொழில் வங்கி

இல.153,பலாலி வீதி ,கந்தர்மடம்

தொ.பே: 0773616798/ 0212220011

(C-5783)



# ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்கு.

தரமான ஓடுகள் (டபிள் நந்தி மார்க், நூறாணி மார்க், பெப்ஸி மார்க், ஸ்டார் மார்க்) போன்ற ஓடுகள் யாழ், வன்னி ஆகிய இடங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்



தொடர்புகளுக்கு - 077 3818799 (C-5782)



பிரணவன் என்ரப்பிறைசஸ்

இல- 365, பருத்தித்துறை வீதி ...



# நிரந்தர வேலைவாய்ப்பு.

வாழ்க்கை பாதையை உயர்த்திக்கொள்ள கல்வியுள்ள / அற்ற இருபாலாருக்கும் 18000/-, 38000/- வரையான சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு ஆண் - பெண் 18-50. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம் / குளிர்பானம் / டயர் / கிளவுஸ் / தேயிலை / சொக்லட் / பிஸ்கட் / பொலிதீன் போன்றவற்றிற்கு உற்பத்தி / லேபல் / பொதியிடல் பிரிவுக்கு ஆட்கள் தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலையில் தரப்படும். நண்பர்கள் + குழு + தம்பதியினர் ஒரு தொழிற்சாலைகளில்.

(C-5778) தொடர்பு : **0778430179**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.